*A critical commentary*

# PATTINAPPALAI,

BY

**Pandit. R. S. VEDACHALAM,**

*Madras Christian College.*

---

1906.

**Price One Rupee.**

[redacted]ts 1[redacted]

## இவ்வுரை ஆக்கியோரால் இயற்றப்பட்ட

### வேறு நூல்கள்.

ரூ. அ. பை.

1. ஞானசாகர[redacted]முதற்பதுமம்) 2—4—0

2. ,, [redacted]இரண்டாம்பதுமம்)

7-இதழ்கள். 1--12—0

3. முருகர்மும்மணிக்கோவை (இருப்பில்லை)

4. சோமசுந்தரக்காஞ்சி ஆக்கம் ( ,, )

5. முதற்குறள்வாத நிராகரணம் 0—8—0

6. துகளறுபோத உரைமுதலியன. 0--12—0

7. முல்லைப் பாட்டாராய்ச்சியுரை. 0—8—0

8. பண்டைக்காலத்தமிழர் ஆரியர் (கடிதம்) 0--10—0

(கலிக்கா) C--12—0.

# பட்டினப்பாலை ஆராய்ச்சி,

இது

சென்னைக்கிறிஸ்டியன் காலேஜில்

தமிழ்ப்புலமைநடாத்தும்

நாகபட்டினம் - வேதாசலம் பிள்ளையால்

இயற்றப்பட்டு,

U. V. SWAMINATHAIYAR LIBRARY
ANMIYUR, MADRAS

சென்னை,

மிமோரியல் அச்சியந்திரசாலையில்

பதிக்கப்பட்டது.

1906.

All Rights Reserved.

கைமாறு சிறிதுங்கருதாத

பேரருட்பெருக்கத்தால்

எனக்குத் தமிழ்செவியறிவுறுத்திய

என் இயற்றமிழாசிரியர்

ஸ்ரீமத் - வே. நாராயணசாமிப் பிள்ளையவர்களை

நினைந்துருகுதற் பொருட்டாக

இந்நூல் என்னாலெழுதப்படுகின்றது.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 37 | 22 | றிருப்பதாம் | றிருபதாம் |
| 45 | 25 | டெமுந்த | டெழுந்த |
| 46 | 13 | ருத்தற்கு | ருத்தற்குச் |
| 48 | 19-20 | அப்பரதவர் | சுங்கங்கொள்வோர் |
| 53 | 21 | மொகழிளுமே | மொழிகளுமே |
| 79 | 11 | போன்ற | பொன்ற |

# PREFACE.

*"And it was through nature, thus ennobled by a semblance of passion and thought, that he approached the spectacle of human life Human life, indeed, is for him, at first, only an additional, accidental grace on an expressive landscape"*— Walter Pater on Wordsworth.

*Pattinappalai* a Tamil idyll of 301 lines, on which the following is a critical commentary was composed by poet *Rudrankannanar* in the middle of the first century before Christian era. The poem is set up with simple thoughts and choicest expressions that characterise a perfect classic. Further it belongs to the old realistic school of Tamil poetry of the Pandian academy.

It will be seen from the poem that the poet who had had a charming wife whose affections for him were unbounded and whose happiness he sought to maintain by a reflection of the same sentiments on his part, once, made, on account of his pecuniary straits, arrangements to go to *Kaverippumpattinam* which lay very far from his village and pay a visit to the then prince *Karikala-chola*; but when his departure had come to be known by his beloved wife her mind was pierced with dire affliction at the thought of her dear

husband's separation and she became inconsolable therewith. Struck with the sorrowful attitude of his loveliest wife, the poet deferred his journey. And in order to console her he composed this poem in her presence, addressing to his mind of his unwillingness to part with such a charming maiden as his wife whose caresses were as sweet as the reign of *Karikala*, even if it were to preclude him from a rare opportunity of receiving as a gift the richest city of the great Chola monarch. In speaking of this gift, he brings in a vivid picture of the natural and artificial charms presented in the country sides and the town parts of the Chola kingdom and also the glory and victory of the prince *Karikala* in the midst of his broodings over the soft beauty of his wife. How artfully the poet links on to the central idea of this poem the scenic beauty of the large Chola kingdom and the greatness of its reigning monarch is a matter for deep consideration.

In his conception of this vast universe, nature and mind are bound up inseparably. All the natural products constitute, as it were, a perfect receptacle for the soul within. The inner thought-force of the mind vibrates in such a way as to mould the elastic outward matter consistently with its own principles. And so, to admire the outward beauty of nature is to appreciate the intrinsic value of the intelligent element within. Except through the perception of

senses, it is not possible for the individual mind to go deep into the inmost universal intelligence and lie one with it. When one communes with the still life of nature, all his thought-powers that were running before in different channels and wasted, are collected up and converge to one definite point in the universal self which illumines its dim surface of thought and makes it brighter and brighter till its limited area of intelligence is gradually enlarged to an unlimited extent and gone one with its own higher self. Thus a study of nature forms one wholesome element in the old classical poetry of Tamil to which our poet *Rudrankannanar* belongs; as for the study of human mind it conceives that it can be made effectual only in close connection with the former. Sticking, therefore, to this principle of life with an absolute determination of mind, our old poet devotes the main portion of his idyll to portray the rural charms and the sea-coast beauties, and then weaves them all into that part in which his ideal love for his wife stands out in great relief and colours the whole poem with its soft rose-gleam. From this it will be manifest that the poem fascinates the reader's imagination at first with a sensuous beauty, then elevates it higher up and rifines it at last into a purer etherial substance susceptible of reflecting in itself the thoughts coming from an unknown source.

The artistic arrangement of poetic thoughts that find their expression in chaste and simple Tamil words, has been thoroughly studied in the body of his work. And in tracing up link after link the steady development of the poet's central idea through the poem, I have criticised the old commentary of *Nachchinarkkiniar* which gives a distorted meaning of it in an unusual and fantastic manner, and have explained its sum and substance in a more simple and natural way.

The first two portions of this critical commentary were, at the request of the President of the *Mudura Tamil Sangam*, read before the last annual meeting of it, and were very much appreciated by the learned pandit members and others present on that occasion. Having been encouraged at the reception that was accorded to it and to a similar commentary of my own on another classical ode *Mullaippattu* which was published some years ago, I send forth this volume as my humble contribution to the critical literature of my mother tongue which is one of the ancient and highly cultivated languages of the world.

Madras,
25th Sept. 1906.

*R. S. Vedachalam.*

# உரைப்பாயிரம்.

கொழுஞ்சுவை கெழீஇய செழுந்தமிழ் வழக்கில்
உரையும் பாட்டுமென இருதிறனுளவே; அவற்றுள்
உரையெனப் படுவது வரையறை யின்மையிற்
சொற்பல வாகி நற்பொருள் விளக்கி
அறிவுநனி துலக்குங் குறியது வுடைத்தே;
வாட்டமில் சிறப்பிற் பாட்டெனப் படுவது
கரும்புகண் ணுடைத்த விருப்புப்பிழி யிரச
பூழையிற் றுழைஇச் சாறூ டட்டோன்
எரியகைத் தன்ன எழிற்பொற் பாண்டில்
விளிம்புற நிறைத்தாங்கு முதுவாய்ப் புலவோன்
பாவிடைச் சுருங்கிய பயங்கெழு சொல்லிற்
கருத்தொரு மாழ்ந்த காழ்த்தபொருள் பொதிப்ப
வன்பு நெக்குருகும் இசையுடன் றழீஇ
இயற்கையின் வழாஅ லறிவொருங் குறுக்கி
இன்புணர் வெழுப்பி யன்பே யுருவாய்
முழுமுதற் பொருளொடுங் கெழுவிடப் பயக்கும்
ஆறுத் தலைமைப் பான்மைய துடைத்தே;
இத்தகு சிறப்பின் நற்றமிழ்ப் பாக்கள்
பின்றைநாட் காண்டல் பெரிதரி தாயினும்
பண்டைக் காலத்துப் பழுத்தறிவு யாண்ட
நல்லிசைப் புலவோர் வல்லாங்கு கிளந்த
முதிர்கடல் எக்கர் மணலினும் பலவே; அவற்றுள்
ஓம்பா தொழிந்தன போக நாட்பெற
இற்றைநாட் போந்த முற்றுத்தமிழ்ப் பாவுள்
முருகுமுக னிறுத்த அரியன பத்தும்

வாய்ப்பிட லாகாப் பெருஞ்சிறப் பினவே; அவற்றுட்
பட்டினப் பாலையின் முட்டறு மாட்சி
உரைவிளங்க விரித்தற் கறிவிலே னாயினு
முருத்திரங் கண்ணனெனுங் காட்சிசால் புலவன்
திருத்தகு சீரடி உள்ளக மலர்தலின்
அதன்வயிற் றுளும்பிய அறிவுநறை பிலிற்றி
விளங்கிய வுணர்வான் ஒருப்பட்டு
வளங்கெழு மற்றதன் மாட்சி தெரிக்குவெனே.

# பட்டினப்பாலை.

## ஆராய்ச்சியுரை.

## பாட்டினியல்பு.

வேந்தர் பெருமானான சோழன் கரிகாற் பெருவளத் தான் செங்கோலோச்சிய தலை நகரான காவிரிப்பூம் பட்டி னத்தைச் சிறப்பித்துக் கூறு முகத்தால், குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்னும் அகனைந்திணை யொழுக் கத்தில் இடைநின்ற பாலை யொழுக்கத்தை உணர்த்துதற் குப் புகுந்த நல்லிசைப் புலவரான உருத்திரங் கண்ணனார் இப்பாட்டிற்குப் பட்டினப்பாலை யெனப் பெயர் குறித்தரு ளினார்.

இனி இதனாசிரியர் புறத்தே கட்புலனுக்கு உருவாய்த் தோன்றும் பட்டினத்தையும், அகத்தே உயிரினுணர்வுக் குப் புலனாய் அருவாய்த் தோன்றும் பாலை யொழுக்கத்தி னையும் பாடுதற்குப் புகுந்த நுணுக்கத்தை உணருங்கால் இப்பாட்டின் உயர்ச்சி தெற்றென விளங்கா நிற்கும். அரு வாய் அறிவாய் இன்பமா யாண்டும் பரந்து நிற்கும் முழு முதற் பரம் பொருளைக் கறை கெழுமிய அறிவும் முறை தழுவாச் செயலுமுடைய உயிர்கள் அறிந்தனுபவித்தற்கு இருதிறப்பட்ட நிலைகளிருக்கின்றன. அவை அறிவுநிலை உணர்வுநிலை என்பனவாம். இவற்றுள் அறிவுநிலை என் பது காணப்பட்ட வரு[illegible]இவ்வுலகியற் பொருள்களின்

அற்புத அமைதிகளைக்கண்டு இவை தம்மை இங்ஙனம் அமைத்தவனை பேரறிவும் பேராற்றலுமுடைய பரம் பொருள் ஒன்றுண்டென்று அதன் இருப்பு மாத்திரம்அறிவிப்பதாம். மற்று அப்பரம்பொருளின் உண்மைத் தன்மையோ அவ்வறிவுக்கு ஒரு சிறிதாயினும் புலப்படமாட்டாதாம். உயிர்களின் அறிவு, உலகியற் பொருள்களை ஒற்றுமைப்பட்டு அறிதற்குக் கருவிகளான மெய் வாய் கண் மூக்குச செவி என்னும் புறக்கருவிகளைந்தானும், மனஞ் சித்தம் புத்தி யகங்காரம் என்னும் அகக் கருவிகள் நான்கானும் நடை பெறுவதொன்றாம். அகம் புறம் என்னும் இக் கருவிகளின் றுணை கொண்டன்றி அவ்வறிவு வேறு தனித்து நடைபெறக் காணாமையானும், அங்ஙனம் நடைபெறுமிடத்தும் அவ்வறிவாற் பற்றப்படுவன மண் புனல் அனல் கால் விசும்பு என்றற் றொடக்கத்து ஐம்பூதங்களும் அவ் வைம் பூதங்களின் சேர்க்கையாற் பிறந்த பொருட்டன்மைகளுமே யன்றிப் பிறிதின்மையானும், முழுமுதற் பரம் பொருளான கடவுள் இவ்வாறு அறியப்பட்டபொருள்களுள் ஒன்றன்றாய் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டதாய் விளங்குவதொன்றாகலானும் அவ்வறிவுக்கு அப்பரம்பொருள் ஒரு சிறிதாயினும் புலப்படற் பாலதன்றாய் நிற்றல் பெரிதும் பொருத்தமாவதேயாம். இது பற்றியே அறிவு நூல்களெல்லாம் இறைவனை இப்பிரபஞ்சத்துள் ஒன்றாய் வைத்து உடம்பாட்டால் ஓத ஏலாமை தெளியக்கண்டு, இவற்றுள் இதுவுமன்றாய் அதுவுமன்றாய் மற்றெதுவுமன்றாய் அப்பாற்பட்டதென்று எதிர்மறை முகத்தான்வைத்து விளக்குதற்கு மாத்திரம் ஒருப்பட்டுப்

"பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லான்
அந்தமு மாதியில்லான் அளப்பிலனாதலாலே

எந்தைதா னின்னனென்று மின்னதா மின்னதாகி,
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு யார்றமின்
றே" என்றும்.

"அல்லையீ தல்லையீதென மறைகளு மன்மைச
சொல்லிளற் றுதித்திளக்கு மிச்சுந்தான்" என்றும்

"பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்ல வுள்ளமதி யின், பேதங்களல்ல இவையன்றிநின்ற பிறிதல்லவென்று பெருநூல், வேதங்கிடந்து தடுமாறு வஞ்சவெளியென்ப கூடன்மறுகிற், பாதங்கணோவ வளையிந்தனுதி பகர்வாரை யாயு மவரே" என்றும் கூறுவவாயின.

இனி இப்பெற்றித்தான அறிவுக்குப் புலப்படாமை யால்இறைவன் உண்டென்று மாத்திரங்கூறுதலாற்போந்த பயன் என்னையெனின்;—அறிவு நிலைக்கு அவன் புலப்ப டானுயினும் அதற்கு மேற்பட்ட உணர்வுநிலையில் அனுப வப் பொருளாய் விளங்கித் தோன்றுமாகலின் அது கடா வன்றென மறுக்க. அற்றேல், உணர்வு நிலை நம்மனோர்பா லுண்டென்பதற்குப் பிரமாண மென்னையெனின்;-காதற் கிழமையிற் சிறந்தாரிருவர் அவ்வுரிமையினைத் தாங்கருதும் போதெல்லாம் அவரகத்தே ஓரின்பந் தோன்றுதல் அனு பவ மாத்திரையாய் விளங்கக் கிடந்ததொன்றும். அவ்வின் பம் அதுதோன்றப் பெற்றார் தமக்கே புலனுயினல்லது அஃதிவ்வாறிருந்ததெனப் பிறர்க்கு அறிவிக்கவும் உரைக்க வும்படாத இயல்பிற்றும். காணவுங்கருதவு முரைக்கவும் படாத முதல்வனே டொற்றித்து நின்று அவனையனுப வித்தல், அவன் போற் காணவுங் கருதவும் உரைக்கவும் படாத உணர்வுநிலை யொன்றற்கு மாத்திரமேவாய்ப்பதாம். என்னை? அகத்தே தோன்றும் அன்பும் அவ்வன்பே தனக்

ருண்மை யுருவாய்க்கொண்ட பரம்பொருளும் வேறல்லா மையால், அவ்வன்புவாயம்பின்றி இளகிவிரிந்த உணர்வுநிலை யில் அஃதனுபவசித்தமாய் முறுகித்தோன்றல் இன்றியமை யாததாகலின்; இவ்வுண்மை யுணர்ந்தே திருமூலரும்,

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

ஆகவே, முழுமுதற்கடவுளுண் டென்பதனை விளங்க அறிவித்தற்குரிய அறிவுநிலையும், பின் அதனோடு வேறறக் கலந்துநின் றனுபவித்தற்குரிய உணர்வு நிலையு மென்னும் இருதிற நிலையினையும் உயிர்களுக்கு முறுகுவித்துப் பின் அவ்வறிவு நிலையினையுங் கழலச்செய்து சுத்த அன்பு மய மாய் விளங்கும் உணர்வுநிலையை நிலைபே றுக்குவித்து உயிர்களுக்கு அளந்தறியப்படாத பெரும் பயனைத் தருத ற்கு இன்றி யமையாத கருவியாவதுதான் பாட்டென்பது. அற்றேல், உரையுஞ் செய்யுளு மென்னும் இரண்டனுள் உரையும் அவ்விருதிற நிலையும் முறுகுவித்துப் பயன்றரு மாகலின் செய்யுள் மாத்திரமே அதனைப் பயக்குமென் றுரைகூறிய தென்னையெனின்;—பால் கறந்த மாத்திரை யேயுண்பார்க்குஞ் சுவை பயக்குமாயினும், அதனை வற்றக் காய்ச்சிக் கட்டியாகத் திரட்டிப் பின்னுண்பார்க்குக் கழி பெருஞ் சுவை தருதல்போலவும், முற்றின கருப்பங் கழி யை நறுக்கிப் பிழிந்த மாத்திரையே அதன் சாற்றைப் பரு குவார்க்கு அஃதினிமை விளைக்குமாயினும் மேலு மதனைப் பாகு திரளக் காய்ச்சிச் சருக்கரைக் கட்டியாக வடித்துண்

பார்க்கு ஆற்றவும் பேரினிமை பயத்தல்போலவும், உரையும் நலம் பயப்ப தோன்றேயாயினும் அதனைக் காட்டினுஞ் செய்யுளாற் பெறப்படும் பயன் சாலவும் பெரிதாம். கறந்த பால் திரவிய வுருவாய் நெகிழ்ந்திருத்தலின் அதன் கண்ணுள்ள சுவை மிகுந்து தோன்றுது குறைந்தே காணப்படுகின்றது. அதுபோல, உரையும் ஒருவரம்பின்கட்படாது சொற் பெருக்கமுற்று நடை பெறுதலால் அதன்கட் புதைந்த பொருளும் ஆழமாகலின்றி அச்சொற்களோடு ஒத்து ஒழுகி மெல்லிதாய்விடுகின்றது. மற்றுக்காய்ச்சித் திரட்டிய பாற்கட்டியுஞ் சருக்கரைக் கட்டியும் இறுகித் திண்ணென்ற உருவுடையவா யிருத்தலின் அவற்றின்கட் சுவை மிக முதிர்ந்து தோன்றுகிற்கின்றது. அதுபோலச், செய்யுளும் எழுத்து அசை சீர் தளை அடி தொடைகளா னமைந்த பாவாய் ஒரு வரம்புட்பட்டுச் சொற் சுருக்க முடைத்தாய் நடத்தலின் அதன்கட் புதைந்த பொருளும் அவற்றோடு ஒப்ப ஒழுகித் திட்பமும் ஆழமும் உடையதாகின்றது. பாட்டெல்லாம் அறிவு நிலையைப் பற்றிக்கொண்டுபோய் உயிர்களின் உணர்வு நிலையை எழுப்பி விடுவதாகும். உரையெல்லாம் அறிவு நிலையைப் பற்றியே நிகழுமல்லது அதன்மேற் சென்று உணர்வு நிலையைத் தொடமாட்டாதாகும். பெரியதோர் மலைமுழைஞ்சினுட் பொன்னும் மணியுஞ் சிதறிக் கிடத்தல் ஓர் வியப்பன்று; ஒருசிறுகற் பிளவிலே அரிய பெரிய முழுமணிகள் அடுக்கடுக்காய்க் கிடந்து எடுக்குந்தோறும் குறைபடா திருத்தலேபெரிதும் வியக்கற் பாலதாகும். சிறிய சிறிய வான்மீன்கள் அகன்ற அவ்வானத்திற் காணப்படுதல் ஒரு வியப்பன்று; அவ்வகன்ற வானும் வேறு மாடமாளிகை கூடகோபுரங்களும் ஒரு சிறிய கண்ணாடியினுட் காணப் படுதலே மிகவும் வியக்கற் பாலதாம். இதுபோலப் பெரிய ஓர் உரையிலே சிலபொ

ருளேனும்பலபொருளேனுங் காணப்பெறுதல் வியப்பினை விளைவியாது; மற்றுச்சிறியவொருபாட்டிலேபலதிறப்பட்ட ஆழ்ந்தபொருளெல்லாம் காணப்படுதலே வியக்கற்பாலதாகின்றது. உரையிலே ஒருவரையறை யின்மையினாலேபொருட்கு வேண்டுவனவும் வேண்டாதனவுமான பலசொற்கள் நிரம்பிநின்று வியப்பினைத்தாராவாய்த் தாமெடுத்தபொருளைமாத்திரம் எம்மறிவுக்குப் புலங்கொளவிளக்கி யொழிகின்றன. மற்றுச்செய்யுளிலோ பொருட்சாரமானசொற்கள்மாத்திரம் ஆய்ந்தமைக்கப் படுகின்றனவாகலின், அச்சொற்கள் கொண்ட பொருட் கருவை அறியப் புகுவானொருவன் தன் அறிவால் அதனைக் கூர்த்தறிய வேண்டுதலின் அவனறிவு மிக நுணுகுதலோடு அச்சிறிய சொல்லிற்பெரியபொருளடங்கி நிற்றலை அறிந்த மாத்திரையினாலே தன்னையறியாதொரு வியப்புமுடனெய்த அதன்கண் ஓர் இன்பந்தோன்றி அதன் வயப்பட்டுச் சிறக்கின்றான். ஆகவே, பாட்டு ஒன்றுமே உயிர்கட்கு அறிவை விளக்கி அதற்கும் மேற்பட்ட உணர்வை எழச்செய்து இன்பம் பயப்பதொன்றாய் நிலை பெறுகின்றது. உரைப் பயிற்சியில் அறிவு மாத்திரம் விளக்க மெய்துமே யல்லது உணர்வின் வழித்தான இன்பந்தோன்றுதல் இல்லையென்க. அல்லதூஉம், உரையெல்லாம் இயற்கையிலேயே இசைதழுவாது நடப்பனவாமாகலின் அவை உணர்வை எழுப்புமாறு எவ்வாற்றானுமில்லையென்க. பாட்டுகளோ இயற்கையிலே சமயங்களுக்கு ஏற்ற பெற்றி யெல்லாம் பல திறப்பட்ட இசைதழுவி நடக்குமாகலின் அவை உயிருணர்வை எழுப்புதற்கட் பின்னுஞ் சிறப்புடையவாம். என்னை? இசையைக் கேட்டு உருகாதபொருள் உலகத்தில்லையன்றே? உலகானுபவஞ் சிறிது மறியாத மகவை அன்னை தொட்டிலிற் கிடத்தித் தாலாட்ட அஃதவ்விசையா லின்புற்று உறங்கல் கண்டா

மன்றே ? கொடிய விலங்கினங்களும் விஷஜெந்துக்களும் புல்லாங்குழலோசை கேட்டவளவானே தந்தொழில் மறந்து இன்புற்று அவசமழிதல் தெளியப்பட்ட தொன்றன்றே ? இதன்மாட்சி இனிது அறிவுறுத்தற்கன்றே ஸ்ரீமந் மாணிக்கவாசகப் பெருமான் திருச்சிற்றம்பலக் கோவையாரில்

"சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தை
யுள்ளும், உறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமி
ழின், றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்
புக்கோ, இறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்
தெய்தியதே"

என்று திருவாய்மலர்ந் தருளினர். இப்பெற்றித்தான இசை, தானேயும் இன்புறுத்துகின்ற பாட்டோடுஞ் சேருமாயின் அவை யிரண்டின் கலப்பாற் றோன்றும் இன்பம் இவ்வியல்பிற்றென்று குறித்துரைக்கல் ஆகுமோ? எனவே இசையோடு பிணைந்தியங்கும் பாட்டிற்கும் அஃதின்றி யியங்கும் உரைக்கும் உள்ள வேறுபாடும், இவ்விரண்டில் முன்னையது பயன் பெரிதுடைத்தாதலும் பின்னையது பயன் சிறிதே யுடைத்தாதலும் தெற்றென விளங்காநிற்கும். அற்றன்று, உரை நூல்களும் ஒரோவழி வியப்புணர்வு தருவ காண்டுமாகலின் அதனைச் செய்யுளுக்கே வரைந்துகூறியது பொருந்தாதாம் பிறவெனின்;—நன்றுகடாயினாய், ஒரோவோருரைநூல்களின் இடையிடையே பாட்டிற்குரிய சொல் நயம் பொருள் நயங்கள் காணப்படுதலால் அங்ஙனம் அவ்வியப்புணர்வு தோன்றிற்றாகலின் அதுபற்றி ஈண்டைக்காவதோர் இழுக்கில்லை யென்பது. இப்பெற்றிப் பட்ட உரைப்பகுதிகள் சில ஆசிரியர் நக்கீரனார் களவிய

லுரையினிடையிடையே காணப்படும்; அவை கொண்டு இவ்வுண்மை அறியற்பாற்றும்.

இனிப்பாட்டுச் சொற் சுருக்கமும் பொருட்பெருக்க முமுற்று இசைதழுவி நடப்பதனுன் இன்புறுத்துமென்ற அவ்வியல்பை ஒருதாரண முகத்தான் விளக்கவே அஃதி னிது விளங்குமாகலின் மாணிக்கவாசகப் பெருமான் திரு வாய் மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக்கோவையா ரென் னும் களஞ்சியத்திலுள்ள ஒருமுழு மாணிக்கத்தை ஈண் டெடுத்துக் காட்டுவாம்.

"ஆவாஇருவர்அறியாஅடிதில்லையம்பலத்துள்
மூவாயிரவர்வணங்கநின்றோனையுன்னுரின்முன்னித்
தீவாயுழுவைகிழித்ததந்தோசிறிதேபிழைப்பித்
தாவாமணிவேல்பணிகொண்டவாறின்றொராண்டகையே"

என்பது, தன்னுடைய தலைமகள் எவ்வாற்றானுஞ் சிறந்த ஓராண்மகனேடுங் காதல்கொண்டு நேசமாயினதைச் சில குறிப்பாலறிந்த தோழி பின்னும் அவரிருவர் மாட்டும் நிகழ்ந்த அந்நேச வுரிமையினைத் தெளிந்து கொள் ளும்பொருட்டுத் தன்றலைமகளை நோக்கி அவள் நடுங்குதற் கேதுவாவன சில சொல்லி அதனுன் அவ்வுண்மை துணி கின்ற நடுங்கநாட்டம் என்னுந் துறைபற்றிவந்தது இத் திருவாக்கு. இதன்கண் முன்னிரண்டடிகளும் கன்னெஞ் சினையும் இளக்கும் பத்திச்சுவைநிரம்பி முழுமுதற் பொரு ளான சிவத்தின் பெருமை தெரிவியா நின்றன; பின் னிரண்டடிகளும் தோழி தன்மகளை நோக்கி நடுங்கக் கூறி யதைக் காட்டுகின்றன. தலைமகள் 'எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படாத' வடுவில்லாச் சிறந்த குலத்திற் பிறந்து நல் லொழுக்கமே அணிகலனுய்க் கொண்டு போதருகின்று ளாகலின் அவளை நோக்கி 'நீ சிறந்த அவ் வாண்மகனேடு

காதல்கொண்டமை யான்அறிவேன்' என்று கூறுதற்கு மிக அஞ்சியும், அவ்வாறு கூறல் தன் நிலைக்குத் தகா தென நினைந்தும், தலைமக டன்வாயானே அதனை யுரைப் பக் கேட்டலே முறையாமென உறுதிசெய்தும் இச்செய்யு ளில் மிகவுந் திறம்பட அதனை ஆராய்ந்தமை பெரிதும் வியக்கற்பாலதாம். அப்பின் னிரண்டடியின் பொருள் வரு மாறு : 'கண்மணி யனையாய் ! இன்று யான் இம்மலைச் சார லின் வழியே வருவேனாயினேன், அங்ஙனம் வருவேனுக் குச் சிலதூரத்தே கோபத்தாற் றீயை யுமிழும் ஒருபருத்த வேங்கைப்புலி அந்தோ கிழித்தது ! ஆ ! அதனை ஒரு நொ டிப்பொழுதிலே தப்பிப்போய் எவ்வாற்றானுஞ் சிறந்தவ னான ஓர் ஆண்டகை தன் வேற்படையைச் சுழற்றிய திற மையை என்னென்று கூறுவேன் !' என்று தோழி தலை மகளை நோக்கிக் கூறியதாம். இங்ஙனங் கூறியதனைக் கேட்டலுந் தலைமகள் முதலிற் பொறுத்தற்கரிய நடுக்க மெய்திப் பின் சிறிதே அது தணிந்து சிந்திப்பாள் 'என்னை! இம்மலைச்சாரலில் எளியேன்பொருட்டு வந்து இயங்கு வான் என் ஆருயிர்க் காதல னொருவனேயாகும். அவனை யன்றிப் பிற ஆடவர் இங்கு வரப்பெறாரன்றே ! அவன் ஒரு பெரிய வேங்கைப் புலியால் இழுக்க மெய்தினனோ' என்றிங்ஙனமெல்லாம் ஆராய்ந்து வருந்து நிலையிலே ஈண் டுத் தோழி தன் சொற்களை ஐயுறுநிலையிற் கூறிய விரகு நனி வியக்கப்படுந் தன்மைத்து. தன் றலைவி கற்பிற்கு அரசி யாகலானும் மிக நுண்ணிய உணர்வுடையளாகலானும் தன் காதற் கொழுநன் புலிக்கோட்பட்டான் என்பது கேட்டனளாயின் அதுகேட்ட அக்கணத்தே உயிர் துறப் பள் என மிக அஞ்சித் தான் கூறுஞ் சொற்களில் துணிவு பிறவாது ஐயமே நிகழுமாறு கூறினள். 'தீவாய் உழுவை கிழித்தது' என்னுஞ் சொற்றொடர் 'தீவாயையுடைய புலி

மற்றை யொருவிலங்கை நகத்தாற்கிழித்தது' எனவும் 'அவ் வாண்மகனை அல்லது ஒருவிலங்கைக் கௌவுதற் பொருட்டு அப்புலி தன் தீவாயை அகலத்திறந்தது' எனவும், 'வேங்கை தன்வாயாற்கிழித்ததென்றே சொலற்கியைந்த அக்கணத்தே' எனவும் பலபொருடந்து 'அங்ஙனம் அவ் வேங்கை நிற்கும் அக்கணத்தே அவ்விலங்கை அது கிழிப்பதனினின்றும் தவறச்செய்து, அல்லது அது தன்வாயை அகலத்திறந்ததற்குத் தப்பி, அல்லது தன்னைப்பற்றுதற்கு அது வந்ததாக அதனைத்தப்பி அவ்வாண்மகன் தன்வேற் படையை விடுத்து அதனைக் கொன்றவாறு பெரியதோர் வியப்பாயிருந்தது' என்னும் பின் வாக்கியத்தோடு இயை கின்றதாகலின், இவ்வாக்கியத்தைக் கேட்ட தலைமகள் தன் காதலன் இறந்துபட்டான் என்னும் பொருட்டுணிவு அதனாற் பெறப்படாமையின் தானும் இறந்து படாளாய்க் கலக்கமாத்திரம் மிகக்கொண்டு அவ்வாக்கியப் பொருடெளியும் நிலையிலிருந்தாள். அங்ஙனங் கலக்கங்கொண்ட அந் நிலையில் தான் அவ்வாண்டகைமேற் கொண்ட காதலை மறைக்கும் நினைவை மறந்து அக்காதலைத் தன்றோழிக்கு முற்றும் புலப்படுத்தினளாகலின், அவ்வாக்கியப் பொருடெளிந்த பிற்கணத்தே தன் காதல் தோழிக்குப் புலனாயினமைகண்டு பின் அதனை அவட்கு மறையாளாய் உரைப்பாளாவது. இவ்வாறு தன்றலைவியின் நிலை அவடானே புலப்படுத்தற்கென்று தோழிசெய்த சூழ்ச்சியாக மாணிக்க வாசகப்பெருமான் வைத்துக்கூறிய அற்புத ஆற்றலை நினையுங்கால் மக்கள் மனோதத்துவ இயல்புமுற்றும் அவரறிந்தா ரென்பது இனிது விளங்கவில்லையா? இற்றை ஞான்று ஆங்கில நன்மக்கள் செய்துபோதரும் மனோதத்துவ நூலாராய்ச்சிகளெல்லாம் இற்றைக்கு ஆயிரத்தெழுநூறு வருடங்களுக்கு முற்பட்ட நம்பெருமான் திருவாக்கிலமைந்து

கிடத்தல்பற்றி நம்முள்ளம் இறுமாப் பெய்துகின்றது. "ஆவா விருவரறியா" என்னுமிச் செய்யுள் சில்சொல்லிற் பல்பொருடேற்றி அறிவை நுணுகச்செய்து அவ்வாற்றால் உணர்வெழுச்சி பெறச்செய்தல் நன்கு தெளியக்கிடந்தது. இதனோடு இச்செய்யுள் இன்னோசை நலந்தழுவி வாய்ப் புறச் சென்று கேட்டாரை யெல்லாம் இன்புறுத்து மாறும் குறிக்கொளற் பாற்று. இவ்வாறே திருச்சிற்றம்பலக் கோவையாரிலுள்ள ஒவ்வொரு செய்யுட்களும் சொல்வளம் பொருள்வளந் துறுமிமீளிர்கின்றன; இவ்வருமைத் திருக் கோவையாரை யொக்கும் நூல்கள் தொல்காப்பியம் திருக் குறள் என்னுமிரண்டுமே யன்றிப் பிறஎந்நூலும் எக்காவி யமும் இதற்கொப்பாகா. இம்மூன்று நூல்களும் ஒப்புயர் வில்லா உவரா அமிழ்தங்களாம். இத் திருக்கோவையா ரின் சிறப்புணர்ந்தே ஆன்றோர்,

"ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின்
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலிதென்பர்
ஏரணங்காணென்பரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே" என்று அருளிச்செய்தார்.

என்றிங் கெடுத்து விளக்கியவாற்றாற் செய்யுளென் பது சொற்சுருக்க பொருட்பெருக்கமுற்று இசைதழீஇ நடந்து உயிர்களறிவை விளக்கிப் பின் னதன்மேற்பட்ட உணர்வை எழச்செய்யும் பான்மை யுடைத்தாதல் இனிது பெறப்பட்டது.

இனி இப்பட்டினப்பாலை என்னும் அரிய பெரிய பாட்டை அருளிச்செய்த உருத்திரங்கண்ணனார் 'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்' என்னும் முதலடிதொடங்கி முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்' என்னும் இரு

நூற்றுப்பதினென்டாம் அடிகாறும் காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறுமுகத்தாற் பயில்வோர் அறிவை ஒழுங்குபெறச் செய்து விளக்கிக் கொண்டுபோய்ப் பின் அவ்வறிவின் மேற்பட்ட அகவுணர்வை 'வாரிருங்கூந்தல் வயங்கிழையொழிய, வாரேன் வாழியநெஞ்சே' என்னும் இருநூற்றுப்பத்தொன்பதிருநூற்றிருபதாவது அடிகளில்எழச்செய்து,அவ்வாறு இடையிற் கருக்கொண்டஅவ்வகப்பொருளை 'வேலினும் வெய்யகானமவன், கோலினுந் தண்ணிய தடமென்றோளே' என்னும் இப்பாட்டின் இறுதியடிகளோ டிணைத்து முடித்திட்டார். பாட்டியற்றும் நல்லிசைப்புலவர் நம்மறிவை ஒருமைப்படுத்து விளக்குமாறு போற் பிறர் அங்ஙனஞ் செய்யமாட்டுவாரல்லர். நம்மறிவெல்லாம் ஐம்பொறி வழிச்சென்று உலகியற் பொருள்களைப் பற்றிக்கொண்டே நிகழ்கின்றன. அப்பொருள்களை அங்ஙனம் பற்றிக்கொண்டு நிகழ்வழியும் அப்பொருட்டன்மைகளை நுணுகி யறியமாட்டாவா யொழிகின்றன ; இங்ஙனம் ஒரு கணத் தொருபொருளைப்பற்றியும் பிறிதொரு கணத்துப் பிறிதொருபொருளைப்பற்றியும் ஓரிடத்தும் நிலைபெறலின்றிக் குரங்குபோல்ஓடுதலாலன்றோ நம்மறிவு பெருக்கமடைதலின்றி மழுங்கியே கிடக்கின்றது. அறிவே பெருகாது மழுங்கிக் கிடக்குமாயின் அதன்மேற்பட்ட உணர்வு எழப்பெறுதல் ஒருவாற்றானுமில்லையாம். ஆகவே, கறங்கோலைபோல் ஒருவழி நில்லாது சுழன்று திரிதரும் நம்மறிவை ஓர் ஒழுங்குபடுத்துச் சுருக்கிக்கொண்டுசென்று உணர்வை எழச்செய்தலே நல்லிசைப்புலவோர்க்கு இன்றியமையாத கடமையாம்.

இனி அறிவு அங்ஙனம் நிலையின்றித் திரிதலைமறித்து அடக்குவது யாங்ஙனமெனின்;—எங்கே உண்மைத் தன்

மை விளங்கித் தோன்றுகின்றதோ அங்கே நம்மறிவு ஊன்றி நிற்றல் கண்கூடா யறியப்பட்ட தொன்றாம். மானைப்போல் வெள்ளைச்சலவைக்கல்லில் ஓர் உருச்செதுக் கலுறுவான் ஒருகம்மியன் அம்மானின் அவயவஅமைதிகள் தோன்றுமாறே நுணுக்கமாயறிந்து அவற்றைச் சிறிதும் பிறழாமல் உண்மையாகச் சமைத்திடுவனாயின் அவ்வுரு வைக் காண்பார் அறிவு அதன்கண் ஒருப்பட்டு நின்று வியத்தல் கண்டாமன்றோ? ஓவியமெழுதுதலில் மிகவல்ல ராய் விளங்கும் இரவிவர்மர் எழுதும் ஓவியங்கள் எத்துணை நுட்பமாய்உருவ வுண்மையியல் வழாமல் விளங்குகின்றன! பார்மின்! கானகத்திற் சகுந்தலை துஷியந்த அரசன் மேற் கொண்ட காதல் வெப்பம் பொறாளாய்ப் பிரியம்வதை அனசூயை என்னுந் தன்றோழிமா ரிருவருந் தன்னிரு மருங்குமிருப்ப மலர்ப்பாயலிற் படுத்தவண்ணமே தன் காதலை அறிவித்துத் தாமரையிலையில் ஒருசெய்யுள் எழுது தற்குக் கையில் எழுதுகோல் ஏந்தியபடியே ஒருபுருவம் மேல் நெறியக் கவியைச்சிந்தித்தலும், அவள் பக்கங்களிற் பசுத்து அடர்ந்திருக்கும் புன்மேல் பூக்கள் இறைந்துகிடத் தலும், பின்னே ஒருமான் இவர்களைத் திரும்பிப் பார்த்த வண்ணமாய் நிற்றலும், பருத்துயர்ந்த மரங்கள் மிகநெருங் கித் தண்ணிழல் பயந்து நிற்றலும், வலப்பக்கத்திருக்கும் தோழிபக்கத்தே தண்ணீர்க்குடம் ஒன்று நிற்கப் பிறி தொன்று சாய்ந்து கிடத்தலும், அத்தோழிமார் எடுத்து வந்த பூங்கூடைகளில் உருகெழு மருமலர் நிரம்பியிருத்த லும் பிறவும் இயற்கை மாறுபடாமல் எவ்வளவுண்மையாய் எழுதப்பட்டிருக்கின்றன! இவ்வா றுண்மைவழுவா தெழு தப்பட்ட அப்படத்தைப் பார்க்குந் தோறும் நம்மறிவு அதன் வயப்பட்டு நின்று இன்பம்பயத்தல் காண்டுமன்றே? இதுபோல நல்லிசைப்புலவரும், ஒரு நிலையின்றியோடும்

அறிவை ஒழுங்கு பெறுவித்தற்பொருட்டு அவ்வறிவு பற்றிச் செல்கின்ற உலகியற் பொருள்களில் அழகு மலிந்து விளங்குவனவற்றை அவை விளங்குமாறே விரித்துக்கூறி அவ்விரிந்த அறிவைச் சிறிதுசிறிதே சுருக்கிக் கொண்டு போய் அகமுகப்படுத்தி உணர்வெழச்செய்து இன்பத்தின் கண் இருத்துவர். இங்கே ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் புறப்பொருளில் வரையறையின்றிச் செல்லும் நம்மறிவை மடக்கி நிறுத்துதற்பொருட்டு அப்புறப்பொருளுள் மிக்க அழகும் வளனும் நிரம்பித்தோன்றும் காவிரிப்பூம் பட்டினத்தை முதலிருநூற்றுப் பதினெட்டு அடிகள் காறும் உண்மை வழாதுவிரித்து அழகுபெறக் கூறுதல் பெரிதும் பாராட்டற் பாலதொன்றும். பாகன்வசப்படாது கலினத்தை அறுத்துக்கொண்டு மிகவிரைந்துபோம் புரவியை அக்கணத்தே பிடித்து நிறுத்தமுயல்வான் அது கூடாமையின் தானிடர்ப்படுமேயல்லது வேறின்றும்; பின் அதுசெல்லுமாறெல்லாம் விடுத்து அது வலிகுன்றி அயர்ந்த துணையானே அஃது எளிதிலே பாகன்வசப்படுமாகலின், அப்பிற் பொழுதே அதனை யாளுதற்குரிய காலமாம். அதுபோல் உலகியற்பொருளில் வரம்பின்றியே சென்று சென்று பழக்கம் முதிர்ந்த நம்மறிவானது, அவற்றுட் சிறந்தன சிலவற்றிற் பற்றுமாறு செய்தமாத்திரையானே அஃது அப்பழக்கந் தவிர்ந்து அகமுகப்பட்டு ஒருங்குமிடத்து அதற்கு ஆற்றல் சிறிதேயாகலின் அதனை லப்போது பற்றப்படும் அகப்பொருளொழுக்கத்தை "வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய, வாரேன் வாழியநெஞ்சே" என இரண்டடியான் மாத்திரம் மிகச்சுருக்கிக்கூறிய இவ்வாசிரியர் நுட்பவறிவின் வன்மையை என்னென்பேம்! இப்பட்டினப்பாலை முழுவதூஉம் முந்நூற்ருெரடிகளா னமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள் இருநூற்றுத் தொண்ணூற்றேழடி

கலிற்புறப்பொருள் வருணனையும் எனைநான்கடிகளில்மாத்திரம் அகப்பொருளும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாறே திருமுருகாற்றுப்படை முதலிய செய்யுட்களினும் புறப்பொருட் சிறப்பே பெரும்பான்மையாற் கூறிவைத்து எனை அகவுணர்வின் றிறனெல்லாம் மிகச் சுருங்கவே சொல்லப்பட்டன. புறத்தே விரிந்த அறிவெல்லாம்முறை முறையே சுருக்கப்பட்டு அகத்தே சென்றுழி அஃதொன்றின் மாத்திரமே உறைத்து நிற்றலிற் புறப்பொருள்வழியே விளக்கப்படும் அகப்பொருளெல்லாம் மிகச் சுருக்கிக் கூறுதலே மனோதத்துவத்திற்கு இயைந்ததாம். இந்நுட்பஞ் செவ்விதி னறிந்த உருத்திரங்கண்ணனார் அறிவின் மாட்சி அளவிடற்பாற்றன்று.

இனிக், 'கரிகாற் பெருவளத்தான் பகைவர் மேலோச்சிய வேலைக்காட்டினும் யான் செல்ல விரும்பிய கானம் மிகவுங்கொடுமையாக இராநிற்ப, இவள் அகன்ற மென்றோளோ அவன் செங்கோலினுங் குளிர்ந்திருக்கின்றனவாகலின் எ நெஞ்சமே! என் காதலி இங்கே தனியளாயிருப்ப யான்காவிரிப்பூம் பட்டினத்தையே பரிசிலாகப்பெறுவேனாயினும் இவளைப் பிரிந்து வருதற்குஒருப்படேன்.' என்று தன் காதலியைப் பிரிந்து போதற் கெழுந்த தலைமகன் பின் அவளைப் பிரியமாட்டானாய்த் தன் நெஞ்சை நோக்கிக் கூறியதாக இச்செய்யுள் உருத்திரங் கண்ணனாரியற்றப்பட்டது. இதில் 'திருமாவளவன் றெவ்வர்க் கோச்சிய, வேலினும் வெய்யகானமவன், கோலினுந் தண்ணியதடமென்றோளே' என்பதே இப்பாட்டின்முதற்கண் வரற்பாலதா லெனின்;—புறப்பொருளை முன்கூறி அவ்வாற்றால் அறிவை இழுத்துச் சென்றே அகப்பொருட்கட் பதியவைத்தல் வேண்டுமாகலானும், 'பட்டினப்பாலை' என்

னுமிதன் பெயர்க்கேற்ப முதலிற் பட்டினத்தின் சிறப் பைக் கூறிவைத்து அதன்பின்னே பாலையொழுக்கங் கூற ல்வேண்டுமாகலானும் முதலிருநூற்றுப் பதினெட்டு அடி களகாறும் காவிரிப்பூம்பட்டினச் சிறப்பையே கூறுவாராயி னர். அற்றேல், இடையிற்கூறிய "வாரிருங்கூந்தல் வயங் கிழை யொழிய, வாரேன் வாழிய நெஞ்சே" என்னு மிவ்வ கப்பொருளடிக ளிரண்டினையும் இறுதியில் நின்ற 'வேலி னும் வெய்யகானம்' என்பதனோடு சேர்த்துக் கூறுதலே அமையும், என்னை? முதல் இருநூற்றுத்தொண்ணூற்றேழ் அடிகளும் புறப்பொருளே இடையறாது கூறி மற்றை அகப்பொருளெல்லாம் வினை நான்கடியாற் கூறிமுடிப்பது பொருந்து மாகலின் எனின்;—அற்றன்று, முழுவதூஉம் புறப்பொருளே கூறிச்செல்லிற் பயில்வோருணர்வு சலிப்ப டையுமாதலானும், இவ்வுடம்பு உளதாங்காறும் புறப்பொ ருள் வழிச்சென்று மடங்கி அகத்தே குவிந்த அறிவு அவ் வகமுகமாயே யொழியாது திரும்பவும் புறம்படக் காண்டு மாதலானும், புறப்பொருளெல்லாஞ் சொல்லிக்கொண்டு போய் இறுதியில் மாத்திரம் அகப்பொருட்டுறை யுரைப் பின்புறத்தேசென்றுமடங்கி அகத்தேபோய்க்குவிந்த அறிவு மறித்தும் புறம்படாதுபோலு மெனப்பட்டுஇயற்கையோடு முரணுமாதலானும், காவிரிப்பூம்பட்டினச் சிறப்புக் கூறிய பின் அவ்வகப்பொருளைப் பிளவுசெய்து முன்னிரண்ட டியை இடையே வைத்தும் பின்னிரண்டடியைஇறுதியில் வைத்தும் இவற்றின் நடுவே கரிகாற் பெருவளத்தான் வெற்றித்திறம் விளம்பியும் சென்றால் முதற்கட்புறத்தரு வழிச்சென்று அகத்தடங்கிய அறிவு பின்னும் புறம்பட்டுப் போய்ப் பெயர்த்தும் அகத்தடங்கி இங்ஙனம் இயங்கப் பெறு மியல்பின தென்னும் மக்கள் மனவுண்மை நன்கறி யக் கிடக்குமாதலானும், அகப்பொருளடி நான்கனையும்

ஒரு சேர இறுதியில் நிறுத்திக்கூற ஒருப்பட்டிலராய் இடையிலிரண்டும் இறுதியி லிரண்டுமாக வைத்தருளினு ரென்க. அற்றேல், 'வேலினும் வெய்ய' என்னும் இறுதி யிரண்டடியினையும் இடையில் வையாது 'வாரிருங்கூந்தல்' என்பவற்றை மாத்திரம்இடையில் வைக்கவேண்டிற்றென் னையெனின்;—தன் மருங்கிருந்து 'காதற்கொழுநன் பிரி வனே' என ஐயுற்று ஆற்றுளாம் தன் மனையாள் ஐயந்தீர் த்து அவளைத் தேற்றுத லுறுவான் 'வேலினும் வெய்ய கானம்' என்பதனை முதலிற்சொல்வனுயின் 'இப்பெற்றித் தான கானத்திலே என் காதலன் என்னை விடுத்துப்போ யின் எவ்விடர் நேருமோ' என மேலுமேலும் ஆற்றுமை மிக்கு வருந்துவளாகலின் அதனைமுதற்கட் கூறப்பெருன்; மற்று 'இவளைப் பிரிந்து வாரேன்' என்பதனை முதற்கணு ரைப்பின் அது கேட்ட துணையானே இவள் ஆற்றுமை நீங்கி இன்புறுவளாகலின் "வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய, வாரேன் வாழிய நெஞ்சே" என்பதனையே ஆண் டிடைக்கட்படுத்துக் கூறினுர் ஆசிரியர் என்க. அல்லதூஉம் காவிரிப்பூம்பட்டினம் என்னும்புற இடத்தைக் கூறிய யவுடனே அகவிடத்தைக் கூறுதலே பொருத்தமுடைத்தா கலானும் அவ்வாறதனை முன்வைத்தா ரென்க.

இனிக் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக்கூ றிய ஆசிரியர் அதன்கட் செங்கோலோச்சும் அரசன் கரி காற்பெருவளத்தானையுங் கூறல்வேண்டுவது மரபாகலின் இடையில் நிறுத்திய அகப்பொருட் டுறைக்கும் அத்துறை முடிவாய் இறுதியில்நின்ற அடிகட்கும் இடையே யுள்ள சந்துவாயறிந்து அதன்கண் அவ்வரசன் வலத்தைச் சிறந் தெடுத்துக்கூறி இறுதியில்நின்ற அகப்பொருளோடுஇயை புபடுத்துவாராயினர். இங்ஙனமெல்லாம் செய்யுளியற்றும் நுட்பம் முற்றுமுணர்ந் திதனை அமைத்த இவ்வாசிரியர்

உருத்திரங்கண்ணனார் நுட்பவினைத்திறன் 'முல்லைப்பாட்டு' இயற்றியஆசிரியர் நப்பூதனார் நுட்பவினைத்திறத்தோடு ஒப்புமைபெற்று விளங்கித் தோன்றுகின்றது என்க.

---

## பொருட்பாகுபாடு.

### காவிரியாற்றின் சிறப்பு.

#### முதல் 8 வரி.

குடகமலையினிடத்தே தோன்றி என்றும் நீர் அறாது ஒழுகும் இயல்பினதாய்ச் சோழநாட்டை வளம்படுத்து வருகின்ற காவிரியாற்றின் சிறப்பு முதற்கட் சொல்லப்படுகின்றது. மழைவறக்குங் காலத்தில் சுக்கிரன் எனப்படுகின்ற வான்மீன் கீழ்த்திசையினின்று மேற்றிசையிற் செல்லாமல் தென்றிசைப் பக்கமாய்ச் செல்லுமென்பதும், மழைத்துளியைப் பருகி உயிர்வாழ்கின்ற வானம்பாடிப் புள் அது பெறுமையின் அப்போது மிகவாடுமென்பதும், இத்தன்மையாக மழைபெய்யாது மாறிப்போன அவ்வறட்காலத்திலும் காவிரியாறு நீர்வற்றாது ஒழுகிப்போய் வயல் நிலங்களை நிறைத்து அங்கே பொற்றுகளையும் திரட்டித் தொகுக்குமென்பதும் சொல்லப்படுகின்றன.

#### 9-முதல் 19-வது வரி வரையில்,

### சோழநாட்டு மருதநிலவளம்.

வயல்கள் என்றும் மாறாமல் விளைந்துகொண்டிருக்கின்றன. அங்கே கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுகின்ற கொட்டில்கள் பலஇருக்கின்றன. அவற்றில் அதனைக் காய்ச்சும்போது உண்டாகும் தீப்புகைபட்டுப் பக்கத்தே வயல்களில் மலர்ந்த நெய்தற்பூக்கள் வாடுகின்றன. காய்த்த செந்நெற் கதிரை நிரம்பஉண்டு வயிறுபருத்த முற்றின எருமைக் கன்றுகள் ஆங்காங்குள்ள நெற்கூடுகளின் நீழலிலே உறங்கிக்கொண் டிருக்கின்றன. குலை நெருங்கின தென்னை

குலைவாழை பாக்குக்காயையுடையகமுகு பனை முதலிய மரங்களும், மஞ்சள் சேம்பு இஞ்சி முதலிய செடிகளும் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன; என்பது சொல்லப்பட்டது. இதுகாறுங் காவிரி பாயுஞ் சோழநாட்டின் வளம் பொதுவகையாற் கூறி இனிப் பாக்கம் கழி முதலியவற்றின் சிறப்பை விரித்துக் கூறப்புகுதுகின்றார்.

---

## 20-முதல் 27-வரி வரையில்.

### பாக்கம்.

பாக்கங்களிலே அகன்றவீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்வீட்டு முற்றங்களிலே உலரவைத்திருக்குநெல்லுக்குக் காவலாய் இருக்குஞ் சிறுபெண்கள் அழகிய நெற்றியும் கள்ளம்அறியாத பார்வையும் திருந்திய ஆபரணங்களும் உடையர்; இவர்கள் அந்நெல்லைத் தின்னவருங் கோழிகளை வெருட்டும்பொருட்டுத் தங்காதில்அணிந்த மகரக் குழை*எறிய அவை அம்முற்றத்திற் சிதறிக்கிடப்ப அங்கே சிறுபையன்கள் மூன்றுருளையுடையசிறியதேரைக் குதிரையின்றி இழுத்துக்கொண்டுவருகையில், அக்குழைகளில் உருளைகள்பட்டுஇடறி அச்சிறுதேர் போகாமல் நின்றுவிடுகின்றன†. தாம் மனங்கலங்குதற்குக்காரணமானபகை தமக்குச் சிறிதுமில்லாமையால் மனக்கொழுமை யினையுடைய பலகுடிகள் நிறையப் பெற்றிருக்கின்றன அப்பாக்கங்களெல்லாம்.

---

* இக்காலத்தில் இதனைச்சிமிக்கி என வழங்குவர்.

† "பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதகம்
நற்சிறு ரூர்தலினங்கைமார் விரீஇ
உற்றவர்கோழிமே லெறிந்தவொண்குழை
மற்றத் தேருருள்கொடாவளமை சான்றவே" என்றார்
சிந்தாமணியினும்.

## 28 - 39 - படப்பை முதலியன.

இனி ஒன்றற்கொன்று அருகாமையிலுள்ள பல ஊர்களையுடைய நீண்ட சோழநாட்டில் எங்குஞ்சென்று வெள்ளிய உப்பை விலைசெய்து நெல்லை ஏற்றிக்கொண்டு வந்த வலிய படகுகள் பந்தியில் நிற்கும் குதிரைகளைப் போலத் தறிகடோறுங் கட்டப்பெற்றிருக்கும் உப்பங்கழிகள்சூழ்ந்த நெய்தல் நிலத்துத் தோட்டங்களும், மனவெழுச்சி தருதற்கேதுவான புதுவருவாயினையுடைய தோப்புகளும், அத்தோப்புகளுக்குப் புறம்பேயுள்ள பூஞ்சோலைகளும், மேகக்கறை சிறிதுமில்லாது தெளிந்த ஆகாயத்தில் சந்திரனைச் சூழ்ந்து மகநட்சத்திரம் விளங்கினாற் போன்றதாய் மணங்கமழும் பலவண்ணப்பூக்கள் நிரம்பியிருத்தலாற் பலநிறமுடைத்தாய்த் தோன்றும் பொய்கைகளும், இம்மையிலும் மறுமையிலும் காமவின்ப நுகர்ச்சியினைப்பயக்கும் இணைந்த ஏரிகளும், அக்காவிரிப்பூம் பட்டினம் எங்கும் இருக்கின்றன.

## 40-50. சோறிடும் அட்டிற் சாலைகள்.

கதவுகளெல்லாம் புலியுருக்கள் செதுக்கப்பட்டனவாய்த் தம்வாய் பொருந்தப்பெற் றிருப்பத், திருமகளை எழுதிய திண்ணிய மதில்கள் அமைந்து இம்மையிற் புகழ் பரம்புதற்குக் காரணமான நற்சொல்வளரவும் மறுமையினைத் தருதற்குரிய அறவொழுக்கம் நிலைபெறவுஞ் சிறந்த அடுக்களைகளில் மிகுதியாகச்சமைத்த சோற்றை வடித்தலால் ஒழுகுங் கொழுங்கஞ்சியானது யாற்றில் வெள்ளம் வந்தாற்போல எங்கும் பரவி ஓடுவதாயிற்று; அக்கஞ்சியைக்கண்டு பருகுதற்குச்சென்ற எருத்துமாடுகள் ஒன்றோடொன்று சண்டையிடுதலால் அது மண்ணொடுகலந்து சேறாய்ப் பின்தேர்கள் ஓடுதலால் புழுதியாய் மேலெழுந்து

பலவேறுவகையான சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்த வெள்ளிய அரண்மனையின்மேற் படிந்து வெண்ணீற்றிற்புரண்ட களிற்றியானைபோல அழுக்கேறப் பண்ணுவதாயிற்று.

## 51 - 53.

இன்னும் குளிர்ந்த கிணறுகள் பொருந்தப்பெற்ற தாய்ப் பெரிய எருத்துமாடுகள் நிற்கும் பலசாலைகளும், தவஒழுக்கம் நடைபெறும் அமணர் பௌத்தருடைய பள்ளிகளும் ஆங்காங்குள்ளன.

## 53-58. காளிகோட்டம்.

இளமரக்காவில் விளங்கிய சடைமுடி யுடையரான முனிவர் நெருப்பிலிட்டு வேட்கும் நெய்ப்புகையைக்கண்டு மேகமென அஞ்சிய குயிற் சேவல்கள் அச்சோலையி லிருத்தலை வெறுத்துத் தம்பெடைகளோடும் அவ்விடத்தைவிட்டுப்போய்ப் பூதங்கள்காவலாயிருத்தலாற் புகுதற்கு அரிய காளிகோட்டத்திற்சென்று தூதுணம் புறாக்களோடும் ஓர் ஒதுக்கிடத்தே தங்கியிருக்கும்.

## 59 - 74. செம்படவர் குப்பம்.

நெடுநாட்பட்ட மரங்களையுடையதாய்ச் சண்டை யிடுதற்குச் சமைந்த இடங்களும் நீர் அரித்த கரியமணலும் உள்ள அகன்ற மேட்டுக் குப்பங்களில் வசிக்கும் பெரிய சுற்றத்தினையும் இனமான உறவினையுமுடைய வலிய தொழிலாளரான செம்படவர் கடல் இறாமீனின் சுட்ட தசையைத் தின்றும், வயல் ஆமையைப் புழுக்கின இறைச்சியைஉண்டும், வயலிற்படர்ந்த அடப்பம்பூவைத் தலையிற் கட்டியும், நீரில்நின்ற ஆம்பல்மலரைப் பறித்துச் சூடியும், நீலநிறத்தினையுடைய ஆகாயத்தில் வலதுபுறமாய் எழுந்து சுழன்றுதிரியும் நட்சத்திரங்களோடு கூடிய கிரகங்களைப்

போலச் சண்டையிடும் அவ்வகன்ற மன்றத்திற் பலரும் ஒருங்கு இரண்டு கையோடு கைபிணைந்தும் படைக்கலங்களோடு படைக்கலந்தாக்கியும் உடம்போடு உடம்புபட உரைசியும் மிக்க சினத்தோடும் ஒருவர் ஒருவர்க்குப் பின்னிடையாது பெருஞ்சண்டை செய்து அதனுனும் தம் வலியடங்காராய் ஒருவரோடொருவர் மாறுபட்டுக் கல்லை வீசுகின்றனர். அங்ஙனம் அவர் எறியுங் கவண்கல்லிற்கு மிகப்பயந்து பச்சென்ற பனைமரத்தின்மே லிருந்த பறவைகள் பறந்துபோகின்றன.

## 75-77. புறச்சேரியின் தன்மை.

குட்டிகளையுடைய பன்றியும் பலகோழிகளும் உறை வைத்த சிறியகிணறுகளும் இருக்கின்ற அச்செம்படவர் புறச்சேரியிலே ஆட்டுக்கிடாய்களோடு கௌதாரிப் பறவைகள் விளையாடா நிற்கும்.

## 78-105. காவிரித்துறை வருணனை.

நட்டகல்லிற் றெய்வமாய் நின்றவனுக்குக் கேடகத்தை வரிசையாவைத்து வேலைநிறுத்தியவாறுபோல நீண்ட தூண்டிற்கோலைச் சார்த்திவைத்திருக்கும் குறுகின கூரையையுடைய குடியிருப்புகளின் நடுவில், நிலவின்இடையிலே சேர்ந்த இருளைப்போல மீன்வலை யுலரும் வெள்ளியமணல் பரந்த முற்றத்தின்கண், விழுதையுடைய தாழஞ்செடியின் கீழ்வளர்ந்த வெண்கூதாள மலராற் செய்த மாலையை யணிந்தவராய்ச் சினைகொண்ட சுறாமீன் கொம்பைநட்டு அதனையே இருக்குமிடமாக ஏற்றிய வலிய கடற்றெய்வத்தின் பொருட்டாக மடலையுடைய தாழைமலரைச் சூடியும், பொரிந்த மாத்தினையுடைய பனையின் கள்ளைக்குடித்தும், இங்ஙனமெல்லாம் புல்லியதலையினை யுடையரான செம்படவர்

பசிய தழையினை யுடுத்த தம்பெண்டிரோடும் பரந்த பனிக் கடலில் மீன்பிடிக்கவுஞ் செல்லாது அத்தொழிலை விட்டு முழுமதி விளங்கும் உவாநாளிலே தாம்வேண்டுவன உண்டு விளையாடியும், பின் புலால்நாற்றம் வீசுகின்ற மணலை யுடைய பூங்கானற்சோலையில் கரியமலையைப் பொருந்திக் கிடந்த செக்கர் மேகம்போலவும் தாயின் தன்னியத்தைத் தழுவிக்கிடந்த மகவைப்போலவும் தெளிந்த நீரையுடைய கடலோடு காவிரியாறு சென்று கலக்கும் மிகக்குளிர்ந்து முழங்கும் புகார்முகத்தில் தீவினைபோகக் கடல்முழுக்கா டியும், பின் அவ்வுப்புநீங்க வேறுநீரிலே குளித்தும், நண்டு களைப்பிடித்து ஆட்டியும், உலவுகின்ற அலையிற்போய் அத னை உழக்கியும், பாவைசெய்தும், ஐம்பொறிகளானும் நுக ரப்படுவனவெல்லாம் நுகர்ந்துமயங்கியும்அவர்கள் ஒருவரை யொருவர் நீங்காத காதற்கிழமையுடையராய், இவ்வாறு பகற்பொழுதெல்லாம் போக்குதற்குக் காரணமாவதாய்ப் பெறுதற்கரிய பழஞ் சிறப்புகளையுடைய சுவர்க்கநாட்டை ஒப்பதாய் என்றும் பொய்யாமல் நீர் வருதலையுடையதாய்ப் பூக்கள்நிறைந்த காவிரித்துறை விளங்குமென்க.

## 106-115. கடையாம வருணனை.

தங்கொழுநரைப்புணர்ந்த அழகிய மங்கையர் பட்டா டைகளைக் கழற்றி யெறிந்து வெண்டுகில் உடுத்தவராய்த் தேனுண்டலை விடுத்துக் காமவின்பச் சுவைத்தேனை நிறை யஉண்ணுநின்று தங்காதலர் சூடிய மாலையைத் தமதென் றெடுத்துச் சூடிக்கொள்ளவும், தங்காதலிமார் மலைந்த கோதையைத் தமதென்று அவர் காதலர் அணிந்து கொள் ளவுமாக அவர் காமவின்பச் சுவை நுகர்கின்ற உயர்ந்த மாடங்களில் எரியும் விளக்கங்களைப் பார்த்து வளைந்த தோணியைக் கடலிடத்தே கொண்டு சென்ற பரதவர் அவ

ற்றை எண்ணு நிற்பவும், அந்நகரத்தி லுள்ளார் இரவில் முன் யாமத்துப் பாட்டுக் கேட்டும் நாடகம் பார்த்தும் வெண்ணிலவிற் பெறும் விளைாதங்களைத் துய்த்தும் கண் ணுறக்கம் பெற்ற கடையாம மென்க.

## 116—125. சுங்கங்கொள்வோர் நிலை.

அவ்வியாமத்தில் பெரிய காவிரியாறு பலவயினிருந்த பூக்களின் மணமெல்லாம் திரட்டிக் கொண்டுவந்து சேர்க் கும் தூய எக்கர் மணலிலே அயர்ந்து உறங்கிய வண்ண மாய், வெள்ளிய பூங்கொத்தும் மடலும் உள்ள தாழையினை யும் கரையினையுமுடைய அகன்ற பண்டசாலைத் தெருவில் நல்ல அரசனது பொருளைப் பிறர் கவராமற் காக்கும் அடி ப்பட்ட புகழினையுடைய காவற் றொழிலாளர் காயும் சினத் தையுடைய வெங்கதிர்ச் செல்வனை சூரியனது தேரிற் பூட்டிய புரவி ஒருநொடிப் பொழுதாயினும் மடிந்திராது இயங்குதல்போல நாடோறும் இளைப்புறாது சுங்கங்கொள் ளும்படியாக இருப்ப ரென்க.

## 125—141. பண்டசாலை முற்றம்.

குறைவின்றி முகந்த நீரை மேகம் மலையிலே பொழி யவும், மலையிற் பொழிந்த நீர் கடலிற் சென்று பரவவும் மாரிக்காலத்தே பெய்தல் போலப் பிறதேசங்களி லிருந்து கடல்மேல் வந்தன கரையி லேறவும், தமிழ் நாடுகளி லிருந்து வந்து கரையிற் கிடப்பன பிறதேசங்களுக்குப் போகல்வேண்டி நீர்மேல் மரக்கலங்களிற் சேரவும் அறி வான் அளந்தறிதற் கரியவாகவுள்ள பல பண்டங்களும் வரம்பறியப்படாவாறு வந்து தொக அரிய காவலமைந்த பெரிய சுங்கச்சாவடியிலே சோழ மன்னர் அடையாள முத் திரையான புலியை இலச்சினையாக இட்டுப் பின் அவற்றை

வெளியே போக்கினமையால் மதித்தறியப்பட்ட அப்பல பண்டங்களும் பொதிந்து வைக்கப்பட்ட மூட்டைப்போர் மேல் ஏறி மேகங்கள் உலாவப்பெறுங் குவட்டினையுடைய பெரிய மலைப்பக்கங்களிலே விளையாடும் வருடை மான்க ளின் ரேற்றம்போலக் கூரிய நகங்களையுடைய ஆண் நாய் கள் ஆட்டுக்கிடாய்களோடு குதிக்கும் பண்டசாலை முற்ற மென்க.

## 142—158. அங்காடித் தெரு.

அணுகஅணுகப் படிகள் தொடுக்கப்பட்டு அமைந்த ஏணிகள் சார்த்தி யிருக்கும் சுற்றுத் திண்ணைகளும், பல கட்டுகளும், சிறுவாயில் பெருவாயில்களும், பெரிய இடைகழிகளும்* பொருந்தச் சமைக்கப் பெற்றனவாய் மேகங்கள் உராஞ்சும் உயர்ந்த மாடத்தில் சிவந்த அடியினை யும் திரண்டு நெருங்கிய தொடைகளையும் பசிய அணிகலங் களையும் பெரிய நிதம்பத்தினையும் நுண்ணிய ஆடையினை யும் பவளம்போல் நிறத்தினையும் மயில்போற் ரேற்றத்தி னையும் மான்போல் நோக்கினையும் கிளிபோன்ற மழலை மொழியினையும் மெல்லென்ற சாயலினையும் உடையபெண் கள் தென்றற் காற்று நுழையும் சாளரத்தைப் பொருந்தி நின்று, உயர்ந்த மலைப்பக்கத்தில் நுண்ணிய மகரந்தப் பொடியைத் துளிக்கும் காந்தட்செடியின் கணுக்களிலிரு ந்து கிளைக்கும் கவிந்த முகைக் குலையைப் போலும் தமது தொடி நெருங்கிய கையை மேலெடுத்துத் தொழா நிற்ப, முருகப்பிரானுக்கு வெறியாட்டு எடுக்கும் மகளிர்க்குப் பொருந்தப் பாம்பி வேய்ங்குழல் இசைக்கவும், யாழ்வாசிக்க வும், முழா முழக்கஞ் செய்யவும், முரசம் ஒலிப்பவும் திரு விழா இடையறுது நடைபெறும் அங்காடித் தெருவென்க.

* இக்காலத்திதனை 'ரேழி' என்று வழங்குவர்.

159—183. நகரிற் கொடிச் சிறப்பு.

குற்றமற்ற சிறப்பினையுடைய தெய்வத்தை ஏற்றுவித்து மலர்க ளணிந்த கோயில் வாயிலிலே பலருந்தொழுதுசெல்லுங் கோழிக்கொடியும், உணவுப்பொருள் வைக்கப்பட்டிருக்கும் கொழுவிய பேழையினைத் தாழிடுவித்துப் போற்றிய குளிர்ந்த பலபண்டங்களின்மேல் வெள்ளிய அரிசியைப் பலியாகச்சிதறிப் பாகாகக் காய்ச்சி வார்த்த பசிய மெழுக்கைப் பூசிய கோல்களை நாட்டி அவற்றின் மேற் கவித்திட்ட சட்டத்தின்மேல், வருகின்ற நீரால் திரட்டிச் சேர்க்கப்பட்ட வெண்மணல் நிரம்பிய காட்டியாற்றின் கரைமருங்கில் நின்ற அழகிய கரும்பின் ஒண்பூப் போலத் தோன்றும்படியாக நட்ட துகிற்கொடியும், பலவாகிய நூற் கேள்விகளில் துறைபோகக் கற்றமையானே பிரமாண ஆசிரியராயுள்ளார் வாது செய்து பிறர்க்கு மெய்ப்பொருள் தெருட்டுதற் பொருட்டு நாட்டிய அச்சந்தருங் கொடிகளும், கட்டுத் தறியை அசைக்குங் களிறுபோலக் காண்பார்கட் கினிய காவிரிப்பூம் பட்டினக் கடற்றுறை முகத்தில் நெருங்கி நின்று அசையும் மரக்கலங்களின்மேல் கட்டிய கொடிகளும், மீனையும் இறைச்சியையும் அறுத்து அவற்றின் ஊனை நெய்யிற் பொரிக்கின்றமையால் ஆரவாரம் நிறைந்த முற்றத்திலே மணலைக் குவித்து மலரைச் சிதறிக் கள்ளுண்பார் பலரும் நுழைதற்குக் காரணமான கள்ளுக் கடையின் பலிதரப்பெற்ற வாயிலிலே கள்ளுவிற்றலை யறிவித்தற்கு அறிகுறியாகக் கட்டிய கொடியும்,ஆகிய இவற்றோடு இன்னும் வேறு வேறு கொடிகளும் மிகக்கலவாநிற்பப் பலவேறு உருவாற் சிறந்த பெருங்கொடிகளும் நிறைந்தமையால் அவற்றின் நீழலிலே ஞாயிற்றின்கிரணங்களும் நுழையக் கூடாதனவான வளம் பொருந்திய நகர் என்க.

### 183—193. தெருக்களிலுள்ள பொருள்வளம்.

இப்பெற்றித்தான நகரத்தின் எல்லேயில் கெடாத நற்புகழையுடைய தேவர்கள் காவலாய் நிற்கின்றமையால் இடையூறு சிறிதுமின்றிப் பிறதேயத்தி லிருந்து கடல் வழியே நாவாயிற் கொண்டுவந்த மிகவிரைவாய்ச் செல்லுங் குதிரைகளும், வட்டையிலே கொண்டு வரப்பட்ட கரிய மிளகு பொதிகளும், வடக்கே இமயம் மேரு முதலிய மலைகளினின்றுங் கொண்டு வரப்பட்ட பலதிறப்பட்ட மணிகளும் பொன்னுருக்குக் கட்டிகளும், குடகுமலையினின்றும் வந்த சந்தனக்கட்டை அகிற்கட்டைகளும், தென்கடலிற் குளித்து எடுத்துவந்த முழுமுத்துக்களும், கீழ்கடலிற் றுருவிக் கொண்டுவந்த செம்பவளங்களும், கங்கையாற்றிற் பிறந்த பொருள்களும், காவிரியாற்றின் பொருள்களும், இலங்கைத்தீவினின்றும் போந்த உணப் பொருள்களும், கடாரத்தினின்று கொணர்ந்த நுகர்ச்சிப் பொருள்களும், ஆகிய இவையெல்லாம் நிலந்தாங்கமாட்டாமல் நெளியும்படி ஒருங்குதொக்கமையினாலே பலவகைப்பட்ட பொருள் வளங்களும் ஒன்றோ டொன்று அளாய அகன்ற தெருக்கள் என்க.

### 193—212. வேளாளர் குடிச்சிறப்பு.

இத்தன்மைத்தாகிய தெருவினும், துறை முகத்து நடுவினும், கடற்கரை மருங்கினும் மகிழ்ந்து இனிது உறங்கிச் சுற்றம் தழைத்துத் தமக்குப் பகையாவார் இவரென்று எண்ணாது வலைஞர் முன்றிலிலே மீன்பாயவும் ஊன்விற்பார் குடிசையிலே ஆடுமுதலான விலங்குகள் திரண்டு நிற்கவும் ஆக இவ்வாறு கொலைபுரிவாரை அதனினின்று நீக்கியும், களவு காண்பாரை அதனினின்று நீக்கியும், தேவரைப் போற்றியும், ஆரியர் உவக்கும்படி அவர்வேண்டும் வேள்விகளை வேட்டு அவரை நுகர்வித்தும், நல்ல பசுக்களோடு

எருதுகளைப் பாதுகாத்தும், நான்மறை வல்லோர்க்கு உண்டாம் புகழை நிலைபெறச்செய்தும், வரும் விருந்தினர்க்கு நுகர்தற்குரிய பலபண்டங்கள் கொடுத்தும், பசியசோறு கொடுத்தும் அறவொழுக்கம் பிறழாது யார்க்கும் குளிர்ப் பக்கூறி அன்புகூரக்கும் வாழ்க்கையின்கண் நிலைபெற்ற விளைந்த கலப்பையின் உழவுதொழிலையே நச்சுகின்ற வேளாளர் தமது நீண்ட நுகத்திற்றைத்த பகலாணிபோல் நடுநிலை திறம்பாது நின்ற நல்லநெஞ்சினை யுடையராய்த் தமக்குந் தங்குடிக்கும் வடுவாமென் றுணர்ந்து பொய்யை யொழித்து மெய்ம்மையேகூறித் தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பண்டங்களையும் ஒருசமம்பெறக்கண்டு, தாம் பிறரிடத்து அப்பண்டங்களை விலைகொள்ளும்போது மிகுதியாகக் கொள்ளாமலும், தம்பண்டங்களைப் பிறர்க்கு விலையிடுங்காற் குறையக் கொடாமலும் இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லிவிற்று இங்ஙெறியே தொன்றுதொட்டு வரம்பின்றிப் பொருள்தொகுத்த அவர் நெருங்கி யிருக்கும் குடியிருப்பு என்க.

## 213-218. காவிரிப்பூம்பட்டின வருணனைமுடிபு.

வேறுவேறாகச் சிறந்த அறிவுவாய்த்த சுற்றத்தினை யுடைய நன்மக்கள் திருவிழாக்கொண்டாடும் பழையவூரிலே சென்று கூடினாற்போலப், பலவேறு வகைப்பட்ட பாஷைகள் வழங்குவோராய்க் குற்றமற்ற பலதேயத்தினின்றும் வந்தமக்கள் எல்லாரும் சென்று தன்கண் உள்ள நன்மக்களோடு பழகிக்கலந்து வசிக்கும் வழுவாத சிறப்பினையுடைய காவிரிப்பூம் பட்டினமென்க.

## 218-220 பாட்டிற் கருக்கொண்ட பொருள்.

இவ்வியல்பினதாய்ச் சிறந்த காவிரிப்பூம் பட்டினத்தையே எனக்கு உரிமைப்பொருளாகப் பெறுவேனாயினும்

வநெஞ்சமே! நீண்ட கருங்கூந்தலினையும் விளங்கும் பூணி னையுமுடைய என்காதலி ஈண்டுத் தனியளாயிருப்ப அவ டன்னைப் பிரிந்து வருதற்கு ஒருப்படமாட்டேன் கண் டாய்.

## 220-239. கரிகாற் பெருவளத்தான் தன்னைச் சிறைசெய்த பகைவரைத் தப்பிப்போய் அவரை வென்றமை.

கூரிய நகத்தினையுடைய புலிக்குட்டியானது கூட்டில் அடைபட்டு வளர்ந்தாற்போலப் பிறரிட்ட சிறைக்காவலிற் றங்கியிருந்து அதனுற் றன் பெருமைக்குணம் வயிர மேறி முற்றுதலானே, குழியில் வீழ்ந்த களிற்றியானை அதன் கரையைக் கொம்பாற்குத்தித் தூர்த்துத் தன்பிடியி னிடத்தே சென்று சேர்ந்தாற்போலத் தன்னுணர்வால் கூர்த்தறிந்து பார்த்துத் தனக்குக் காவலாயமைந்த சிறைக் களத்து வலிய மதிலைத்தாண்டிப் புறத்தே நின்ற வாட் படை வீரரையெல்லாம் ஓட்டிப்போய்ப் பகைவர்க்கு அச் சத்தை விளைக்கும் தன்னரசவுரிமையை முறையே பெற் றும், அங்ஙனம்பெற்ற அதன்மாத்திரையில் உள்ள அமைதி பிறவானுய்ப் பின்னும் மண்கொளல் வேண்டுமென் றெ ழுந்த நசையால், பகைவருடைய காவலமைந்த அரண்களை அழித்துக் கதவைக்குத்தி யேந்தின மருப்பினதாய்ப் பகை வர் முடிசூடிய பெருந்தலையை உருட்டும் முன்றாளில் நகங் கள் பொருந்தப்பெற்ற அடிகளையுடைய யானையோடும் வடித்தமணிகள் கட்டிய குதிரையோடும் படையெடுத்துச் சென்று மாற்றார் படைவீரர் போர்க்களத்து விழவும், பெ ரிய ஆகாயத்தில் பருந்துகள் உலாவவும், துறுபடர்ந்த கருங்கற் பாறைபோல் போர்வேண்டி யெழுந்தமைக்கு அடையாளமாகப் பூளைப்பூவும் உழிஞைப்பூவுஞ்சூடிப் பே

யின்கண்ணேப்போன்ற முழங்கும் போர்முரசம் அகன்ற பாசறையிலே அதிர்ந்து முழங்காநிற்பச்சென்று பகைவர் இடங்கள் பாழாகும்படி அவரை முதற்போரிலே தோல்வி பெறச்செய்து, அவ்வளவிற் சினம்மாறாது மேலும்போய் அவர் அரண்களை அழித்து நடந்து குளிர்ந்த மருதநிலத்துக் குடிகளைத் தூரத்தி என்க.

## 240—244. மருதநிலம் பாழ்பட்டமை.

அங்ஙனமெல்லாம் அப்பகைவரூரைப் பாழ்படுத்தின மையால் முன்னே வெள்ளிய பூவினையுடைய கரும்பும் செந்நெல்லும் நீண்டு கரிய இதழ்க்குவளையோடு நெய்தற் பூவுங்கலந்து முதலைகள் செருக்கித்திரிந்த இடம் அகன்ற செழும் பொய்கைகளெல்லாம், இப்போது கொழுந்தண்டு களையுடைய அறுகும் கோரைப்புற்களும் அடர்ந்து நீர் அற, இவ்வாறே வயலும் வாவியும் வேறுபாடின்றித் தந்தன்மை திரிந்திட, அறுப்புள்ள கொம்புகளையுடைய புல்வாய்க் கலைகளோடு மான்பிணைகள் ஆண்டுத் துள்ளிவிளையாடும் பாழ்இடமாயின.

## 245—251 அம்பலங்கள் பாழ்பட்டமை.

தாம் தம்பகைவர் மகளிரைச் சிறையாகக் கொண்டு வந்தமையின் அம்மகளிர் நீருண்ணுந்துறையிலே முழுகி வந்து மாலைப்பொழுதிலே கொளுத்திய விளக்கினை யுடையதாய் மலர் அணியப்பட்ட மெழுகின இடத்திலே உள்ளூரார் பலர் தொழுதுசெல்லவும், வெளியூரினின்று புதியராய் வந்தார் தொழுதுதங்கவும் அமைக்கப்பட்ட அருட் குறி நிறுத்திய அம்பலங்களெல்லாம் தங்கட்பருத்த தூண்கள் சாயும்படியாக உராஞ்சிக் களிற்றியானையோடு பிடியானையுங் கூடியிருக்கும் இடமாயின என்க.

### 252—260. மன்றம்பாழ்பட்டமை.

விலைவரம்பறுத்தற்கரிய நறியமலர்களைத் தூவித் தெருவில் நின்று அறிவுவாய்த்தலையுடைய கூத்தர் முழவுக்கு இசைய முறுக்கின நரம்பையுடைய யாழிசைகேட்கும் பெரிய திருவிழாக்கள் இல்லையாய்ப்போன அச்சம் மிகுந்த மன்றங்கள் சிறிய பூக்களையுடைய கோரையும் அறுகம் புல்லும்பம்ப அழன்ற வாயினையுடைய நரிகள் ஊளையிடவும், அழுங்குரலாய்க் கூப்பிடும் கூகைகளோடு கோட்டான்களுமிருந்து எதிர் கூவவும், தொகுதி கொண்ட ஆண்பேய்களோடு மயிரை அவிழ்த்துத் தொங்கவிட்டுப் பிணத்தைத்தின்னும் பெண்பேய்கள் கூடவும் ஆயின என்க.

### 261—268. நகர்பாழ் பட்டமை.

வளைந்த கால்களாய்க் கட்டப்பெற்ற நீண்டமாடத்தின் றலைக்கடையிற்சென்று விருந்தினர் இடையறுதுண்டும் குறையாத பெருஞ்சோற்று வளம்நிரம்பிய அடுக்களை வாய்ந்த ஒளிபொருந்திய சுவர்களமைந்தவான நல்ல இல்லங்களின் உயர்ந்த திண்ணைகளின்மேலிருந்து பைங்கிளி இன்சொல் மிழற்றுதற்குக் காரணமான பால்நிறைந்த செழுவிய நகரம், செருப்பிட்ட அடியினையுடையராய்த் துடியொலிப்பத்திரண்டுசென்று வளைந்த வில்லையுடைய வேடர் கொள்ளைகொண்டு உண்டுவிட்டமையினாலே உணவின்றி வறிதாய்ப்போன நெற்கூடுகளின் உள்ளிருந்து வளைந்த வாயினையுடைய கூகைகள் நண்பகற்காலத்துங் குழறும்படியாயிற்று.

### 269—299. கரிகாற்பெருவளத்தான் வெற்றித்திரு.

இங்ஙனமெல்லாம் புகுதற்கு அரிய காவலமைந்த மதில்சூழ்ந்த பகைவர் ஊர்களையெல்லாம் பெரும்பாழ்செய்

தும் அதனாலும் அவர்மேற்கொண்ட செற்றம் தணியப் பெறானாய், தெய்வத்தன்மை பொருந்தியவனாதலின் 'இவன் மலைகளையெல்லாங் கல்லுவன் கடலைத் தூர்ப்பன் வானை விழச்செய்வன் காற்றை இயங்காமல் விலக்குவன்' என்று இவ்வாறெல்லாம் உலகத்தாரெல்லாரும்மீக்கூறும்படி தான் நினைத்தவற்றை அந்நினைத்தவாறே துறைபோக முடித்தல் வல்லவனாகலின், ஒளிநாட்டார் பலரும் வந்து தாழ்ந்து ஒடுங்கவும், பழைய அருவாள நாட்டினரசர் அவன் ஏவிய தொழிலைச்செய்தற்கு அவன்சொற் கேட்பவும், வடநாட்டிலுள்ள ஆரியஅரசர் வாடவும், குடநாட்டிலுள்ளார் மனமெழுச்சிகுன்றவும், பாண்டியன் வலிகுறையவுஞ் சிறி மன்னர்தம் நிலைபெற்ற மதிலைக் கைப்பற்றும் மதமுடைத்தாய் வலிய தாளினையுடைய யானைப்படையையும் வீரத்தாற் சிறந்தவலிமையும் உடையனாய்க் கோபத்தாற்சிவந்த கண்களால் வெகுண்டு பார்த்துப் புல்லிய இடைய அரசர் கிளை அழிந்துபடவும், இருங்கோவேள் சுற்றத்தார் கெடவும், காட்டையெல்லாம் அழித்து நாடாக்கிக் குளங்கள் அகழ்வித்துப் பலவளங்களும் பெருகச்செய்து, விளங்கும் மாடத்தினையுடைய உறையூரைவிடுத்து, ஆண்டுக்கோயில்களையுங் குடிகளையும் நிலைபெறச்செய்து சிறுவாயிலும் பெருவாயிலும் அமைத்து,மதில்களில்அம்பெய்யும்குருவித்தலைகடோறும் அம்புக்கட்டுகளைப் பொருந்தவைத்துப், பகைவர் யாவராயினும் அவரோடு பொருதற்குச் சித்தமாக வுள்ளேமென வஞ்சினங்கூறிப், பின் அதனினின்றும் பிறழமாட்டேமென்னும் உறுதியுடைமையினாலே முதுகுகாட்டிப் போகாத வீரஇலக்குமி என்றும் நிலைபெற்ற பெரிய மதின் மின்போல் ஒளிவீசுதலால் இவனைப் பணிதற்கு வந்த வடரிறக்கின சூழவினையுடைய பிற அரசர் தம் ஒளிமழுங்கப்பெற்றாராய்ப் பின் இவன் அருணோக்கத்திற்குப் பாத்

திராகல்வேண்டி இவனைப்பணிதலால் அவர் மகுடத்திற் குயிற்றிய மணிகள் உரிஞ்சிய மிக்கவலியினையுடைய வீரக்க ழல்கட்டின காலினையும், பொற்றொடியணிந்ததன்புதல்வர் ஓடிவிளையாடவும் தொழில் முற்றப்பெற்ற அணிகலம் அணிந்த தன்மனைவிமாரின் முகிழ்த்த கொங்கைகள் தழுவவும் செஞ்சந்தனக்குழம்பு கலந்த மார்பினையும், ஒள்ளிய பூண்களையும் உடையனுய்ச் சிங்கவேற்றை யொத்த பகைவர்க்கு வருத்தத்தை விளைக்கும் வலியினனான கரிகாற் பெருவளத்தான் என்க.

## 299—301. முன்கருக்கொண்ட இப்பாட்டின் பொருள் முடிபு.

இப்பெற்றியனான அவ்வேந்தன் பகைவர்மேல் ஓச்சிய வேலைக்காட்டினும் கொடியதாயிருந்தது யாம் போதற்கு எழுந்த கானகம்; இவள் அகன்றமெல்லிய தோள்களோ அவன் செங்கோலினும் குளிர்ந்தவாயிருக்கின்றன என்க.

---

## பாலை.

---

பாலையென்பது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் உணர்த்தும் அகவொழுக்கமாம். தன்மனத்கினிய காதலியை மணந்து கொண்டு தலைமகன் இல்லிருந்து இல்லறம் நடாத்துங்கால், வேற்றுநாட்டிற் சென்று பொருடேடலைக் கருதித் தன் மனைக்கிழத்தியைப் பிரிந்துபோதற்குக் குறித்தவழி, அக் குறிப்பினை அறிந்த அவன்காதலி அவனைப்பிரிதற்கு ஆற்றளாய் மிகவருந்தாநின்றனள். அவ்வருத்தத்தைக் கண்டு

அவளைப் பிரியப்பெறுனாய்த் தன்னெஞ்சை நோக்கி "முட்டாச்சிறப்பிற் பட்டினம்பெறினும், வாரிருங் கூந்தல் வயங்கிழையொழிய, வாரேன்வாழியநெஞ்சே" என்று கூறித் தான் செல்லுதல் தவிர்ந்தான். இங்ஙனஞ் செலவு தவிர்ந்தது இப்போது ஆற்றுளான இவளைப் பலதிறத்தானும் அறிவுறுத்தி ஆற்றுவித்துப் பின்பிரிதற் பொருட்டேயாம். ஆகவே, இப்போது தான்பிரிதலை யொழிந்தது பின்பிரிந்துபோதற்குக் காரணமாகையால் இப்பாட்டுப் 'பிரிதல் நிமித்தத்' தின்கண்வந்த பாலையொழுக்கத்தை விளக்குவதாயிற்றென்க. இதனை ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே*
> வன்புறை குறித்தறவிர்ச்சியாகும்" என்று விதித்த

வாற்றுனுங்காண்க.

---

## வாகை.

பாலை என்னும் மக்கள் அக ஒழுக்கத்தைக் கூறுகின்ற இப்பாட்டின்கண் அவரது புறஒழுக்கமுங்கூறல்வேண்டின் அப்பாலை யென்னும் அகவொழுக்கத்தோடு இயைபுடைய வாகை என்னும் புறவொழுக்கமே கூறற்பாற்றும். என்னை? "வாகைதானே பாலையதுபுறனே" என்றார் ஆசிரியர்தொல்காப்பியனாராகலின் என்க. அவை இரண்டும் அங்ஙனம் இயைபுடையவா றென்னையெனின்; 'வாகை' என்பது ஒருவர் தமது திறத்தினை ஏனையோரின் மிக்குத்தோன்ற விளக்குதலாம்; எனவே, இஃது ஒருவர்க்கு உளதாம் வெற்றி என்னும் புறவொழுக்கத்தை உணர்த்துவதென்

* பொருளதிகாரம், கற்பியல், சச.

பது இனிதுபெறப்படும். 'பாலை' என்பதூங் காதற்கிழமையிற் சிறந்த தன்காதலிபாற்சென்ற அன்பின் வழியேயொழுகி அவளிடத்தே தங்கியிராது, இல்லறவாழ்க்கையினை இனிது நடப்பித்தற்கு இன்றியமையாது வேண்டப்படும் நன்பொருள் திரட்டுதற்பொருட்டு அவள்மேற்சென்ற அன்பினை அடக்கி வெற்றிகண்டு தலைமகன் பிரிந்துபோதலை உணர்த்துவதாம். ஆகவே, அகத்தேநிகழும் அன்பை வெற்றிகாணும் 'பாலை'யும், புறத்தே நிகழும் பகைவர் மறத்தை வெற்றிகாணும் 'வாகை'யுந் தம்முட்சமமாதல் தெற்றெனப்புலப்படும்.

இனித் தன்காதலிமாட்டுச் சென்ற காதலைச்செயித்துப் பிரிதற்கு எழுந்த தலைவன் அவள் மிகவருந்துதல் கண்டு இரங்கி அவளை ஆற்றுவித்தற்குத் தங்கிய 'பாலை' ஒழுக்கத்தைக்கூறும் இப்பாட்டின்கண் 'வாகை' என்னும் புறஒழுக்கம் யாண்டுக் கூறப்பட்டதெனின்;—காட்டுதும். கரிகாற்சோழன் தன் இளம்பருவத்தே பகைவர் இட்ட சிறைக்களத்தில் இருந்தபோது, அவரை வெல்லும் வகையெல்லாம் சிந்தித்துப் பின் அச்சிறைக்களத்தினின்றும் அஞ்சாது தப்பிப்போய்த் தன் அரசவுரிமையினைக் கைப்பற்றிக்கொண்டு அப்பகைவர்மேற் சென்று அவரை யெல்லாம் வென்று அவர் நாடு நகரங்களை அழித்து வெற்றிவேந்தனுய்ச் செங்கோல் ஓச்சினமை இருநூற்றிருப்பதாம் அடிமுதற்கொண்டு இருநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் அடிகாறும் இனிது விரித்துக் காட்டினாராகலின் பாலையோடுஇயைபுடைய 'வாகை' என்னும்புறத்திணையும் உருத்திரங்கண்ணனார் என்னும் நல்லிசைப்புலவரால் ஈண்டுச் சொல்லப்பட்டதென்க.

## பாட்டின்வரலாறு.

இனி இப்பாட்டின் வரலாற்றைப் பின்வருமாறுஊகஞ் செய்துகாட்டல் இழுக்காது. இதனை யியற்றிய நல்லிசைப் புலவரான உருத்திரங்கண்ணனார் தன் ஆருயிர்க்காதலியோடு மருவியிருந்து இல்லறம் நடாத்துகின்றுழித் தமக்குள்ள பொருள்வளஞ்சுருங்க வறுமைவந்து நலிவதாயிற்று. அவ்வறுமைநோய்களைந்து விருந்தோம்பிவாழ்தற்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்பெறற் பொருட்டுக் கரிகாற் சோழனிடத்துப் போதற்குக் கருதினார். அக்கருத்தறிந்த அவர் அருமைமனைவியார் அவரைப் பிரிதற்குச் சிறிதும் பொருந்தாராய் வருந்தினார். அவ்வருத்தங் கண்டு பிரிதலைத் தவிர்ந்த அவ்வாசிரியர் தாம் கரிகாற் சோழன்பாற் போதற்குக் கருதினமையும், அது தெரிந்து தம்மனைவி வருந்தினமையும், அவள் ஆற்றாமையினைத் தணித்துப் பின் ஒருகாற் பிரிதற்பொருட்டுப் போகாது தவிர்ந்தமையும் இனிது விளங்க நலமுறவுரைத்துத், தாம் சோழவேந்தனிடத்துப் பரிசில் பெறவேண்டினமையும் "முட்டாச் சிறப்பிற் பட்டினம்பெறினும்" எனக்குறிப்பால் அறிவித்து, அக்கரிகாற்சோழ மன்னற்குரிய அரிய பெரிய வெற்றித் திறங்களெல்லாம் நடந்தவாறே மொழிந்து இவ்வருமைத் திருப்பாட்டை அருளிச்செய்தனர். இங்ஙனம் இயற்றியஇவ்வருந்தமிழ்ச்செய்யுளைப் பின்னொருகால் இவர் அச்சோழவேந்தன்பாற் சென்றுகாட்ட அவன் இவர்செய்யுளின் சொற்சுவை பொருட்சுவைகளை மிகவியந்து இவர்க்குப் பதினாறுநூறாயிரம்பொன் பரிசிலாக வழங்கிச் சிறப்புச் செய்தான்; இது "தழுவுசெந்தமிழ்ப்பரிசில் வாணர்பொன்

பத்தொடாறுநூ றுயிரம்பெறப், பண்டு பட்டினப்பாலை கொண்டதும்" என்னுங் கலிங்கத்துப்பரணிச் செய்யுளால் அறியப்படும்.

---

## ஆக்கியோன் வரலாறு.

---

இனி இவ்வருமைத் திருப்பாட்டை அருளிச்செய்த நல்லிசைப்புலவரான உருத்திரங்கண்ணனூர் கடியலூரிற் பிறந்தவரென்பது இவர்பெயர் அவ்வூர்ப்பெயரோடு புணர்த்துக் கடியலூர்உருத்திரங்கண்ணனூர் என்றுவழங்குமாற்றால்அறியப்படும். இவர் பண்டைக்காலத் தமிழ்மக்களில் அந்தணர்குடிக்கு உரியாரென்பது, தொல்காப்பியம் மரபியலில்போராசிரியர் "ஊரும்பெயரு முடைத்தொழிற் கருவியும், யாருஞ் சார்த்தி யவையவை பெறுமே" என்னுஞ் சூத்திரவுரையில் 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங் கண்ணன் என்பன அந்தணர்க்குரியன.' என்று உரை கூறியவாற்றால் தெளியப்படும்.

இனி இவர் இச்சமயத்தை மேற்கொண்டு ஒழுகினு ரென்பது ஒருவாற்றானும் பெறப்படவில்லை. இவ்வாசிரியர் தாம் இயற்றிய பெரும்பாணாற்றுப்படையில் "காந்தளஞ்சிலம்பிற் களிறுபடிந் தாங்குப், பாம்பணைப்பள்ளி யமர்ந்தோனுங்கண்" என்று கூறினாராகலின் இவர் வைணவ சமயத்தை மேற்கொண்டு ஒழுகினாரென்னுமோ எனின்;- காஞ்சி நகரத்திற் செங்கோல் ஓச்சிய தொண்டைமான் இளந்திரையன் என்னும் வேந்தன்பாற் சென்று பரிசில்

பெறும்படி பாணரை ஏவிப் பாடுமிடத்து, அவன் அரசு வீற்றிருந்த அக்கச்சி நகரத்துத் திருக்கோயில்கொண்ட திருமாலையும் வழிபட்டுச் சென்மின் என்று அப்பாணரை நோக்கிக் கூறியதன்றி, இவர் திருமாலைவழிபட்டு வந்தன ரென்பது அதனாற் சிறிதும் பெறப்படாமையின் அங்ங னங்கூறுதல் பொருந்தா வுரையாமென்க. அக்கச்சி நகரத்துச் சிவபிரான் கோயிலும் இருப்ப அதனை விடுத்துத் திருமால் கோயிலையே இவர் மிக்கெடுத்துக் கூறியவாறென்னையெனின்;- தொண்டைமான் இளந்திரையன் என்னும் அச்சோழ மன்னன் திருமால் குடியிற் றோன்றினோனென "இருநிலங் கடந்த திருமறுமார்பின், முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த்,திரைதரு மரபினுரவோனும்பல்" எனும் பெரும்பாணாற்றுப் படையடிகளிற்கூறினாராகலின், அவ்வேந்தன்பாற் போகும் பாணர்க்கு அவன் குடித்தெய்வமாய் வழிபடுந் திருமாலைத் தொழுது செல்கவென அறிவுறுத்தருளினா ராகலின் அதுகடாவன்றெனமறுக்க. இங்ஙனமன்றித் திருமாலைக் கூறினமையானே இவர் வைணவராமெனின், "கருவிலோச்சிய கண்ணகன் எறுழ்த்தோட், கடம்பமர் நெடுவேள்" என்று முருகக்கடவுளையுங்கூறினாராகலின் இவர் சைவசமயத்திற் குரியராம் போலுமென எதிர்மறுத் துரைப்பார்க்கு இறுக்கலாகாமையின் அங்ஙனங் கூறுதல் வழுவுரையா மென்க. இவ்வாற்றால் இவர் இச்சமயத்தார் எனத் துணிபுரை விரித்தற்குப் பிரமாண மின்மை காட்டப்பட்டதாகலின், இவர் சமயம் இதுவென ஒருவாற்றானும் விளங்கவில்லையென் றுணர்க.

# பாட்டுடைத் தலைவன்.

இனி இப்பாட்டுடைத்தலைவனான சோழன்கரிகாற் பெருவளவன் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்திற் செங்கோலோச்சினான். இவன் கி-முன் முதல்நூற்றாண்டின் இடையிலே அரசுரிமைபெறலாயினானென்பதும், மதுரைமாநகரிற் கடைச்சங்கமும் இவன்காலத்தேதான் சிரம்பப் பொலிவுபெற்றிருந்ததென்பதும் யாமெழுதிய திருக்குறளாராய்ச்சியில் இனிதுவிளங்க விரித்துக் காட்டினேம். அவையெல்லாம் ஈண்டெடுத்துக்காட்டலுறின் இது வரம்பின்றிவிரியுமாகலின் ஆண்டுக்கண்டுகொள்க. கடைச்சங்கத்தாராற் றொகுக்கப்பட்ட பத்துப்பாட்டுகளில் இரண்டுபாட்டுகள் இயற்றிய ஆசிரியர் உருத்திரங்கண்ணனாரும் இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்கு முற்பட்டவரென்பது இதனால் விளங்கற்பாலதேயாம்.

இனி இச்சோழமன்னன் தான் இளைஞனாயிருந்தகாலத்துப் பகைவராற்பற்றப்பட்டுச் சிறைக்களத்தேயிடப்பட்டானென்பதூஉம், பின் அச்சிறைக்களத்தினின்றுந் தப்பிப் போய்த் தன் அரசுரிமையினையெய்திப் பின்பு அப்பகைவர் மேற் படையெடுத்துச்சென்று அவரையெல்லாம் வென்றானென்பதூஉம் இப்பட்டினப்பாலையின் இறுதிப்பாகத்தால் நன்கு புலப்படுகின்றன.

இன்னும் இவன் இளைஞனாயிருந்தபோது ஒருகால் இவன்பகைவர் இவனைக்கொல்லும் பொருட்டு இவனிருந்த இல்லத்தைத் தீக்கொளுவ, இவன் அதற்கு அஞ்சாது அத்தீயினூடேபோய் அப்பாற்பட்டு உயிர்பிழைத்தானென்பதும்,

அங்ஙனம் அத்தீயைக்கடந்து செல்லுங்கால் இவன்கால் கரிந்துபோயிற்றென்பதும், அக்காரணம்பற்றியே இவன் கரிகாற்சோழனென்னும்பெயர் பெறுவானாயின னென் பதும், இவன் தன்அரசுரிமையினை எய்துதற்கு இவன் அம்மானுன இரும்பிடர்த்தலையார் என்னும் நல்லிசைப்புல வர் இவற்குப் பெருந்துணையாயிருந்தனரென்பதும், இவன் சேரமான் பெருஞ்சேரலாதனோடு வெண்ணியென்னும் ஊர்ப்புறத்தே போர்செய்து வெற்றிகொண்டா னென்ப தும், அங்ஙனம் போரியற்றுங்கால் அச்சேரலாதனுக்குத் துணையாய்வந்த பாண்டியன் ஒருவனையுந் தோல்விபெறச் செய்தானென்பதும், பின்பொருகால் இமயமலைவரையிற் சென்று ஆரியவரசரையெல்லாம் வென்று அம்மலைக்குவட் டில் தன்புலிக்கொடியைநாட்டினு னென்பதும், இருங்கோ வேளுக்கு இவன்பெரும்பகைவனென்பதும், இவன்தமிழ்ப் புலவர்களை மிகவும்பாதுகாத்து வந்தமையால் அவர்களாற் பெரிதும் நன்குமதிக்கப்பட்டு வந்தானென்பதும் பழமொ ழி பொருநராற்றுப்படைபுற நானூறுமுதலியநூல்களால் இனிது விளங்குகின்றன.

---

## பாட்டின்நலம் வியத்தல்.

---

இனி இப்பாட்டின்கண் உள்ள பொருளமைதியின் நயத்தைச் சிறிது ஆராய்வாம். ஒருபாட்டின்கண் அமைந்த பொருளுக்கும் அதனைவிட்டுத் தனியேகிடந்தபொருளுக் கும் வேறுபாடுபெரிதாம். தனியேகிடந்தபொருள் அறிவுக் குப்புலப்படும் அம்மாத்திரையேயன்றி வேறுஇன்பம் பயப் பதன்றாம். பாட்டின்கண் அமைந்த பொருளோ அறிவிற்

குப் புலப்படுவதோடு நம்மனோபாவக உணர்ச்சியை எழு வித்து இன்பம் பயப்ப தொன்றும். திங்கள் வானில்விள ங்குகின்றதென்று ஒருவன் உரைத்தால் அவ்வுரைநம் அறி வுக்கு ஒருவிஷயத்தை அறிவிக்கும் அவ்வளவேயன்றி அதன்மேற்றருவது சிறிதுமில்லையன்றோ? அவ்வாறன்றிக்

"கொழுந்தாரகை முகை கொண்டலம் பாசடைவிண் மடுவில், எழுந்தார் மதிக்கமலம் எழில்தந்தென" என் னுந் திருச்சிற்றம்பலக் கோவையார் திருவாக்கை ஒருவர் உரைப்பக்கேட்டால், 'விரிந்தநீலவானம் என்னும் நீர்மடு வில் மேகமாகிய பச்சிலை பரவியிருப்ப இடையிடையே வான் மீன்களாகிய வெண்டாமரை முகைகள் நிறைந் துவிளங்க அவற்றின் நடுவில் முழு வெண்டிங்களா கிய ஒருவெண்டாமரை அலர்ந்து அழகுடைத்தாய்த் தோன் றுகின்றது' என்னும் அச்செய்யுட்பொருள் நம் அறிவுக்குப் புலனாதலோடு மனோபாவக உணர்வினையும் எழுவித்து இன்பம் பயத்தல் கண்டாமன்றே? மற்று இங்ஙனம் இன் பம் பயத்தல் அச்செய்யுட்பொருளுக்கு மாத்திரம் எவ்வாறு பொருந்திற்று என்று நுணுகிப்பார்க்குமிடத்து, முழுநிலா இரவிற் காணப்பட்ட அவ்வானின் தோற்றத்தை நிலத் தின்கண்ணுள்ள மடுவின் றோற்றத்தோடு ஒப்பவைத்துக் காட்டினமையால் அதற்கு அவ்வின்பம்விளைக்கும் ஆற்றல் பொருந்தலாயிற்றென்பது நன்குபுலப்படும். ஆகவே, பாட் டின்கட் சொல்லப்படும் பொருளுக்கு இசைந்தவேறோர் தோற்றத்தினை எழுப்புதல் செய்யுளியற்றும் நல்லிசைப்புல வர்திறமாம். இங்ஙனம் அவர்செய்யும் செய்கைத்திறத் தினையே இலக்கணநூலார் உவமை, உருவகம்என வேறு பெயரிட்டுவழங்கினர். பொருள்களைக்கிடந்தவாறே சொல் லிக்கொண்டுபோம் நெறி தன்மை நவிற்சிஎனவும், அங்ங னஞ் சொல்லிபோதற்கு இடையிடையே உணர்வுசலிப்ப

டையாமைப் பொருட்டுச் சுவைவேறுபடுத்தி அப்பொருளோடு இயைந்த பிறபொருட்டோற்றத்தை எழுப்புநெறி உவமை உருவகம்எனவும் பெயர்பெறலாயின. இன்னும் இவ்வுவமை உருவகம்முதலியவற்றின் வேறாகப்பிறர் ஆயிர மலங்காரங்கள் கூறினாராயினும் அவையெல்லாம் இவ்வுவமை உருவகம்என்னும் இரண்டிலேயடங்கும். தம்மாற் கூறப்படும் பொருள்களின்வழியே அறிவுநின்று அவற்றோடு ஒப்பச்செல்லுங்காற் புலவர்க்கு இயற்கையாய்த் தோன்றும் அலங்காரங்கள் உவமை உருவகம்என்னும் இவ்விரண்டேயாகலின், இவ்வியற்கைநெறி திறம்பி மிகவும் இடர்ப்பட்டுப் பலப்பலவான அலங்காரங்க ளெல்லாம் அமைத்துப் பொருளுண்மைதிரித்துக் கற்பார் மனோபாவக உணர்வைச்சிதைக்கும் பிறரெல்லாம் புலவரெனப்படுதற்குச்சிறிதும்வலாதவர்என்பதூஉம், அவரான் அமைக்கப்படும் அவ்வலங்காரங்கள் வெற்றாரவார வெறும்போலிகளேயா மென்பதூஉம் உண்மை யறிவுடையார்க்கெல்லாம் இனிது விளங்கற்பாலனவேயாம். இவ்வுண்மை கடைப்பிடித்தன்றே ஒப்புயர் வில்லாச் செந்நாவன்மைச் செவ்வறிவுத் தெய்வப் பெற்றியாளரான ஆசிரியர் தொல்காப்பியனார் பொருளதிகாரத்துள் உவமவியல் என ஒன்றே வகுத்து உவமம் ஒன்றே அலங்காரமென விளக்கி ஏனைப் போலிஅலங்காரங்களை யெல்லாம் அப்பாற்படுத்துவா ராயினர். இத்தெய்வ ஆசிரியரோடு திறம்பிப் பிறர் தமக்கு வேண்டியவாறெல்லாம் அலங்காரங்களைப் பெருக்கி எழுதிய நூல்கள் தொல்காப்பியத்தின் முன் தலை தூக்கமாட்டாவா யொழியும். அதுகிடக்க.

இனிப் பட்டினப்பாலை யென்னும் இவ்வருமருந்தன்ன நூலை எழுதிய உருத்திரங் கண்ணனார் என்னும் நல்லிசைப்புலவர் இதன்கண் இருபது உவமைகள் காட்டி

யிருக்கின்றூர். இவ்வுவமைகளை ஓரிடத்து ஒருசேரக்கூறுது பொருள்களைக் கிடந்தவாறே சொல்லிக்கொண்டு போம்போது இடையிடையே சுவை வேறுபடுத்திக் கற்போர்க்கு உணர்வெழுச்சி உண்டாதற் பொருட்டு அவை தம்மை ஊடே ஊடே இனிதமைத்திடுகின்றூர். உருத்திரங்கண்ணனுரும் பொருள்களைக் கிடந்தவாறே கூறினராயின், அதனுல் மனேபாவக உணர்வினைக்கவர்தல் எலாதெனின்; அற்றன்று, உலகியற் பொருள்களில் இயற்கையழகுள்ளனவும் அஃதில்லனவுமென இருபால் உளவாம். ஆசிரியர் உருத்திரங் கண்ணனுர் இச்செய்யுட்கண் உலகியற் பொருள்களில் அழகாற் சிறந்து மக்கள் மனவறிவை இலேசிலே வசிகரித்தற் பயத்தவான அரிய பெரிய பொருள்களைக் கூறும் வழியெல்லாந் தன்மை நவிற்சியும், அவற்றிடையே அவ்வியற்கை உயர்வுப் பொருளின் வேருவன சிலவந்தால் அவற்றை அழகுபெறக் கூறல்வேண்டி உவமையும் வைத்துரைக்கும்நுட்பம் மிகவும் நன்குமதிக்கற் பாலதொன்றும்.

இனிக், காவிரிப்பூம் பட்டினத்து உப்பங்கழியில் நெல்லேற்றிக் கொண்டுவந்த படகுகள் தறிகடோறுங் கட்டப்பெற் றிருத்தற்கு இலாயத்திலே வரிசையாகக் கட்டப்பெற்றிருக்கும் குதிரைப் பந்தியையும், சுற்றிலுங் கரை எழுப்பி விளங்கும் மலர்ப் பொய்கைகளுக்கு மகநட்சத்திரத்தாற் சூழப்பட்ட சந்திரனையும், அங்குள்ள சோறுக்குஞ் சாலைகளிலிருந்து பெருகியோடுங் கஞ்சிக்கு யாற்றின் வெள்ளத்தையும், அக்கஞ்சி உலர்ந்து புழுதியாய் மேற்படிந்த அரண்மனை வீடுகளுக்கு வெண்ணீற்றிற்புரண்டெழுந்த களிற்றி யானைகளையும், கடற்கரையின் மேட்டுக் குப்பத்திலே உள்ள வலிய செம்படவர் கரடி கூடத்தில் ஒருவரோடொருவர் பிணைந்து மற்போர்புரிதலுக்கு நீலவானில்

வலது புறமாய்ச் சுழன்று நட்சத்திரங்களோடு கலந்து செல்லுங் கிரகங்களையும், அச்செம்படவர் தம்முடைய குடிசைவீடுகளில் தூண்டிற் கோலையும் மீன் இடும் புட்டிலையுஞ் சார்த்தி வைத்திருப்பதற்குப் போர்க்களத்தி லிறந்த வீரனுக்கு நிறுத்திய கல்லின் எதிரிலே ஊன்றிய வேலையும் கேடகத்தையும், அவர்தம் குடிசை வீட்டு முற்றத்தில் வெண்மணலிலே வலையை உலரவைத் திருப்பதற்கு நிலவின் இடையிலே சேர்ந்த இருளையும், செக்கச் சிவந்த நீரையுடைய காவிரியாறு கடலோடு கலத்தற்குக் கரியமலையைச் சேர்ந்த செக்கர் மேகத்தையும் தாயின் தன்னியத்தைத் தழுவிக் கிடந்த மகவையும், சுங்கச்சாவடியிலுள்ள காவலாளர் இரவும் பகலும் ஒழியாது தங்கடமை செய்திருத்தற்கு சூரியன் றேரிற் பூட்டப்பட்டு இடையறாது செல்லும் குதிரையையும், மரக்கலத்தில் வந்த சரக்கைக் கடலினின்று கரையிலேற்றுதற்கும் கரையிற் கிடந்தவற்றைக் கடன்மேற் கப்பலி லேற்றுதற்கும் மேகம் கடலில் முகந்த நீரை மலையிற் பொழிதலையும் அங்ஙனம் மலையிற் பொழிந்த நீர் பின் கடலிற் சேறலையும், கடற் கரையிற் பண்டசாலை முற்றங்களிலே அடுக்கிக் கிடக்கும் மூட்டைகளின்மேல் ஆண் நாய்களும் ஆட்டுக் கிடாய்களும் எறிக் குதித்து விளையாடுவதற்கு மலைப் பக்கங்களிலே ஏறிக் குதிக்கும் வருடை மான்களையும், பெண்கள் முருகவேளைத் தொழுதற் பொருட்டாகத் தலைமேற் குவித்த தொடிக்கைகளுக்குக் காந்தட் செடியின் கணுக்களிற் கிளைத்த கவிந்த முகைக்குலைகளையும், தெருக்களின் இருபுறத்தும் நாட்டப்பட்ட துகிற்கொடிகளுக்கு யாற்றின் இரு கரையினுமுள்ள கரும்பின் பூவையும், காவிரிப்பூம் பட்டினக் கடற்றுறை முகத்தில் அசைந்துகொண்டிருக்கும் மரக்கலங்களுக்குக் கட்டுத்தறியை அசைக்குங் களிற்றி

யானைகளையும், வேளாளரது நடுவு நிலைமைக்கு நுகத்தடியிற் றைத்த பகலாணிக் கட்டையினையும், கரிகாற்சோழன் இளைஞனாயிருந்தபோது பகைவரது சிறைக்களத்தில் அடைக்கப்பட் டிருந்தமைக்குக் கூட்டிலடைக்கப்பட்ட புலிக்குட்டியினையும், பின் அவ்வரசிளைஞன் அச்சிறைக் களத்திற் காவலரை யெல்லாங் கடந்துபோய்த் தன் அரசுரிமையினைக் கைப்பற்றியதற்குக் குழியில் விழுந்த ஆண் யானை அக்குழியினைத் தூர்த்து மேலேறிப்போய்த் தன் பெட்டை யானையைச் சேர்ந்தமையும், போர்க்கடையாளமான பூளைப்பூவும் உழிஞைப்பூவுஞ் சூடிவந்த படைக்குக் குற்றுச்செடி பம்பிய கருங்கற்பாறையினையும், போர்முரசின் வாய்க்குப் பிதுங்கின பேயின் கண்ணையும் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் ஆண்டாண்டு உவமைகூறி இப் பாட்டை மிகவுந் திறம்பட அமைத்தது காண்க.

இன்னும் இவர் உலகியற் பொருள்களைக் கிடந்தவாறே வைத்து உரைவிரிக்கு மிடத்தும், குடகமலையிற் றோன்றிய காவிரியாறு என்றும் சோழநாட்டின்கண் நீர் அறாது நிரம்பிப் பொன் கொழித்து ஒழுகுதலும், கழனிகளெல்லாம் எப்போதும் விளைந்துகொண் டிருப்பக் கரும் பாலைகளிற் கரும்பை நறுக்கிப் பிழிந்து பாகு காய்ச்சலும், எருமைக் கன்றுகள் நெற்கூடுகளின் நீழலிலே ஆங்காங்கு உறங்கிக் கிடத்தலும், தென்னை வாழை கமுகு மா பனை மஞ்சள் இஞ்சி சேம்பு முதலியன மிகவுங் கொழுமையாய் நெடுக வளர்ந்து அடர்ந்திருத்தலும், சிறு பெண்கள் வீட்டு முற்றத்தில் நெல்லுலரவைத்துக் காவலா யிருப்பச் சிறார் சிறுதேர் செலுத்தி விளையாடுதலும், கடற்கரை உப்பங் கழிகளிலே படகுகள் வரிசையாகநிற்றலும், கடற்கரையிற் கானற்சோலை வளஞ் சிறந்து தோன்றுதலும், மலர்த்தடாகங்கள் ஏரிகள் அடிசிற்சாலைகள் அரண்மனைகள் மாட்டுக்

கொட்டில்கள் பௌத்தர் சைனர் மடங்கள் காளிகோயில்
கள் முதலியன ஆங்காங்கிருத்தலும், செம்படவர் குப்பங்
களிலே இறாமீன் சுட்டுத் தின்றும் வயலாமையைப் புழு
க்கி உண்டும் அடம்பு ஆம்பல் முதலியவற்றின் பூக்கள் சூடி
யும் ஒருவரோ டொருவர் மற்போர் புரிதலும், அவர்கள்
ஒருவரோ டொருவர் செருக்குற்றுக் கவண்கல்வீச அவற்
றிற்கு அஞ்சிப் பனைமரங்களிலுள்ள புட்கள் பறந்துபோத
லும், அச்செம்படவரது புறச்சேரியில் பன்றிகளுங் கோழி
களும் உலாவ ஆட்டுக் கிடாய்களும் கௌதாரிப் பறவை
களும் விளையாட உறைக் கிணறுகள் பல இருத்தலும்,
சிறு குடிசை வீடுகளினுள்ளே தூண்டிற்கோலும் மீனிடும்
புட்டிலுஞ்சார்த்திவைக்கப்பட்டிருத்தலும், அவ்வீட்டு முற்
றங்களின்மணலிலேவலைகள்உலர்தலும், அங்குள்ளபரவரும்
பரத்தியரும் முழுநிலவு நாளிலே சுறாமீன்கொம்பைநட்டுக்
கடற்றெய்வத்திற்குத் திருவிழாக்கொண்டாடுதலும், நகரத்
துள்ளமாந்தர் மேன்மாடங்களில் யாமத்திற் பலவகையான
இன்பந்துய்த்து உறங்கினமையால் அவியாதுவிட்ட விளக்
கங்களைக் கட்டுமரத்தில் மீன்பிடிக்கப்போய் வைகறையில்
வந்தபரதவர் எண்ணிப்பார்த்தலும், கடையாமத்தில் அப்பர
தவர் கடற்கரை எக்கர்மணலிலே உறங்கிக்கிடத்தலும், சுங்
கச்சாவடியிற்சுங்கங்கொள்ளுங்காவலர் அளவிறந்தபண்டங்
களையெல்லாம் தம்அறிவால் அளந்துபார்த்துச் சோழனுக்கு
ரிய புலிமுத்திரையிட்டுப்போக்கித் தங்கடமைவழாது செய்
தலும், பண்டசாலை முற்றங்களிலே மலைபோல் அடுக்கப்பட்
டமூட்டைகளின்மேல் நாயும் ஆட்டுக்கிடாயும் ஏறி விளையா
டுதலும், நகரத்திலுள்ளமகளிர் முருகவேள் திருவிழாவைக்
கண்டு தொழுதற்பொருட்டு மேல் மாடங்களிற் சாளரவா
யிலைப்பொருந்திநின்று கைகூப்புதலும், அந்நகரமெல்லாம்
பலநிறப்பட்ட கொடிகள்நாட்டப்பட்டு விளங்குதலும்,

பருமாவிலிருந்துவந்த குதிரைகள் மலையமாநாட்டிலிருந்து வந்த மிளகுபொதிகள் இமயமலையிலிருந்துவந்த பலவகை இரத்தினங்கள் பொதியமலையிலிருந்துவந்த சந்தனஅகிற் கட்டைகள் இலங்கைக்கடலில் எடுத்தமுத்துகள் கீழ்க்கட லினின்றுங்கொணர்ந்த பவளங்கள் கங்கை காவிரி ஈழம் முதலிய விடங்களிலிருந்துவந்த உணவுப்பொருள்கள் முத லியனவெல்லாம் கடைத்தெருவுகடோறுந் தொகுக்கப்பட் டிருத்தலும், புலான்மறுத்துப் பொய்யா வொழுக்கமேற் கொண்டொழும் வேளாளர் பலதிறப்பட்டார்க்கும் உதவி புரிதலும், பலதேயத்தினின்றும்வந்த மக்கள் ஒருவரோ டொருவர் அளவளாவியுறைதலும், கரிகாற்சோழன் பகை வரிட்ட சிறைக்களத்தினின்றுந் தப்பிப்போய்ப் பின்அப்ப கைவர்மேற் படைதிரட்டிவந்துவந்து அவர்நாடுநகரங்களைப் பாழ்படுத்தினமையால் அவருடைய பொய்கைகள் மன்றங் கள் அரண்மனைகள் நகரங்கள் முதலியனவெல்லாம் வெ றும் பாழாய்க்கிடத்தலும், அங்ஙனம் வெற்றியிற்சிறந்து போந்து தன்நகரத்தில் அத்தாணிமண்டபத்தில் அவன்வீற் றிருக்குங்கால் பலதேயமன்னரும்போந்து அவன்மருங்கிரு ந்து அவனேவிய தொழில்கேட்டுநிற்றலும், பகைவர்க்கு இன்னனாயினும் தன்னோ டொருமையுடையாரிடத்து அவன்மிக்க அன்புடையனா யொழுகுதலும் பிறவும் நம்மன க்கண்ணெதிரே அரும்பெறல் ஓவியமெழுதிக் காட்டினாற் போல் அழகுகனிய விளக்கிக்காட்டியவாறுங்காண்க. இங் ஙனம் உலகவியற்கைப் பொருள்களுள்ளும் அழகான்மிகச் சிறந்தவற்றையே தெரிந்தெடுத்து அவைதம்மைத் தமது நுண்ணறிவால் பொருந்தக்குழைத்துத் தம்அருமைத்திரு வாக்கால் நம்நெஞ்சப்படாத்தில் அமைதிபெறப் பொறித் துப் பட்டினப்பாலைஇயற்றிய ஆசிரியர் உருத்திரங்கண்ண னாரதுநல்லிசைப்புலமை செந்தமிழ்ப் புகழ்மைக்கு ஒரு நந் தா மணிவிளக்காமென்க.

இனி இவ்வாசிரியர் உலகவியற்கைப் பொருட்டோற் றங்களை இடையறாது திரிந்துகண்டு வியந்து கழிபெரு மகிழ்ச்சியெய்தி வந்தனரென்பது இப்பாட்டின்கட் டெற் றெனப்புலப்படுகின்றது. வானம்பாடிப்பறவைமழைத்துளி யையுண்டுயிர்வாழுமென்பதும், குயிற்பறவையுந் தாது ணம்புறவும் அணித்துள்ள காளிகோட்டத்தில் ஒதுங்கி யிருக்குமென்பதும், செம்படவர்சேரியிற் கோழிகௌதாரி முதலியபுட்களிருக்குமென்பதும், பாழ்பட்ட இடங்களிலே கூகை கோட்டான்கள் உறையுமென்பதும் இவரால் மிக வும் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் எரு மைக்கணங்கள் மருதநிலத்திற் கிடத்தலும், களிற்றியானை கள் வெண்ணெற்றிற் புரளலும், மாடுகள் கொட்டில்களில் தொகுதி தொகுதியாக நிற்றலும், இறாமீன்கள் ஆமை யிறைச்சிகள் செம்படவரால் தின்னப்படுதலும், பன்றியுங் குட்டிகளும் அவர் சேரியில் மிகுதியாயிருத்தலும், சுறா மீன் கொம்புகளை அவர் வழிபடுதலும், நண்டைப் பிடித்து ஆட்டுதலும், மலைப்பக்கங்களில் வருடை என்னும் ஒரு சாதிமான்கள் துள்ளிக்குதித்தலும், ஆட்டுக்கிடாய்கள்பண் டசாலை முற்றங்களிற் றிரிதலும், கட்டுத்தறியிற் பிணிக் கப்பட்டுநின்ற களிற்றியானைகள் அவற்றை யசைத்தலும், பரதவர் தங்குடிசைவீடுகளில் மீன்கறியும் ஆட்டிறைச்சி யும் பொரித்தலும், குழியில் வீழ்ந்த யானை அக்குழியைத் தூர்த்தலும், பொய்கைகளில் முதலைகள் கிடந்துலாவுத லும், நீர்வற்றிய வாவிகளில் அறல்பட்ட கொம்புகளுடைய மான்கள் துள்ளுதலும் அங்ஙனமே சொல்லப்பட்டிருக் கின்றன; மற்றும் நெய்தல் அடம்பு ஆம்பல் தாழை வெண் கூதாளம் காந்தள் கரும்பு பூளை உழிஞை குவளை முதலிய பூக்களும், தெங்கு வாழை கமுகு மா பனை முதலிய மரங் களும், மஞ்சள் சேம்பு இஞ்சி புதவம் செருந்தி முதலிய

செடிகளும் இவ்வாறு புனைந்து கூறப்பட்டிருக்கின்றன. இவை தம்மால் இவ்வாசிரியர் உலகவியற்கையினை வழாது திரிந்துகண்டு வியக்கு மியல்புடையா ரென்பது தெற்றெனப் புலப்படுகின்றதன்றோ?

இனி இவர் இயற்றமிழ்வல்ல நல்லிசைப் புலவராதலோடு வானநூலினும் * வல்லவராகக் காணப்படுகின்றார். இவர்தாம் இயற்கைப் பொருள்களை வருணித்துச் செல்லுங்கால் அவை தமக்கு வான்மீன் றோற்றங்களை உவமையாக எடுத்துக்காட்டுகின்றார்; மழைபெய்யாது வறத்தற்குச் சுக்கிரன் என்னுங்கோள் தன்னிலைதிரிந்து தென்றிசைப் பக்கமாய்ச் செல்லுதலே காரணமென்கின்றார்; திங்களைச் சூழ்ந்தமகமீனை நீர்நிரம்பிய தடாகத்திற்கும் அதன்கரைக்கும் உவமையாகக் கூறுகின்றார்; நட்சத்திரங்களுங் கிரகங்களும்ஒன்றோடொன்று விரவுதலை ஒருவரோடொருவர் பிணைந்து மற்போர்இயற்றும் செம்படவர்க்கு உவமையாக எடுக்கின்றார். அற்றேல், அக்காலத்து வானநூலாராய்ச்சி உண்டோவெனின்;— இற்றைக்கு ஆயிரத்துநானூறு வருடங்கள்முன்னிருந்த வராகமிகிராரால் செய்யப்பட்டவான நூலில் பிற்றைஞான்றை வானநூலாராற் சொல்லப்படுகின்ற'சூரியனைப் பூமிசுற்றுதல்' 'பூமி ஓர் உருண்டைவடிவாகஇருத்தல்' முதலிய அரியபெரிய உண்மைகள் இனிது விளக்கப்பட்டிருத்தலானும், அவ்வராகமிகிராற் பிரமாணமாகக் கொள்ளப்பட்ட சூரியசித்தாந்தம் என்னும் வானநூல் மிகப்பழையதொன்றுதல் அறிவுடையாரால் துணியப்படுதலானும் † பண்டைநாளில் வானநூலாராய்ச்சி மிகுதியுமுண்டென்பது தேற்றமாமென்க. பண்டைக்காலத்

* Astronomy.

† Dr. Kern.

இருந்த தமிழ்ப்புலவர் இலக்கணஇலக்கியம் வல்ல......
லொடுவேனைத்தத்துவநூற்புலமையும் உடன்வாய்ப்பப் பெற்றிருந்தார். ஒருசாரார்இசைத்தமிழும் பிறிதொருசாரார் நாடகத்தமிழும்மற்றொருசாரார் ஓவியநூலும்வேறொருசாரார் மருத்து நூலும், பின்னொருசாரார் வானநூலும், மற்றை ஒருசாரார் சமயநூலுமாகப் பலப்பலபயின்று விளங்கினர்; அவரவர்க்குச் சிறப்புப்பெயர்களாய் அவரவரியற்பெயர்களோடுகூட்டிவழங்கும் மருத்துவன் றமோதரனர், மதுரைக்கணக்காயனர் என்றற் றொடக்கத்தனவே இதற்குச சான்றுமென்க. இன்னும் இவைவிரிக்கிற்பெருகும்.

இனி இவ்வாசிரியர் இப்பாட்டை இயற்றுமிடத்துப் பயில்வோருணர்வு சலிப்படையாவாறுய் எவ்விடத்துப் பொருளை எவ்வளவுகூறுதல் வேண்டுமோ அவ்வளவே கூறிப்போதலானும், அங்ஙனம் அப்பொருளை அழகுபெறக்கூறுமிடத்தும் பயில்வோர் 'இஃதெப்படிமுடியும் இஃதெப்படிமுடியும்' என்றுமேன்மேல் விடாதுசெல்ல அவர்க்கு முடிவுதெரி வேட்கையினை எழுவித்துக்கொண்டுபோய் இப்பாட்டை முடிக்குமாறு முதலிலேயே இனிதுவிளக்கப் பட்டமையானும் இவர்நுட்பவறிவும் மனேபாவக உணர்சசிவலியும் அளக்கற்பாலன வல்லவென்க.

## இப்பாட்டின்கட் டோன்றிய பழையநாள் வழக்கலொழுக்கச் சரித்திரக் குறிப்புகள்.

இந்நூலுள்பௌத்த சமணக்குருக்கள் உறையும் மடங்கள் குறிக்கப்பட்டிருத்தலால், இஃது எழுதப்பட்ட காலத்துப்பௌத்தசமணமதங்கள் கிரம்பவும் பிரபலமாயிருந்தனவென்பது இனிதறியப்படுகின்றது. இந்நூலெழுதப்பட

தற்கு இருநூறுவருஷங்கள்முன் செங்கோலோச்சிய அசோகன்என்னும் பௌத்தவேந்தன் பௌத்த உபந்நியாசகர் பலரைப்பலதிசைகளுக்கும் பலதேயங்களுக்குஞ் செலவிடுத்து, ஆங்காங்குப் பௌத்தசமய அறவுண்மைகளை மிகவிரித்து விளக்குவித்து அவைதம்மைநிலைபெறுவித்து வந்தானென்பதும், சேர சோழபாண்டியமன்னர் அரசுபுரிந்த தமிழ்நாட்டிலும் அங்ஙனமே அச்சமயம் நிலைநாட்டப்பட்டதென்பதும் அவ்வசோகமன்னன்செதுக்கிய கல்வெட்டுகளால் * நன்குபுலப்படுதலானும், இந்நூலெழுதப்பட்டபின் நானூற்றைம்பது வருடங்கழித்து இந்தியாவிற்குவந்த பாகியான் என்னுஞ் சீனவித்தியார்த்தியின் காலத்திலெல்லாம் பௌத்தசமயம் மிகவுஞ்செழிப்புற்றிருந்ததென்பது அவ்வித்தியார்த்தியின் பிரயாணக்குறிப்புகளால் இனிது துணியப்படுதலானும் அசோகன்காலத்திற்குச்சிறிதுபிற்றோன்றிய இந்நூலின்கண் அப்பௌத்தமடங்கள் குறிப்பிக்கப்பட்டமை மிகவும் பொருத்தமுடைத்தாமென்க.

அற்றேல், சமணமதமும் அப்போதிருந்ததெனக்கூறியதென்னையெனின்;— பௌத்தசமயம் நிலவுங்காலத்து அதனோடுசமணமதமும் உடன்நிலாவிற்றென்பதற்கு மிகப் பழையவான ஜைனசூத்திரங்களும் †, மணிமேகலைக்காப்பியமும், பௌத்தர் உபதேசவாய்மொகழிளுமே சான்றாமாகலின் அதுவும் முன்னுண்டெனல் துணிபொருளேயாம்.

இனி ஆரியமுனிவர் பலர் பிராமணங்களிற் சொல்லப்பட்டவேள்விகள்பல வேட்டுவந்தன ரென்பதும் இதன்கட்குறிக்கப்பட்டிருக்கின்றது. போர்க்களத்தில் அஞ்சாது

* Asoka's edict V, XIII.

† Prof. Jacobi's introduction to Jaina Sutras. Asoka's edict, VIII, XI.

எதிர்நின்று போர்மலைந்து பகைவன்வாளாற் போழப்பட்டு இறந்த அரியமறவனை நினைவுகூர்தற்பொருட்டு அவனைப் போல் உருக்கிரட்டிய கருங்கல்லைநட்டு அதற்கெதிரிலே அவனுடையவேற்படையினைஊன்றிப் பரிசையைத்தொங் கவிடுதல் வழக்கமாயிருந்தது; ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் "என்னைமுன் நில்லன்மின் றெவ் விர்பலரென்னை, முன்னின்று கன்னின்றவர்" என்று இவ் வழக்கத்தைக் குறித்திருக்கின்றார்; சிலப்பதிகாரத்திலுஞ் சேங்குட்டுவனென்னுஞ் சேரமன்னன் கண்ணகிக்குக் கல் நிறுத்தினமை விரித்துரைக்கப் பட்டிருக்கின்றது.

இனி இற்றைநான்றுபோலவே, காவிரிப்பூம் பட்டி னக்கடற்றுறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிசெய்யும் பண்டங்களையெல்லாம் பாதுகாத்து அவற்றிற்குக்கடமை இவ்வளவென்று வரம்பறுத்துச் சோழவேந்தன் அடையா ளமான புலிமுத்திரையிட்டுச் சுங்கங்கொள்வோர் தந் தொழில்மாறாதுசெய்துவந்தனர். இதனால் இற்றைக்கு இர ண்டாயிரமாண்டுகளுக்குமுன்னரே தமிழரசர் செலுத்திய செங்கோலரசுமுறைகள் மிகவுந்திருத்தமாகவும் ஒழுங்காக வும் நடைபெற்றுவந்தனவென்பது புலனாகின்றது.

இனி அக்காலத்துவீடுகள், படிகள்வைத்துக்கட்டப் பட்ட உயர்ந்ததிண்ணைகளும் பலகட்டுக்களும் சிறுவாயில் பெருவாயில் இடைகழிமுதலியனவும் அமைந்தனவாயும் மேல்மாடங்கள் பல உள்ளனவாயும் இருந்தன. மேன்மா டங்களிற் செல்வமளிர் இருப்பரென்பதும் விளங்குகின் றது.

இனிக் காவிரிப்பூம்பட்டினம் முதலான நகரங்களி னும் நாடுகளினும் முருகக்கடவுளைவழிபடுதலும் அவர்க்குத் திருவிழாக்கொண்டாடுதலுமே பெரும்பான்மையா யிருந்

தது. இதற்குத்திருமுருகாற்றுப்படை முதலான பழைய நூல்களுஞ்சான்ரும். எனவே, முருகக்கடவுள்வழிபாடு மிகவுந் தொன்றுதொட்டு நடைபெறுவதென்பது பெறப்படுகின்றது.

இனி அக்காலக் காவிரிப்பட்டினத்தில் வாணிகம் பெருகுங் கடைவீதிகள்பலவிருந்தன. அவற்றில் அரிசிப் புரைகள், சரக்குஅறைகள், பாக்கு வெற்றிலைக்கடைகள், மெழுக்குப்பொதிந்த பேழைகள், கள்ளுக்கடைகள், மலைய நாட்டுமிளகுபொதிகள், மேரு இமயம்முதலான வடமலைகளினின்றுகொணர்ந்த இரத்தினங்கள் பொன் விற்குங் கடைகள், குடகுமலையிலிருந்துவந்த சந்தனக்கட்டை அகிற்கட்டைகுவித்த மளிகைக்கடைகள், இலங்கைக்கடல் முத்து வங்காளக்கடற்பவளம் கங்கையாற்றுப் பொருள்கள் கடாரதேசத்து உணுப்பொருள்கள் சீனத்துப்பட்டுகள் என இவையெல்லாம் நிறைந்த பெருங்கடைகள் ஆகிய பலவும்நிரம்பி நெருங்கி இருந்தன. இன்னும் பர்மாதேசத்திலிருந்துவந்த குதிரைகள், பந்தியிற்கட்டப்பட்டு விலை செய்யப்பட்டன.

இன்னும் அந்நகரத்தில், பலநூல்களுந் துறைபோகக் கற்ற அரும்பெறல் ஆசிரியர்பலர் ஒருங்குசேர்ந்து தருக்கங்கள் நடாத்திப் பொருளாராய்ந்து இன்புறுங் கலைக்கழகங்களும் * இருந்தன.

இனிக் காவிரிப்பட்டினத்தில், கொலைத்தொழில் நிகழாவாறுசெய்து புலான்மறுத்து வாய்மைபேசுதலே ஒழுகலாருய்க்கொண்டு,தேவர்க்கு வழிபாடுஇயற்றியும் ஆரியர்க்குப்பொருளுதவிபலபுரிந்து அவர்வேள்விகளைநடப்பித்தும்

* Lecture—halls.

நான்மறையோதுவாரை அதுதிறம்பாது செய்யுமாறு நிலை நிறுத்தியும் உலகுநிலைபெறுதற்கான தம் உழவுதொழிலைச் சிறக்கநடைபெறுவித்தும் கொள்வதுமிகைபடாமலுங் கொடுப்பது குறைபடாமலும் வாணிகம்நடாத்தியும் புகழ்மேம்பட்ட பழையவேளாளர் குடியிருப்புப்பல இருந்தன. இதனால், பண்டைநாளில் வேளாளர் பெருஞ்சிறப்புற்றிருந்தார்களென்பதும், ஏனைக்குடிமக்களெல்லாரும் இவர்களுடைய பேருதவியால் உயிர்வாழ்ந் திருந்தனரென்பதும் நன்கறியப்படுகின்றன.

இனித் துருக்கிதேசத்துச் சோனகர் சீனர் யவனர் முதலான பலதேசமக்களும் தமக்குரிய பலபாஷைகளும் வழங்கிக்கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து வாணிகம் நடாத்தி வாழ்ந்தனர். இவரெல்லாம் இங்ஙனம் இந்நாட்டிற் குடியேறி வாழ்ந்தபோது தமக்குட்கலகமின்றி ஒருமையுற்றிருந்தனரென்பதும் இதனாற் றெரிகின்றது.

இனி, முன்னாளில் ஓர் அரசன் பிறனோர் அரசனோடு பொருது அவனை வென்றால் அவன்நாட்டிலுள்ள மகளிரைச் சிறைபிடித்து வருதலுண்டென்பதும், அங்ஙனம் பிடித்துவரினும் அவரைக் கற்பழித்து மானஞ்சிதைத்து வருத்தாமல் பாதுகாத்துக் கோயில்களில் கடவுளைத் தொழுதுகொண்டு அங்கு கடவுட் டிருப்பணி செய்யும்படி இருத்துவர் என்பதும் அறியப்படுகின்றன. இதனாற் பண்டைநாட்டமிழரசர் நீதியரசும் உள்ளப்பெருமையும் இனிது விளங்கற் பாலனவாம்.

இனி முன்னாளில் கடவுளைத்தொழுதல் வேண்டிச் சமைக்கப்பட்ட கோயில்கள் 'அம்பலங்கள்' என்னும் பெயருடையவா யிருந்தன. அவற்றின்கட் கடவுளை வழிபடுதற்குத் தொழுகுறியாக நிறுத்தப்பட்ட உரு கந்து எனப்

பெயர்பெற்றது. அவ்வுருவினையே இக்காலத்திற் 'சிவலிங்கம்' என வழங்கிவருகின்றனர். இந்நாளிற் போல அந்நாளில் மக்களுருப்போற் செய்த விக்கிரகங்கள் பெரும்பாலுங் கிடையா. 'சிவலிங்கம்' எனப்படுகின்ற கந்து உருவையே வழிபட்டுவந்தனர். இச்சிவலிங்க உருத்தான் மிகப் பழையநாட் டொட்டு எல்லாச்சாதியாரானும் எல்லாத்தேயத்தாரானும் வணங்கப்பட்டுவந்ததெனச் சரித்திரவாராய்ச்சிவல்ல பண்டிதர்கள் உரைநிறுவுகின்றார். இதனாலன்றே சிவாலயங்கடோறும் முதன்மையான மூலத்தானத்தே இச்சிவலிங்க அருட்குறியும், முதன்மையில்லா வனை இடங்களில் ஏனைவிக்கிரகங்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நச்சினார்க்கினியருங் 'கந்து' என்பதற்குத் 'தெய்வமுறையுந் தறி' என்றுரை கூறினாராகலின் ஈண்டு அது சிவலிங்கமேயாதல் தெற்றெனத் துணியப்படும். திருமுருகாற்றுப் படையிலும் நக்கீரனார் "கந்துடை நிலையினும்" என்று அருளிச் செய்தமைகாண்க. அற்றேல், நாகரிகம் நிரம்பிய பண்டை நாளில் மக்களுருப்போல் விக்கிரகங்கள் சமைத்து வழிபடாமை என்னை யெனின்;— காணவுங் கருதவும் படாத முதல்வனுக்குத் தாம் நினைந்தவாறு உருவங்கள் சமைத்து வணங்கல் பொருந்தாதாகலின், அப்பரம்பொருளை ஒரு பிழம்பாகக் கொண்டு வழிபடுதற்கு ஓர் அறிகுறியாகப் பிழம்புவடிவான கந்துரு நிறுத்தினரென்க. பிழம்புருவான வழிபாடுபோல் வனை உருவழிபாடுகள் சிறவாமை உண்மை நூல்களுட் கண்டுதெளிக.

இனி முன்னாளில் வேளாளர் அரசராயிருந்து செங்கோல் செலுத்தினாராதலும், அவர் அரசுபுரிந்தநாடு 'ஒளிநாடு' ஆதலும் இதன்கண் விளங்குகின்றன. நச்சினார்க்கினியரும் 'ஒளியாராவார் மற்றை மண்டலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்' என்றுரை விரித்தார். இன்னும் முல்லை

நிலைமாக்களான இடைச் சாதியார்க்குள்ளும் பலர் அரசரா யிருந்தா ரென்பதூஉம் இதன்கட் புலப்படுகின்றது. இங் ஙனமே பதிற்றுப்பத்தில் "ஆன்பயம் வாழ்நர் கழுவுள்தலை மயங்க" என்று போந்த பகுதியினால் கழுவுள் என்னும் ஓர் அரசன் இடைச்சாதியானென்பது பெறப்படுகின்றது.

இவ்விருவகைச் சாதியாரோடு அருவாளநாட்டின் அர சரும் வடநாட்டிலுள்ள அரசரும் குடகுநாட்டி னரசரும் தன்னிடத்து வந்து பணிந்துகிடப்பக் கரிகாற்சோழன் வீற்றிருந்தான். பாண்டிய அரசன் ஒருவனை இவன் வென் றமையும், இருங்கோவேள் என்னும் அரசனை அவன் சுற் றத்தோடும் அழித்தமையும் இக்கரிகாலனுக்குப் பெரு வென்றியாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இஃதொழிய, இவ்வேந்தன் பலநாடுகளை யெல்லாம் அழித்து நகரங்கள் புதுக்கிக் குளங்கள் அகழ்வித்து இளமரக்காவுகள் விளை வித்து நாகரிகம் பெருக்கினானென்பதும், இவனுக்கு முத லில் இராசதானியா யிருந்தது உறையூர் ஆகுமென்பதும், பின் அதனை விடுத்துப்போனாலும் அது பாழ்படாமல் பல நற்குடிகளை ஆங்கு இருத்தி மாடங்கள் மாளிகைகள் முதலான புதுக்கட்டிடங்கள் அமைப்பித்தா னென்ப தும் இப்பாட்டின்கண் விளக்கமாகச் சொல்லப்பட் டிருக் கின்றன.

## பாவும் பாட்டின் நடையும்.

தமிழ் மொழியிலுள்ள செய்யுள் ஓசைஅமைதியே பா என்றுபெயர்பெறுவதாம். ஒருவன் தொலைவிடத்திலிருந்து ஒரு பாட்டுப்பாட அப்பாட்டின் சொற்பொருள் இவை யென்று புலப்படாவாயினும், அவ்வோசை வருமாற்றை

உய்த்துணர்ந்து காண்பானுக்கு அவன் பாடுஞ் செய்யுள் இன்னபாவென்று அறியக்கிடக்கும் இங்ஙனம் நுண்ணிய ஆகாயத்தில் அலைஅலையாய் எழும்பி ஓர் ஒழுங்காக வரும் ஓசையே பாவாகுமெனத் தொல்காப்பியச் செய்யுளியலுரையிலே பேராசிரியரும் நன்குவிளக்கினுர். இவ்வாறுதோன்றிப் பரம்புஞ் செய்யுள் ஓசை முறையைத் தமிழாசிரியர் வெண்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா என நால்வகைப் படுத்தினுர். பின்னும் இந்நால்வகைப் பாவின் ஓசை நெறியை நோக்குமிடத்து வெண்பாவிற் கலிப்பாவும் அகவற்பாவில் வஞ்சிப்பாவும் அடங்குவனவாம். இஃது "ஆசிரியநடைத்தே வஞ்சியேனை, வெண்பா நடைத்தேகலியென மொழிப" என்றும் "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின், ஆசிரியப்பா வெண்பா வென்ருங், காயிரு பாவினுளடங்குமென்ப" என்றும் ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறுமாற்ருன் விளங்கும்.

இவை தம்முள் 'அகவலோசை' என்பது ஒருவன் தான் கருதியன வெல்லாம் வரம்புபடாது சொல்லிக் கொண்டு போம்வழி இயற்கையே தோன்றுந் தொடர்பொலியாகும்; வெண்பாவிற் குரிய 'செப்பலோசை' என்பது ஒருவன்கேட்பப் பிறனெருவன் அதற்குமாறுசொல்ல நடைபெறுஞ் சொன்முறையில் இயற்கையே தோன்றி இடையிடையே நிற்றல்பெற்றுச் செல்லுவதாம். மற்றும் இவற்றில் அடங்கும் வஞ்சிப்பாவிற்குரிய 'தூங்கலோசை' என்பது ஒவ்ஓர் அடிதொறுந் தொடர்புற்று நிறைந்து செல்லும் ஏனை ஓசைகள்போலாது ஒவ்வொரு சீர்தொறு நிறைந்து தெற்றுப்பட்டு நின்றுசெல்வதாகும்; கலிப்பாவிற்குரிய 'துள்ளலோசை' என்பது இசைவேறுபாடு தோற்றி ஓசை, கனிந்து துள்ளித்துள்ளிச் செல்வதாம்.

இனிப் பட்டினப்பாலை என்னு மிப்பாட்டு அகவலோசை தழுவிவந்த ஆசிரியப்பாவினுல் அமைக்கப்பட் டிருக்கின்றது. இச்செய்யுளின்கண் ஆசிரியர் உருத்திரங் கண்ணனுர் தாம் உரைப்பக் கருதியனவெல்லாம் ஒருதொடர்பாக வைத்து முந்நூற்ருேரடிகாறு முரைத்தாராகலின் இப்பாவின்கண் இயற்கையாய் எழுவது 'அகவலோசை'யே யாயிற்று. அற்றேல், "வசையில்புகழ் வயங்குவெண்மீன், திசைதிரிந்து தெற்கேகினும்" என்பவை போன்ற வஞ்சிப் பா அடிகள் இடையிடையேகலக்கத் தூங்கலோசை மயங்கி வந்தவா றென்னையெனின்;— இப்பாட்டின் தலைமுதல் அடிகாறும் அகவலோசையே வந்ததாயின் இடையிடையே ஓசையின்பம் வேறுபடாமல் ஒரோசையாய் நடந்து கேட்பார்க்கு வெறுப்புத் தோற்றுவிக்குமாகலின், அங்ஙனம் வஞ்சிக்குரிய தூங்கலோசையினை ஆங்காங்கு வேறுபடுமாற்ருல் நயமுற இசைவித்துப் பாடுவாராயினர். நாளும் பாலமிழ்தினையே உண்பானுக்கு அதன்சுவை உவர்ப்பாகத் தோன்றுமாகலின், அங்ஙனம் அஃது ஆகாமைப்பொருட்டு இடையிடையே புளிங் கறியுஞ் சுவையாற் பலதிறப்பட்ட மா பலா வாழை முதலிய பழங்களையும் உண்டு அப்பாற் சுவை இனிது நிகழுமாறு செய்வித்துக் கோடல்போல, இப்பாவின் அகவலோசையும் இன்பங்குறையாமைப் பொருட்டு ஆசிரியர் உருத்திரங்கண்ணனுர் தூங்கலோசையினையும் ஆங்காங்கு செறிவித்துப் பாடுவாராயினர்.

இனி இவ்வகவற்பாவின் அடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீர்களாற் கட்டப்பெறுவனவாம்; இந்நாற் சீரடியை ஆசிரியர் தொல்காப்பியனுர் அளவடி எனவழங்குவர். இனி இப்பாட்டின் இடையே மயங்கிய வஞ்சிப்பாட்டின் அடிகள் ஒவ்வொன்றும் இரண்டுசீர்களாற் கட்டப்படுவனவாம்; இவ்விருசீரடியை அவர் குறளடி எனவழங்குவர். இப்பட்டினப்

பாலையின் முதலினின்று இருபத்தோரடிகாறும், இருபத்தேழுமுதல் இருபத்தெட்டுகாறும், முப்பத்திரண்டு முதல் ஐம்பத்துமூன்று காறும், ஐம்பத்தொன்பதுமுதல் அறுபத்தாறுகாறும், எழுபத்தொன்றுமுதல் எழுபத்தாறுகாறும், எழுபத்தெட்டுமுதல் எண்பத்துநான்கு காறும், எண்பத்தாறுமுதல் தொண்ணூற்றொன்றுகாறும், தொண்ணூற்றுமூன்றுமுதல் தொண்ணூற்றுநான்குகாறும், தொண்ணூற்றெட்டுமுதல் நூறுகாறும், நூற்றாறுமுதல் நூற்றெட்டு காறும், நூற்றுப்பதினான்குமுதல் நூற்றிருபத்தேழு காறும், நூற்றிருபத்தொன்பதுமுதல் நூற்றுமுப்பத்தேழு காறும், நூற்றுநாற்பத்திரண்டுமுதல் நூற்றைம்பத்தொன்று காறும், நூற்றைம்பத்தாறுமுதல் நூற்றைம்பத்தெட்டு காறும், நூற்றறுபத்துமூன்றுமுதல் நூற்றெழுபதுகாறும், நூற்றெழுபத்திரண்டுமுதல் நூற்றெண்பத்தொன்று காறும், நூற்றுத்தொண்ணூற்றைந்துமுதல் நூற்றுத்தொண்ணூற்றொன்பது காறும், இருநூற்றொன்றுமுதல் இருநூற்றிரண்டுகாறும், இருநூற்றைந்துமுதல் இருநூற்றெட்டு காறும், இருநூற்றுப் பதினொன்றுமுதல் இருநூற்றுப் பதின்மூன்றுகாறும், இருநூற்றெழுபத்துமூன்று முதல் இருநூற்றெழுபத்தைந்துகாறும், இருநூற்றெழுபத்தொன்பதுமுதல் இருநூற்றெண்பத்துநான்கு காறும், இருநூற்றெண்பத்தாறுமுதல் இருநூற்றுத் தொண்ணூற்றொன்று காறுந் தூங்கலோசை தழீஇவந்த வஞ்சியடிகள் வந்தன. ஏனை நூற்றுமுப்பத்தெட்டுஅடிகளும் அகவலோசை தழீஇ வந்த ஆசிரியப்பாவாமென்க. எனவே, நூற்றறுபத்துமூன்றடிகள் வஞ்சிப்பாவிற் குரியவாயினும், அவை தமக்குரிய தூங்கலோசை ஆசிரியப்பாவிற்குரிய அகவலோசை இடையிடையே சீர்தொறுந் தெற்றுப்பட்டுச் செல்லவருவதே யல்லது அதனின்வேறல்லாமையால் அவ்வோசையான்

நடக்கும் அவ்வஞ்சியடிகள் இவ்வாசிரியப்பாட்டின்கண் வருதற்குப் பெரிதும்இயைபுடையவாம் என்க. இங்ஙனம் அகவலோசையுந் தூங்கலோசையும் பாலுந்தேனுங் கலந்தாற்போலக் கலந்துசெல்லுமாறு இப்பாட்டினை இயற்றிப்பயில்வார்க்குத் தோன்றும் ஓசையின்பம் இடையறாது செல்ல நடாத்திய ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் இசையறிவு மாட்சி மிகவும் வியக்கற்பாலதொன்றாம்.

இனி வஞ்சி அடிகள், அகவலடிகளை ஆண்டாண்டு ஒருசேரக் கூறுமிடத்தும் அவை ஓரோசையாகச் செல்லவொட்டாமல் எதுகை, மோனைமுதலிய சொல்லமைதிகளானுஞ் சிறிதுசிறிது ஓசை வேறுபடுத்துப் போகின்றார். "பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ, திருஞ்செருவினிகன் மொய்ம்பினோர்" என்புழிப்போலச் சிலவிடத்து இவ்விரண்டடிகள் முதற்சீர்எதுகை ஒன்றப்பொருத்துகின்றார். வேறுசிலவிடங்களில் "சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, யாறுபோலப் பரந்தொழுகி,யேறுபொரச்சேறாகித், தேரோடத்துகள் கெழுமி, நீறாடிய களிறுபோல, வேறுபட்ட வினையோவத்து" என்புழிப்போல இரண்டடிகளின் மேலும் முதற்சீர் எதுகைபொருந்த அமைத்திடுகின்றார். பின்னுஞ் சிலவிடத்து "வான்பொய்ப்பினுந்தான்பொய்யா" "கொழும்பல் குடிச்செழும்பாக்கத்து" "நெல்லொடுவந்தவல்வாய்ப் பஃறி, பணைநிலைப்புரவியினணைமுதற் பிணிக்கும்" என்றாற்போல ஓரடியினுள்ளேயே முதற்சீரும்இரண்டாஞ்சீரும், முதற்சீரும் மூன்றாஞ்சீரும் எதுகைபொருந்தப் பாடுகின்றார். ஓரோவிடத்து அகவலடியில் "வாரேன்வாழியநெஞ்சேகூருகிர்" "நுண்ணிதினுணரநாடிநண்ணார்" "பெற்றவை மகிழ்தல்செய்யான் செற்றோர்" என்றாற்போல முதற்சீரும் நான்காஞ்சீரும் எதுகைபொருந்த அமைத்திடுகின்றார். மற்றும் ஓரோவிடத்து "மாத்தானைமறமொய்ம்பிற், செங்

கண்ணுற் செயிர்த்துநோக்கி” என்புழிப்போல எதுகை யின்றி முதற்சீர் இரண்டாஞ்சீர் மோனை ஒன்றவும், “விசி பிணிமுழவின் வேந்தர்சூடிய” என்புழிப்போலமுதற்சீரும் மூன்றாஞ்சீரும் மோனை ஒன்றவும் இயைத்திடுகின்றார்.

இனி ஆசிரியர் தம்மாற்பாடப்படும் பொருள்வழியே தம் அறிவைவைத்து மொழிந்துபோகுங்கால் இடர்ப்படாதுதோன்றும் எதுகை மோனைகளையே அமைத்திடுகின்றார். பொருளுரைக்கேற்ற எதுகைமோனை எளிதிற்றோன்றாவிடத்து எதுகைபோல ஓசைபொருந்துஞ் சொற்களைப் பதித்திடுகின்றார்; இதற்குக் “கார்க்கரும்பின் கமழாலைத், தீத்தெறுவிற் கவின்வாடி” “இனமாவினிணர்ப்பெண்ணை, முதற்சேம்பின் முளையிஞ்சி” “முனைகெடச்சென்று முன் சமமுருக்கித், தலைதவச்சென்று தண்பணையெடுப்பி” என்றற்றொடக்கத்து அடிகள் எடுத்துக்காட்டாம்; இவற்றுள், கார்க்கரும்பு: தீத்தெறுவு, இனமாவின்: முதற்சேம்பின், முனைகெட: தலைதவ என்பன உண்மை எதுகை யல்லாவிடினும் அதுபோல் ஓசைஒன்றி யிருத்தல்காண்க. இன்னும் ஒரோவிடத்துஇவ்வோசைப்பொருத்தமுடைய சொற்கடானும் எடுத்தபொருளுக்கு அடுத்துநில்லாவிடின்எதுகைமோனை சிறிதுமின்றியுஞ் சொற்களை யமைத்துச் செல்கின்றார்; இஃது, “உணவில்வறுங்கூட்டுள்ளகத்திருந்து, வளைவாய்க் கூகைநன்பகற்குழறவும்” “தேர்பூண்டமாஅபோல, வைகறொறுமசைவின்றி, உல்குசெயக் குறைபடாது” என்பவற்றிற்காணப்படும். இங்ஙனம் பொருளுக்கு இசையச்சொற் பொருத்தும்முறை இவ்வாசிரியரோடொருகாலத்தினரும் இவர்க்குமுன்னோருமான பண்டைச்செந்தமிழ்த் தண்டா நல்லிசைப்புலவர் தமக்கெல்லால் பொதுவிலக்கணமாம். பிற்றை ஞான்றைத் தமிழ்ப்போலிப்புலவரோ பொருட் சிறப்புச்சிறிதுயின்றி வெறுஞ்சொல்லாரவார அமைப்பிலே

யே தம்அறிவைக்கழித்துத் தெளிதமிழுக்குந்தமக்கும் இழு க்கந்தேடுவாராயினர்; அங்ஙனம் அவர்செய்தல் உயிரகத் தில்லாப்பிணவுடம்பைப் பலவகையால் அலங்கரித்துக்கண் டுமகிழ்தலோ டொக்குமாகலின், அவர் இசையாப்புலமை அறிவுடையார்க்கெல்லாந் துயரந்தரும் நீர்மைத்தாமென் றொழிக.

இனி இப்பாட்டின் நடையழகு மிகவும் போற்றற்பால தொன்றும். இனியதெளிதமிழ்ச் சுவையூறிய முழுமுழுப் பதங்களால் இப்பாட்டு முற்றும் அமைந்திருக்கின்றது. அவற்றின்கட் டொடர்புபட்டு எழூஉம் இன்னோசை குழல் யாழ் முதலிய கருவிகளினின்று போதரும் ஒலிபோல் மிக வுந் தித்தியாநின்றது. இவற்றைப் பயிலுங்காலத்து நம் அறிவு அம்மெல்லோசை வழிச்சென்று உருகி மிகவும் பரி சுத்தமான மேலுலகத்தில் உயரப்போகின்றது. நீர் யடை யிலே தெள்ளத்தெளிந்த அருவிநீர் திரண்டு ஒழுகுதல் போல இச்செய்யுளோசையும் மெல்லென்று மொழுமொழு வெனச் செல்கின்றது. "மதிநிறைந்த மலிபண்டம், பொதி மூடைப்போரேறி" "மயிலியன் மானோக்கிற், கிளிமழலை மென்சாயலோர், வளிநுழையும் வாய்பொருந்தி" "குழலு கவ யாழ்முரல, முழவதிர முரசியம்ப, விழவறு வியலாவ ணத்து" "மாயிதழ்க்குவளையொடுநெய்தலுமயங்கிக்,காராங் கலித்த கண்ணகன் பொய்கைக், கொழுங்காற் புதவ மொடு செருந்திநீடிச், செறுவும் வாவியுமயங்கி நீரற், றறு கோட் டிரலையொடு மான்பிணையுகளவுங், கொண்டிமக ளிருண்டுறை மூழ்கி, யந்திமாட்டிய நந்தாவிளக்கின், மல ரணிமெழுக்கமேறிப் பலர்தொழ, வம்பலர் சேக்குங் கந்து டைப்பொதியில்" என்றற் றொடக்கத்துச் சில அடிகளை நோக்கினும் இச்செய்யுளின் மெல்லென்ற ஓசையினிமை நன்கு விளங்கும். மாம்பழச் சாறுபெய்த குடுவையின் எப்

பக்கத்தே பொத்திட்டு நாவைநீட்டினும் அதன்வழியே யொழுகும் அச்சாறு தித்தித்தல்போல, இவ்வரிய செய்யு ளின் எவ்விடத்தே அறிவுதோயினும் ஆண்டு இனிமையே விளையாநிற்கின்றது. ஆதலால், எடுத்துக்காட்டிய இவ்வடி கள் மாத்திரமே சுவை கனிந்திருப்பனவென்று நினைதல் இழுக்காமென்க.

இதன்கண்ணுள்ள ஒவ்வொரு சொற்களும் பொருட் கருநிரம்பிக் கொழுந்தீயிற்றெறித்த பொறிபோல் நம்மறி வைக் கொளுத்திப் பலபொருட்டோற்றங்காட்டி விளங்கு கின்றன. பயன்படாது நிற்குஞ்சொல் ஒன்றாயினும் இதன் கட் காணப்படுவதில்லை. விலைவரம்பறியாப் பட்டாடையின் கண் ஒவ்வோர் இழையும் பிணைந்துநின்று அவ்வாடையினை ஆக்குதல்போல, இதன்கண் ஒவ்வொருசொல்லும் ஒன்றை யொன்று கௌவிக்கொண்டு இச்செய்யுளை ஆக்குகின்றது. பெயர்வினைச்சொற்களை விசேடித்துநிற்கும் அடைமொழித் தொடர்களெல்லாம் உடம்போடு கூடிய உறுப்புப்போல் இசைவுபெற்றிருக்கின்றன. இன்னும் இப்பாட்டின் சொன் னயம் பொருணயங்கள் விரிப்பிற்பெருகும்.

இனி இப்பாட்டின்கட் சிறிதேறக்குறைய ஆயிரத்து முந்நூற்றறுபத்துநான்கு சொற்க ளிருக்கின்றன. இவற் றுட் பதினாறுசொற்கள் வடசொற்களாம்; அவை திசை, மகம், காமம், சாலை, அங்கி, ஆவுதி, பூதம், மது, பருவம், பலி, அமரர், கங்கை, புண்ணியம், சமம், மதம், தெய்வம் என்பனவாம். 'ஞமலி' என்னும் ஒருசொல் பூழிநாட்டிற் குரிய திசைச்சொல்லாம். ஆகவே, இப்பாட்டில் நூற்றுக்கு இரண்டுவிழுக்காடு பிறநாட்டுச்சொற்கள் கலந்தனவென் பது அறியற்பாற்று. இதனால் இவ்வாசிரியர் காலத்திற் றமிழ் மிகவுஞ் சுத்தமாக வழங்கப்பட்டு வந்ததென்பது புலப்படும் என்க.

## விளக்க உரைக்குறிப்புகள்.

இப்பட்டினப்பாலையின் உரைக்குறிப்புகள் சில ஈண்டெழுதுதற்குமுன், இதன் பொருள்கோள் முறையினைச் சிறிது விளக்குதல் இன்றியமையாது வேண்டப்படுவதாகலின் அதனை இங்கு ஒருசிறிது தெளித்துரைக் கின்றாம்.

**மாட்டு:** பத்துப்பாட்டுக்களில் ஒன்றாகிய இப்பட்டினப்பாலையும் இதனோடு சேர்ந்த ஏனை ஒன்பது பாட்டுக்களும் பொருட்டொடர்புற்று மிகநீண்டு அமைந்தனவாம். ஒரு சங்கிலியிற் பலகண்கள் இருத்தல்போல இப்பாட்டுக்களிடத்தும் அகன்றுநின்று பொருள்பொருந்துகின்ற இடங்கள் பல உளவாம். ஒருபொருள் ஓரிடத்துச்சென்று ஒருவாற்றான்முடிந்தும் முடியாமலும் நிற்பப், பிறிதொருபொருள் அவ்விடத்தினின்றுந் தோன்றி நடந்துபோய்ப் பிறிதோரிடத்து முடிந்தும் முடியாமலும் நிற்ப இங்ஙனமே இடையில் வருவனவெல்லாம் அமையக் கடைசியில் அப்பாட்டின்பொருள் முற்றுப்பெறுவதாகும். இவ்வாறு இடையிடையே முடிந்தும் முடியாமலும் நிற்கும்பொருள்கள் கடைசியாக அப்பாட்டின்கட்கருக்கொண்ட முதற்பொருளைச்சார்ந்து முடியுமாகலின் அவை **சார்புபொருள்கள்** என்று பெயர்பெறுவனவாம். இச்சார்பு பொருள்களோடு கூடிச் சிறந்துவிளங்கும்பொருள் **முதற்பொருள்** எனப்படுவதாம். முடியணி வேந்தனொருவன் அரதனங்குயிற்றிய செங்கோல் கைப்பற்றி அரியணைவீற்றிருப்ப, அவனைச் சார்ந்துநின்று அவன் பரிவாரமெல்லாம் விளங்கினாற்போல ஒருபாட்டின்கட் கருக்கொண்டமுதற்பொருள் அதற்கு ஒருயிராய்ச்சிறந்து நிற்ப ஏனைச்சார்பு பொருள்களெல்லாம் அதனைச் சூழ்ந்துகொண்டு அதனைவிசேடித்து விளங்கச்

செய்விப்பனவாம். சில்லொளி வீசும் வான்மீன்கள் சூழவிருந்தாலல்லது பல்லொளிவீசும் பான்மதிவிளக்கம்சிறவாதாகலின், சார்புபொருட்சேர்க்கையின்றி முதற்பொருள் சிறப்புடைத்தாய் நிகழாதென்க. ஆகவே, இங்ஙனம் ஒரு பாட்டின்முதற்பொருளைச் சிறப்பித்துக்கொண்டுஅமைந்து கிடக்குஞ்சார்புபொருள்கள்இப்பெரும்பாட்டுகளில்அகன்று நிற்குமாகலின், உரைகூறலுறும் ஆசிரியன் அவைதம்மையெல்லாம் அணுகியநிலையில்வைத்துப் பொருளுரைக்கு நெறியினையே தொல்லாசிரியர் **மாட்டு** எனவழங்கினர். ஆங்கிலத்திலும் **மில்டன்** என்னு நல்லிசைப்புலவர் **துறக்க இழப்பு** என்னும் அரியபெருங்காப்பியத்திற் பாட்டுக்களை அகன்றுபொருள்கிடப்ப வைத்தெழுதினர்; அதற்குரை கண்டாரும்பிறரும் * அந்நுணுக்கமறிந்து அவைதம்மையெல்லாம் அணுகிய நிலையில்வைத்து உரையுரைத்தார். இங்ஙனமே இன்னோரன்ன பாட்டுகளுக்கு உரை உரைக்க வேண்டுமென்பது **ஆசிரியர் தொல்காப்பியனார்** "அகன்றுபொருள்கிடப்பினும் அணுகியநிலையினும், இயன்றுபொருண்முடியத்தந்தன ருணர்த்தல், மாட்டெனமொழிபபாட்டியல்வழக்கின்" என்று ஆணைதந்தருளிய வாற்றானும், அதற்குரைகண்ட **பேராசிரியர்** உரைவிளக்கத்தானும்தெற்றெனத்துணியப்படும்.

இனி 'மாட்டு' என்னும் பொருள்கோள்முறை இதுவேயாதல் அறியமாட்டாத நச்சினார்க்கினியர், இப்பத்துப் பாட்டுகட்கும்ஒருமுறையுமின்றி ஓரிடத்துநின்றஒருசொல்லையும் பிறிதோரிடத்துநின்ற பிறிதொரு சொல்லையும்

* "The most striking characteristic of the poetry of Milton is the extreme remoteness of the association by means of which it acts on the reader"—Macaulay's Milton.

எடுத்து இணைத்து உரை உரைக்கின்றார். அங்ஙனமுரை கூறுதல் நூலாசிரியன்கருத்துக்கு முற்றும் முரணுதலானும், இவர்க்குமுன்னிருந்த நக்கீரனுரை யுள்ளிட்ட பிரமாணவாசிரியரெல்லாம் இவ்வாறு உரைஉரைப்பக் காணுமையானும் நச்சினார்க்கினியர் உரைமுறை கொள்ளற்பாலதன்றெனமறுக்க. நச்சினார்க்கினியருரைகூறாவிடின் இப்பத்துப்பாட்டுக்களின்பொருள் விளங்குத லரிதேயாதல்பற்றியும், இவர்தொல்காப்பியங் கலித்தொகைமுதலிய பண்டைச்செந்தமிழ் நூல்கட்கு அரியபெரிய தண்டமிழுரை வகுத்ததுபற்றியும் இவரை நெஞ்சாரவழுத்தி இவர்க்குத் தொண்டுபூண்டொழுகுங் கடப்பாடுமிகவுடையேமாயினும், இவர் வழுவியவிடங்களினும் இவரைப்பின்பற்றி உலகை வஞ்சித்தல் நடுவுநிலையாகாதாகலின் இவர் வழுஉக்களைக் களைந்துதிருத்திப் பின்இவரைச் செந்தமிழ்மாமுகில் வள்ளலாய்க்கொண்டு வழிபடுவேமென்க.

இனி இப்பட்டினப்பாலையின்கட் போந்தபொருள்கள் இசைவுபெறுகின்ற பொருத்துவாய்கள் இருபத்தேழு உள்ளன. அவை தம்மையெல்லாம் இறுதியில் வினைமுடித்துத் தொகுத்துக்காட்டுமிடத்துக்காண்க. இதன்கட்கருக்கொண்டமுதற்பொருள், 299-வது வரிமுதலாகமுடிந்த "திருமாவளவன் தெவ்வர்க்கோக்கிய, வேலினும்வெய்யகானமவன், கோலினுந்தண்ணிய தடமென்றோளே" என்பது 218-முதல் 220-ஆவது வரிகாறுமுள்ள "முட்டாச்சிறப்பிற்பட்டினம்பெறினும், வாரிருங்கூந்தல் வயங்கிழையொழிய, வாரேன்வாழியநெஞ்சே" என்பதனோடு பொருந்திநின்றுமுடிவதாகும். ஏனையவெல்லாம் சார்புபொருள்களாய் இம்முதற்பொருளை அலங்கரித்தற்பொருட்டு வந்தனவென்க.

குறிப்பு:— இங்கேகுறியாது விடப்பட்டவற்றிற்கெல்லாம் உரை பொருட்பாகுபாட்டிற்காண்க.

( 1 - முதல் 8 - வரி) தற்பாடிய புள்—வானம்பாடிப் பறவை; தன்-மழை. இப்பறவை மழைத்துளியை உண்டு உயிர்வாழ்வதாகலின் இது மழைவருகையை நோக்கிப்பாடு மென்றார். தளி—நீர்த்துளி.

(9—19) கார்க்கரும்பு - பச்சைக்கரும்பு. ஆலை-பாகு காய்ச்சும் பெருங்கொப்பறை. தெறுவு - சுடுதல். மேடு பருத்தவயிறு. கூடு - நெல்லைக்குங்கூடு. முதற்சேம்பு அடியிலேகிழங்குள்ள சேம்பு என்னுஞ்செடி.

(20—27) அகல்நகர் - அகன்றவீடு. 'மடம்' என்பது பிறரறிவித்தவற்றை உட்கொண்டு அவற்றைப் பிறர்தெரி யக்காட்டாது அகத்தேவைக்கும் மகளிர்க்குரிய ஓர் இயற் கைக்குணம். இதனை ஆசிரியர்நக்கீரனார் "கொளுத்தக் கொண்டு கொண்டதுவிடாமை" என்பர். கொடுங்காற் கனங்குழை - வளைந்தசுற்றுள்ளதாகச் செய்யப்பட்டகனத் தகுண்டலம். முன்வழிவிலக்கும் விலங்குபகையல்லது கலங்குபகையறியாக் கொழும்பல்குடி-புதல்வர் விளையாடுங் காலத்து அவர் உருட்டுஞ்சிறுதேரினைச் சிறுமகளிர் எறிந்த குண்டலந் தடுக்கிநிற்கச்செய்யும் இதுபோன்ற சிறுதடைக ளானபகை நேர்வதல்லது வேறுதம்மனங் கலங்குதற்குக் காரணமான பகையில்லாத செல்வநிறைந்த பலகுடிகள் என்க; பாட்டுச்சென்றவாறே எளிதிலே பொருள்கொள்ள க்கிடக்கும் இவ்வடிகட்கு இப்பொருள் காணமாட்டாதநச் சினார்க்கினியர் இவற்றை ஓர் இயைபுமின்றிக் 'கையினுங் கலத்தினும் மெய்யுறத்தீண்டிப், பெருஞ்சினத்தாற் புறங் கொடாஅ, திருஞ்செருவின்' என்னும் எழுபது எழுபத்தி ரண்டு மூன்றும் அடிகளோடுசேர்த்துப் பொருளுரைத்துப் பின்பவற்றைக் கொண்டுவந்து 'கொழும் பல்குடிச் செழும் பாக்கம்' என்பதனோடுகூட்டிமுடித்திடர்ப்படுகின்றார்; இங் ஙனம்பொருளுரைத்தல் பாட்டின்வரன்முறை சிதைத்த

லாமன்றிப் பிறிதென்னை? இங்கே 'பாக்கம்' என்றது காவிரியர்ற்றின் கரையிலுள்ள ஊர். 'முதுமரத்தமுரண்களரி' என்னும் 59-ஆம் அடிமுதற்கொண்டு, 74-ஆவது வரிவரையில் கடற்கரையிலுள்ள செம்படவர்குப்பவருணனைசொல்லப்படுகின்றது. இவ்வாறாகப், பாக்கத்திற்சொல்லப்பட்டதனைக்குப்பத்திற்குங்குப்பத்தில்நடைபெறுதலைப்பாக்கத்திற்கும்ஏற்றி அவர்பொருளுரைத்தது போலியுரையாமெண்க.

(28-39) கொள்ளை-விலை. பணை-குதிரைலாயம். 'உருகெழுதிறலுயர் கோட்டத்து' என்பதற்கு நச்சினார்க்கினியருரைத்த பலபொருளுங்காண்க.

(40-50) போர்க்கதவு - வாய்பொருந்தின கதவுகள்; "போரமை புணர்ப்பின்" என்றார் நெடுநல்வாடையினும்.

(51-53) கேணித் தகைமுற்றம்-கேணிகளை உள்அடக்கின முற்றம்; தகைதல்-உள்ளடக்குதல்.

(53-58) 'முனிவர் வேட்கும் புகையை வெறுத்தலாற் குயில்கள் சோலையைவிட்டுக் காளிகோட்டத்திற்போய்த் தூதுணம்புறாக்களோடும் ஒருபுறத்தேதங்கும்' என நேரே பொருள்படுதலை விடுத்து நச்சினார்க்கினியர் காளிகோட்டத்தைப் புறாக்களுக்கு விசேடணமாக்கிப் பின் அப்புறாக்களோடுங் குயில்கள் காவிலே சென்றிருக்குமெனக் காவுடனே சேர்த்துப் பொருளுரைக்கின்றார்; அங்ஙனம் பொருளுரைப்பின் முனிவர் வேள்விவேட்குமிடம் இதுவென்பது பெறப்படாமையானும், குயில்கள் எவ்விடத்தைவிட்டு எங்குபோ யிருந்தனவென்று வினவுவார்க்கு இறுக்கலாகாமையானும் அஃதுரையா யன்றெனமறுக்க. தவப்பள்ளிகளுள்ள காவிலே முனிவர்வேட்கின்றாரென்றும், அங்கெழும்புகையை வெறுத்து அச்சோலையை நீங்கிப்போய்க் குயில்கள் காளிகோட்டத்திற் றங்குகின்றனவென்றும் பொருள்கூறுதலே பொருத்த முடைத்தாதல் காண்க.

(59—74) கருந்தொழில் - கொலைத்தொழில். கொலைத்தொழிலினும், இரும்புமுதலான வலியஉலோகங்கள் அடித்துத்திரட்டுந்தொழிலினும்பழகியகையைக் 'கருங்கை' என்பர்; "கொன்றுவாழ்தொழிலினும் வன்பணித்தொழிலினுங், கன்றியதொழிற்கை கருங்கை எனப்படுமே" என்பதூஉங்காண்க. 'கருந்தொழிற்கலிமாக்கள்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'வலியதொழிலையுடைய செருக்கினபரதவர்பிள்ளைகள்' என்றுபொருளுரைத்து ' இவர் (63) கடலிறவின்சூடுதின்றும், (64) வயலாமைப் புழுக்குண்டும், (65) வறளடம்பின் மலர்மலைந்தும், (66) புனலாம்பற் பூச்சூடியும், (65) கோண்மீன்போல' என்றுசேர்த்துக் கொண்டுபோய்ப்பின் (77) 'ஏழகத்தகரொடு சிவல்விளையாட' என்பதனோடு ஓரியையுமின்றிக் கூட்டிமுடித்து இடர்ப்படுகின்றார். 'கலிமாக்கள்' என்பதற்குச் சிறுபிள்ளைகள்என்றுபொருள் கொண்டமையானே 'விளையாட' என்னும் வினைவந்தஇடம்பார்த்துஇணக்கி இவ்வாறுபோலியுரைகூறினார். அதன்பின் 73-இல் உள்ள 'இகன்மொய்ம்பினோர்' என்பதனைப்பிரித்தெடுத்துக் கொண்டுபோய் 60-இல் உள்ள 'வரிமணலகன்றிட்டை' என்பதனோடு சேர்த்துத்திரும்பவும் 71-இல் உள்ள 'தீண்டி' முதலியவினைகளோடு சேர்த்துப்பிறகுஅதனை 27-இல்உள்ள பாக்கத்தோடு இயைத்துப் பெரியதோர்இடர்விளைத்துப்பாட்டின்பொருணயஞ் சிதைத்தார். இவர்போல் இங்ஙனம் உரைக்குழப்பஞ்செய்வார் பிறரை வேறுயாண்டுங்கண்டிலேம். சிறார் விளையாட்டையும், வலியபெருமக்கள் போர்விளையாட்டையுந் தனித்தனியே கூறவேண்டுமெனக்கருதிய தங்கருத்தை, அக்கருத்துக்குச் சிறிதும்இடந்தராத ஆக்கியோன்திருவாக்கில் இயைப்பான்வேண்டி அத்திருவாக்கை அங்ஙனமெல்லாம் அலைத்து வரம்பின்றி யுரைகூறத்துணிந்தது அவர்க்குப் பெரிதும் ஏதமாம் என்க.

இனிக் 'கருந்தொழின் மாக்கள்' என்பதற்கு மீன்பிடிக்குங் கொலைத்தொழிலிற்பழகிய வலியசெம்படவர் என வைத்து நேரேபொருளுரைத்துச் சென்றால் இப்பகுதி ஆற்றொழுக்காய்ப் பொருள்பயந்து செவ்விதின்முடியுமாற்றைப் பொருட்பாகுபாட்டில் வரைந்த பொழிப்புரைக்கட் காண்க. 'கலிமாக்கள்' என்பதற்குச் சிறார் என்று பொருளுரைத்தற்கு அதிகாரவியைபு இடந்தராமையோடு அற்சொற்றொடரும் இடந்தருவதின்றாம்; என்னை? சிறுமகார்க்குக் கருந்தொழில், வலிய, செருக்கிய முதலான அடைமொழிகள் ஏலாமையானும், மாக்கள்என்னுஞ்சொல் அப்பொருடராமையானு மென்க. மற்றுக் கிடந்தவாறே வைத்துக் 'கலிமாக்கள்' செம்படவர்எனப் பொருளுரைப்பின், 'இகன்மொய்ம்பினோர்' என்பதும் அவரையேகுறித்து நின்று கூறியதுகூறலாமெனின்;— அற்றன்று, செம்படவர் மேற்சொன்னவாறு 'கையினுங்கலத்தினும் மெய்யுறத்தீண்டி' ப் போர் இயற்றியும் அதனானும் தம் வலியடங்காமையின் 'மாறுபட்டதிறலுடையராய்க்' கவண்கல் வீசுவாராயினரென்று உரைகூறக் கிடத்தலால் அது கூறியது கூறலாகாதென்க.

(75-77) 'உறை' என்பது மண்ணாற்சுவர்போற் சுற்றி வளைந்து ஓரடிக்குமேல் உயரமாக்கிச் சுள்ளையில் வைத்துச் சுட்டெடுப்பது. நிலத்தைஅகழ்ந்து இவ்வாறுசமைத்த உறைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிச்செய்வது 'உறைக்கிணறு' என்றுசொல்லப்படும். மேழகத்தகர்-ஆட்டுக்கிடாய். சிவல்-கௌதாரிப்பறவை. புறச்சேரி-இழிதொழிலாளரான செம்படவர் நகர்க்குப் புறத்தேயிருக்கும் ஊர்; இது குப்பத்தை அடுத்துள்ளதாகும்.

(78-105) கிடுகுநிரைத்து எஃகு ஊன்றி-கேடகத்தை வரிசையாவைத்து வேலை ஊன்றிஎன்க. நடுகல்லின்அரண-

நட்டகல்லையே இடமாய்க்கொண்டு நின்றவீரன் என்க. இவ்வாறன்றி; இறந்துபட்டவீரனுக்கு அறிகுறியாக நிறுத்திய கல்லையுடைய காவலிடம் என்று பொருளுரைத்தலு மொன்று. நடுகல் நின்ற இவ்வாணத்தைத் தூண்டிற்கோல் சாத்திய செம்படவர் குடிசைவீட்டுக்கு ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் வெளிப்படையாக உவமை கூறுதலையும் அறியாது, நச்சினார்க்கினியர் இவ்வடிகளைப் பிரித்தெடுத்துக்கொண்டுபோய் 71-வது அடியிலுள்ள 'புறக்கொடாஅது' என்பதனோடு இயைத்து ஒருபோலியுரை கூறினார். அங்ஙனங் கூறுதற்கு ஓரியைபின்மையானும், ஆசிரியர் கருத்துக்குமாறாய் உவமமின்றிப் பிறழ்தலானும் அவருரை பொருந்தாதெனை மறுக்க.

'நெடுந்தூண்டிலிற்காழ்' என்றமையான் அதனோடு இனமான மீன்இடும்புட்டிலும் ஈண்டுக்கொள்ளப்படும். கேடகம் மீனிடும் புட்டிலுக்கும், வேல் தூண்டிற்கோலுக்கும் உவமைகளாம்.

சினைச்சுறவின் கோடுநட்டு மனைச்சேர்த்திய வல்லணங்கினால்-கருக்கொண்ட சுறாமீன் கொம்பைநட்டு அதனையே இருக்குமிடமாகச் சேர்த்த வலியகடற்றெய்வத்தின் பொருட்டு. மனை-இருக்குமிடம்; இச்சொல் இப்பொருள் படுமாகவும், நச்சினார்க்கினியர் இதனைக் கொண்னே வேறு பிரித்துப்போய் 83-வது வரியிலுள்ள 'மணன்முன்றில்' என்பதனோடு கூட்டினார். "நெய்தனிலத்தில் நுளையர்க்கு வலைவளர்தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடுநாட்டிப் பரவுக்கடன்கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்" என்பது பொருளதிகாரத்தில்நச்சினார்க்கினியருரை.

மடிதல்-தந்தொழில் செய்யாது சோம்புதல். காவிரித்துறைக்கு உவமையாய் நேரேசென்றியைவதாகிய 'பெறத்

கருங்தோல்சீர்த் துறக்கம்' என்னும் அடியை 111-வது அடியிலுள்ள 'நெடுங்கால்மாடம்' என்பதனோடு இயைத்து இடர்ப்படுகின்றார் நச்சினார்க்கினியர். கவலையின்றிப் பல் பயன் நுகர்ந்து பரதவர் தம்மகளிரோடும் இனிது விளையாட்டயர்கின்ற காவிரித்துறையைத் தேவர் அரம்பைமாதரோடும் விளையாடுகின்ற துறக்கத்திற்கு உவமை கூறுதலே நிரம்பவும் பொருத்த முடைத்தாம் என்க.

(106-115) துணை - கணவன். மது - காமத்தேன். குரூஉச்சுடர்-நிறஞ்சிறந்த விளக்கு. கண்அடைஇய - கண் அடைத்த, அதாவது கண்டுயின்ற.

(116-125) எக்கர் - காவிரியாற்று நீர்கொண்டுவந்து திரட்டிய இடுமணல். இவ்வெக்கர்மணலிலே கடையாமத்தில் துயில்கொண்டு கிடப்பார் சுங்கங்கொள்ளுங் காவலாளர் என்பது நேரே பொருள்படுவதாகவும், இதனைவிட்டு நச்சினார்க்கினியர் அதனைப் பரதவர்மேலேற்றி அவர் அம்மணன்மேற் கண்டுயின்று கிடப்பரென வுரைகூறி, மற்றை நாளில் அப்பரதவர் 'வெறியாடு மகளிரோடு'கூடி விழாவெடுப்பரென 155-வது வரியோடு கொண்டுபோய் முடித்திடுகின்றார். இப்பாட்டுச் செல்லுநெறியை ஒருசிறிது நோக்குவார்க்கும் இவருரை பொருந்தாமை நன்குதெளியப்படும். சுங்கங்கொள்வோர் தங்கடமை வழாது இரவிலுஞ் சாவடியிலிருந்தவாறே காவலாய் எக்கர்மணலிற் றுயில்கொள்வரெனக் கிடந்தவாறு வைத்துரைத்தலே பொருட்சிறப்புடைத்தாமன்றிப், பரதவர் உறங்கினரென வாளாது கூறல் சிறவாதென்க,

! வேலாழி - கடற்கரை.

(125-141) பண்டம் பொதிமூடை-பண்டங்கள் பொதிந்தமூட்டை. வருடை-ஒருவகைமான். எழுகம்: மேழகம்

என்பன ஆட்டுக்கிடாய் என்னும் ஒருபொருளை யுணர்த்து வனவாம்.

(142-158) வளிநுழையும்வாய் - தென்றற்காற்றுப் புகும் சாளரம். துடுப்பு - கணு. ஆவணம் கடைத்தெரு.

(159-183) மையறுசிறப்பிற் றெய்வஞ்சேர்த்திய மலர் அணிவாயிற் பலர் தொழுகொடி-குற்றமற்ற சிறப்பினை யுடைய தெய்வத்தை எற்றுவித்து மலர்களணிந்த கோயில் வாயிலிலே பலருந் தொழுதுசெல்லுங் கோழிக்கொடி என்க. நின்றவாறே சென்றியைந்து இங்ஙனம்பொருடருவ தாகிய 'மையறுசிறப்பிற்றெய்வம்' என்னுஞ் சொற்றொட ரைப்பிரித்தெடுத்துப்போய், முருகனுக்குமனைத்தெய்வங் களுக்கும் எடுத்த விழா அருத ஆவணம் என்றுகூட்டி நச்சி னார்க்கினியர் இடர்ப்படுகின்றார். 159-வது வரிமுதல் கொ டிச்சிறப்புக் கூறப்புகுந்த ஆசிரியர் மற்றைக்கொடிகளைக் கூறுதற்குமுன் தெய்வத்தன்மையுடைய கோழிக்கொடியை முதலிற் கூறக்கருதி முருகப்பிரான் கோயில்வாயிலிற் கட் டப்பட்டிருக்குமதனைக் கூறிய நுணுக்கமறியாது நச்சினார்க் கினியர் தாம் ஒருபொருள் கூறுவான் புகுந்து இழுக்கினர்.

பாகு உருக்கிய பசுமெழுக்கிறகாழ் - பாகாகக்காய்ச்சி வார்த்த பசிய மெழுக்கைப் பூசிய கோல். கிடுகு சட்டம்; இச்சொல் முன்ஒருகால் கேடகம் என்னும் பொருளில் வந்தவாறுகாண்க. 'பாகு உருக்கிய' என்பதற்கு இப்பொருள் காணமாட்டாத நச்சினார்க்கினியர் இதனை 'மஞ்சிகை' என் பதனோடு சேர்த்துப் 'பாக்கு வெற்றிலை சொரிந்தமஞ்சிகை' என்று பொருள் கூறினர். அவ்வாறியைத்தற்குச் செய்யு ளிடந்தராமையின் யாங்கூறியதே பொருளென வறிக; சிறார் எழுமைப்பொருட்டுக் கோல்களில் மெழுக்குத் தடவி நாட்டுதல் உண்டு. இனி 'மெழுக்கு' என்பதற்குச் 'சாணத்

தால் மெழுகுதல்' என்றுரை கூறினருமுளர்; அது பொருந்தாமை ஈண்டுக் கூறியவாற்றாற் காண்க.

நறவுநொடை-கள்விற்றல்.

(183-193) காலின்வந்த கருங்கறிமூடை-வண்டியிற் கொண்டுவந்த கரிய மிளகுபொதி. கால்-வட்டை; வட்டை வண்டி, இச்சொல் இப்பொருட்டாதல் "ஒருங்கு தொக்கன்ன வுடைப்பெரும் பண்டங், கலத்தினுங் காலினுந் தருவனரீட்ட" * என்புழி அடியார்க்கு நல்லார் உரைகூறியவாற்றாற்காண்க. இப்பொருள் கூறவுறியாத நச்சினார்க்கினியர் 'நீரிற்காலில்வந்த' என இரண்டிடத்துக் கூட்டிக் 'கடலிலே காற்றான்வந்த' வெனப்பொருந்தாவுரை வரைந்தார்.

(193-212) துறைமுகத்து நீரில் உலாவும்மீனும் கரையிற் றிரியும் ஆடு முதலான விலங்குகளும் நீரிலும் நிலத்திலும் இடரின்றி உறங்கிச் செம்படவர் குடிசை முற்றத்தினும் ஊன்விற்றற் றொழிலையுடையார் குடிசையிலும் தாவிப்பாய்ந்துந் திரண்டும் நிற்கும்என்க. இங்ஙனம் நெறிப்படப் பொருளுரையாது நச்சினார்க்கினியர் 'புரவி மூடை மணிபொன் முதலியன நீரினும் நிலத்தினும் இனிதுதங்கி வளம் மயங்கிய மறுகு' என்றிடர்ப்பட் டியைக்கின்றார். 'துஞ்சி' என்னுஞ் சொல்லுக்கு 'உறங்கி' என்னுஞ் செம்பொருளும் அதற்கேற்ற மீன், மாமுதலிய உயிருடைப் பொருள்களும் உளவாகவும், அவற்றைவிடுத்து அச்சொல்லுக்குத் தங்கிஎன ஆக்கப்பொருள்கொண்டு அவ்வாறியைத்தது தீம்பாலுணவிருப்ப அதனை உவர்த்தொதுக்கி அறிவு மயக்குங் கள்ளுண்பார் திறனே டொப்பதாயிற்றென்க.

* சிலப்பதிகாரம், மனையறம் படுத்தகாதை.

மேலும், 217-வது வரியிற் பலவேறு மொழிவழங்கும் பலதேயமாக்களுங் காவிரிப்பட்டினத்தில் வந்துறைவரெ னக்கூறிய பகுதியை ஆண்டு நின்றும் பிரித்தெடுத்து வந்து அவர் உறையும் மறுகு என ஈண்டிதனோடு வான்முறை யின்றி முடிக்கின்றார் நச்சினார்க்கினியர்.

கிளைகலித்து-கொல்வாரின்மையின் தம் சுற்றம்பல்கி.

பண்ணியம் - தின்பண்டம். நுகம் - குறுக்குக்கட்டை. பகல்-அதன் நடுவில் கோத்த நிகளக்கட்டை. கொண்டி-மிகுந்தபொருள்.

(213-218) பல் ஆயமொடு பதி பழகி - பலதொகுதி யாகக் காவிரிப்பட்டினத்திலுறையும் நன்மக்களோடும் ஒரு மித்தும்பழகி. வேறு-வேறு உயர்ந்தமுதுவாய் ஒக்கல்-வேறு வேறாகச்சிறந்த அறிவுவாய்த்த சுற்றத்தாரையுடைய நன் மக்கள். வேறு வேறாக அறிவுசிறத்தலாவது பலதிறப்பட்ட நூல்களிற்பயின்று முதிர்ந்த அறிவுவாய்த்தல். பலதிறப் பட்ட அறிவுடைய நன்மக்களெல்லாரும் திருவிழா நடை பெறும் ஓரிடத்திற்சென்று கூடுதல்போலப் பலதிறப்பட்ட மொழிகள்வழங்கும் பலதேயத்தாரும் இந்நகரத்திற் குழுமு வர் என்க. 'வேறு வேறுயர்ந்த' என்னும் அடைமொழித் தொடரை நச்சினார்க்கினியர் புலம்பெயர் மாக்களோடு கூட்டுகின்றார்; அங்ஙனமுரையுரைத்தல் வேண்டாகூறலே யாமென்க.

(220-239) பிணிஅகம் - சிறைக்களம். காப்புஎறி-மதி லெறி. வாள்கழித்து-மதிற்புறத்திருந்த வாட்படைவீரரை ஓட்டி. தூறு இவர் துறுகல்-குறுஞ்செடிபடர்ந்த நெருங்கிய பாறைக்கல்.

(240-245) அறுகோட்டு இரலை - அறுப்பறுப்பான கொம்புள்ள கலைமான். மான்பிணை-பெட்டைமான்.

(246-251) கொண்டிமகளிர்-சிறையாகப் பிடித்துக் கொள்ளப்பட்ட மகளிர். பொதியில், அம்பலம் என்பன கோயிலென்று பொருளுணர்த்தும்.

(252-260) அழல்வாய் ஓரி அஞ்சுவரக்கதிர்ப்பவும்- அழன்ற வாயினையுடைய நரிகள் பிறர்க்கு அஞ்சுதல் உண்டாக ஓங்கி ஊளையிடவும் என்க. கூகையில் ஓர்இனம் ஆந்தை எனவும் பிறிதோர் இனம் கோட்டான் எனவும் வழங்கப்படும் என்பர்; இங்கேகூகைஎன்பது ஆந்தை. ஆண்டலை-கோட்டான், இதன்றலைஆண்மக்கள் தலைபோலிருத்தலின் இப்பெயர் பெறுவதாயிற்றென்க.

(261-268) கொடுங்கால் மாடம் - கால்கள்வளைத்து விசித்திரமாகக் கட்டப்பட்டமாடம். "கொடுங்கால்' என்னும் இவ்வடைமொழியை நச்சினார்க்கினியர் பேய்மகள் என்பதனோ டியைக்கின்றார்.

வறுங்கூடு - வறிதாய்ப்போன நெற்கூடு.

(269-299) ஞாயில் - அம்பெய்வதற்கு மதிற்மேற் சமைத்த ஓர் மதிலுறுப்பு. இதனை அடியார்க்கு நல்லார் 'குருவித்தலை' என்பர். *

விசிபிணிமுழவு - இறுகக்கட்டின வார்க்கட்டையுடைய முரசு.

இனி இங்ஙனம் வகுத்துக்கொண்டு உரைகூறியபொருத்துவாய்களையெல்லாம்ஒருமுடிபாக்கிஇப்பாட்டின்வினைமுடிபுகாட்டுகின்றாம். இதன்கட்போந்த இருபத்தேழு பொருத்துவாய்களையும் பொருட்பாகுபாட்டிற் காண்க. இங்கு முடிபுமாத்திரையே வரைகின்றாம்.

---

* சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை.

நண்ணார் காப்பு ஏறி வாள்கழித்துத் தாயம் எய்தி அங்ஙனம் எய்தியமையானும் மனம்மகிழானாய்ப் போர்வேட்டுச் சமம்முருக்கித் தண்பணைகளை அழித்துச் செறுவும் வாவியும் மயங்கவும் பொதியிலில் யானை உறையவும் மன்றத்து ஓரி கதிர்ப்பவும் ஆண்டலை விளிப்பவும் பேய்மகள் துவன்றவும் செழுநகர் வறுங்கூட்டுள்ளிருந்து கூகை குழறவும் ஊர்களின் அழியப் பெரும்பாழ்செய்தும் அமைதி பெறானாய்த் தான் முன்னியதுறை போகலிற் பல்லொளியர் ஒடுங்க அருவாளர் தொழில்கேட்ப வடவர்வாடக் குடவர் கூம்பத் தென்னவன் திறல்கெடச் சீறிக்கண்ணாற்செயிர்த்து நோக்கிப் பொதுவர் வழிபோன்ற இருங்கோவேள் மருங்கு சாயக் காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கி உறந்தை போக்கிக் குடிநிறீஇப் புழைஅமைத்துப் புதைநிறீஇப் பெயர்கொடுத்துப் புறக்கொடாது வேந்தர் சூடிய கழற்காலினையும் புதல்வரும் மகளிரும் திளைக்கும் மார்பினையும் பெருவலிமையினையும் உடைய திருமாவளவன் தெவ்வர்க்கு ஓக்கியவேலினும் யாம்போதற்கு எழுந்த கானம் கொடியதாயிராநின்றது; அவன் செங்கோலினும் என்காதலியின் மென்றோள்கள் குளிர்ந்தனவா யிருக்கின்றன; ஆகலின், காவிரி பொன்கொழிக்கும் கழனியினையும், பாக்கத்தினையும், பூந்தண்டலையினையும், ஏரியினையும், அரண்மனை அட்டிலையும், சாலையினையும், காளிகோட்டத்தினையும், மன்றம் புறச்சேரி முதலியவற்றை யுடையனவாய்த் துறக்கம் ஏய்க்கும் பெருந்துறையினையும், உல்கு செய்வோர் மடியாதிருக்கும் பண்டசாலை முன்றிலினையும், விழவறாத ஆவணத்தினையும், செழுநகர் வரைப்பினையும், நனந்தலை மறுகினையும், வேளாளர் துவன்று இருக்கையினையும் உடையதாய்ப் பலமொழிவழங்கும் பலதேயத்தாரும் போந்துஉறையப்பெற்றதாய் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தையே அவ்

வேந்தர்பெருமான் பரிசிலாகத் தரப்பெறுவேனாயினும் கூந்தல் இழை முதலியவற்றையுடைய என் ஆருயிர்க் காதலியைப்பிரிந்துவருதற்கு ஒருப்படமாட்டேன் கண்டாய்நெஞ்சமே! எனவினைமுடிபுசெய்க.

குறிப்பு:—ஆசிரியர் சமயம்.

பட்டினப்பாலை யியற்றிய ஆசிரியர் சமயம் இதுவென்பது அவரியற்றிய பாட்டுக்களால் இனிது துணியப்படாவிடினும், அவரது பெயரின் றன்மையை உற்றுநோக்குமிடத்து அவர் சைவசமயத்திற்குரியார் என்பது புலப்படுகின்றது. 'உருத்திரங்கண்ணனார்' என்னுஞ் சொற்றொடர் உருத்திரனுக்குக் கண்போற்சிறந்த இளையபிள்ளையாரான முருகக்கடவுளைக் குறிப்பதொன்றாம் சைவசமயந் தழீஇயொழுகுங் குடியிலுள்ளாரே அப்பெயரிட்டு வழங்குதல் மரபாய்ப் போதரக்காண்டலின், இவ்வாசிரியர் சைவசமயத்திற் குரியராதல் இனிது பெறப்படுகின்றது.

Printed at the Memorial Press, Madras.—1906.

வந்து வாணிகம் நடாத்தி வாழ்ந்தனர். இவரெல்லாம் இங்ஙனம் இந்நாட்டிற் குடியேறி வாழ்ந்தபோது தமக்குள்மாறின்றி ஒருமையுற்றிருந்தனரென்பதும் இதனாற் றெரிகின்றது.

இனி, முன்னாளில் ஓர் அரசன் பிறனோர் அரசனோடு பொருது அவனை வென்றால் அவன்நாட்டிலுள்ள மகளிரைச் சிறைபிடித்து வருதலுண்டென்பதும், அங்ஙனம் பிடித்துவரினும் அவரைக் கற்பழித்தும் மானஞ்சிதைத்தும் வருத்தாமல் பாதுகாத்துக் கோயில்களில் கடவுளைத் தொழுதுகொண்டு அங்கு கடவுட்டிருப்பணிசெய்யும்படி இருத்துவர் என்பதும் அறியப்படுகின்றன. இதனாற் பண்டைநாட்டமிழரசரின் செங்கோன்மையரசும் உள்ளப்பெருமையும் இனிது விளங்கற் பாலனவாம்.

இனி முன்னாளில் கடவுளைத்தொழுதல் வேண்டிச் சமைக்கப்பட்ட கோயில்கள் 'அம்பலங்கள்' என்னும் பெயருடையவாயிருந்தன. அவற்றின்கட் கடவுளைவழிபடுதற்குத் தொழுகுறியாக நிறுத்தப்பட்ட உரு கந்து எனப்பெயர்பெற்றது. அவ்வுருவினையே இக்காலத்திற் 'சிவலிங்கம்' என வழங்கிவருகின்றனர். இந்நாளிற் போல அந்நாளில் மக்களுருப்போற் செய்த திருவுருவங்கள்பெரும்பாலுங் கிடையா. 'சிவலிங்கம்' எனப்படுகின்ற கந்து உருவையே வழிபட்டுவந்தனர். இச்சிவலிங்க உருத்தான் மிகப்பழையநாட்டொட்டு எல்லாச் சாதியாராலும் எல்லாத்தேயத்தாராலும் வணங்கப்பட்டுவந்ததெனச் சரித்திரவாராய்ச்சி வல்ல புலவோர்கள் உரைநிறுவுகின்றார். இதனாலன்றே சிவாலயங்கடோறும் முதன்மையான கருஇல்லில் இச்சிவலிங்க

அருட்குறியும், முதன்மையில்லா ஏனை இடங்களில் ஏனைஉருவங்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நச்சினார்க்கினியருங் 'கந்து' என்பதற்குத் 'தெய்வ முறையுந்தறி' என்றுரை கூறினாராகலின் ஈண்டு அது சிவலிங்கமேயாதல் தெற்றெனத் துணியப்படும். திருமுருகாற்றுப் படையிலும் நக்கீரனார் "கந்துடை நிலையினும்" என்று அருளிச்செய்தமைகாண்க. அற்றேல், நாகரிகம் நிரம்பிய பண்டைநாளில் மக்களுருப்போல் திருவுருவங்கள் சமைத்துவழிபடாமை என்னையெனின்; கரணவுங் கருதவும் படாத முதல்வனுக்குத் தாந்தாம்நினைந்தவாறு உருவங்கள் சமைத்துவணங்கல் பொருந்தாதாகலின், அம்முதற்பொருளை ஒருபிழம்பாகக் கொண்டு வழிபடுதற்கு ஓர் அறிகுறியாகப் பிழம்பு வடிவான கந்துரு நிறுத்தினாரென்க. பிழம்புருவின் வழிபாடுபோல் ஏனை உருவழிபாடுகள் சிறவாமை உண்மை நூல்களுட் கண்டுதெளிக.

இனி முன்னாளில் வேளாளர் அரசராயிருந்து செங்கோல் செலுத்தினாரா தலும், அவர் அரசுபுரிந்த நாடு 'ஒளிநாடு' ஆதலும் இதன்கண் விளங்குகின்றன. நச்சினார்க்கினியரும் 'ஒளியராவார் மற்றை மண்டிலத்திற்கு அரசராதற்குரிய வேளாளர்' என்றுரை விரித்தார். இன்னும் முல்லைநில மாக்களான இடைச் சாதியார்க்குள்ளும் பலர் அரசராயிருந்தா ரென்பதூஉம் இதன்கட் புலப்படுகின்றது. இங்ஙனமே பதிற்றுப்பத்தில் "ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமயங்க" என்று போந்த பகுதியினால் கழுவுள் என்னும் ஓர் அரசன் இடைச்சாதியானென்பது பெறப்படுகின்றது.

இவ்விருவகைச் சாதியாரோடு அருவாளநாட்டின் அரசரும் வடநாட்டிலுள்ள அரசரும் குடகுநாட்டினரசரும் தன்னிடத்து வந்து பணிந்துகிடப்பக் கரிகாற்சோழன் வீற்றிருந்தான். பாண்டிய அரசன் ஒருவனை இவன் வென்றமையும், இருங்கோவேள் என்னும் அரசனை அவன் சுற்றத்தோடும் அழித்தமையும் இக்கரிகாலனுக்குப் பெருவென்றியாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இஃதொழிய, இவ்வேந்தன் பலநாடுகளை யெல்லாம் அழித்து நகரங்கள் புதுக்கிக் குளங்கள் அகழ்வித்து இளமரக்காக்கள் விளைவித்து நாகரிகம் பெருக்கினனென்பதும், இவனுக்கு முதலில் அரசிருக்கையாயிருந்தது உறையூர் ஆகுமென்பதும், பின் அதனை விடுத்துப்போனனும் அது பாழ்படாமல் பல நற்குடிகளை ஆங்கு இருத்தி மாடங்கள் மாளிகைகள் முதலான புதுக்கட்டிடங்கள் அமைப்பித்தா னென்பதும் இப்பாட்டின்கண் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

## பாவும் பாட்டின் நடையும்.

தமிழ் மொழியிலுள்ள செய்யுளோசை அமைதியே பா என்றுபெயர்பெறுவதாம். ஒருவன் தொலைவிடத்திலிருந்து ஒருபாட்டைப்பாட அப்பாட்டின் சொற்பொருள் இவையென்றுபுலப்படாவாயினும், அவ்வோசை வருமாற்றை உய்த்துணர்ந்து காண்பானுக்கு அவன் பாடுஞ் செய்யுள் இன்னபாவென்று அறியக்கிடக்கும். இங்ஙனம் நுண்ணிய விசும்பின்கண் அலைஅலையாய்

எழும்பி ஓர் ஒழுங்காக வரும் ஓசையே பாவாகு மெனத் தொல்காப்பியச் செய்யுளியலுரையிலே பேரா சிரியரும் நன்குவிளக்கினார். இவ்வாறுதோன்றிப் பரம் புஞ் செய்யுள் ஓசை முறையைத் தமிழாசிரியர் வெண்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா என நால் வகைப் படுத்தினார். பின்னும் இந்நால்வகைப் பாவின் ஓசை நெறியை நோக்குமிடத்து வெண்பாவிற் கலிப் பாவும் அகவற்பாவில் வஞ்சிப்பாவும் அடங்குவனவாம். இஃது "ஆசிரியநடைத்தே வஞ்சியேனை, வெண்பா நடைத்தே கலியென மொழிய"* என்றும் "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின், ஆசிரியப்பா வெண்பா வென்றாங், காயிருபாவினுளடங்குமென்ப"† என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுமாற்றான் விளங்கும்.

இவை தம்முள் 'அகவலோசை' என்பது ஒரு வன் தான் கருதியன வெல்லாம் வரம்புபடாது சொல் லிக்கொண்டு போம்வழி இயற்கையே தோன்றுந் தொடர்பு ஒலியாகும்; வெண்பாவிற் குரிய 'செப்ப லோசை' என்பது ஒருவன்கேட்பப் பிறனொருவன் அதற்குமாறுசொல்ல நடைபெறுஞ் சொன்முறையில் இயற்கையே தோன்றி இடையிடையே நிற்றல்பெற் றுச் செல்லுவதாம். மற்றும் இவற்றில் அடங்கும் வஞ் சிப்பாவிற்குரிய 'தூங்கலோசை' என்பது ஒவ் ஓர் அடிதொறும்தொடர்புற்று நிறைந்து செல்லும் ஏனை ஓசைகள்போலாது ஒவ்வொரு சீர்தொறு நிறைந்து தெற்றுப்பட்டு நின்றுசெல்வதாகும்; கலிப்பாவிற்குரிய

* தொல்காப்பியம், செய்யுளியல் கoஅ-வது சூத்திரம்.

'துள்ள லோசை' என்பது இசைவேறுபாடு தோற்றி ஓசைகனிந்து துள்ளித்துள்ளிச் செல்வதாம்.

இனிப் பட்டினப்பாலை என்னுமிப்பாட்டு அகவலோசை தழுவிவந்த ஆசிரியப்பாவினால் அமைக்கப் பட்டிருக்கின்றது. இச்செய்யுளின்கண் ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் தாம் உரைப்பக் கருதியனவெல்லாம் ஒருதொடர்பாக வைத்து முந்நூற்றோரடிகாறுமுரைத் தாராகலின் இப்பாவின்கண் இயற்கையாய் எழுவது 'அகவலோசை'யே யாயிற்று. அற்றேல், "வசையில்புகழ் வயங்குவெண்மீன், திசைதிரிந்து தெற்கேகினும்" என்பவை போன்ற வஞ்சிப்பா அடிகள் இடையிடையேகலக்கத் தூங்கலோசை மயங்கிவந்தவா றென்னையெனின்; இப்பாட்டின் முதற்றொட்டு முடிவுகாறும் அகவலோசையே வந்ததாயின் இடையிடையே ஓசை வேறுபடாமல் ஒரோசையாய் நடந்து கேட்பார்க்கு வெறுப்புத்தோற்றுவிக்குமாகலின், அங்ஙனம் ஆகாமைப்பொருட்டு வஞ்சிக்குரிய தூங்கலோசையினை ஆங்காங்கு வேறுபடுமாற்றால் நயமுற இசைவித்துப் பாடுவாராயினர். நாளும் பாலமிழ்தினையே உண்பானுக்கு அதன்சுவை உவர்ப்பாகத்தோன்றுமாகலின் அங்ஙனம் அஃது ஆகாமைப்பொருட்டு இடையிடையே புளிங் கறியுஞ் சுவையாற் பலதிறப்பட்ட மா பலா வாழை முதலிய பழங்களும் உண்டு அப்பாற் சுவை இனிது நிகழுமாறு செய்வித்துக் கோடல்போல, இப்பாவின் அகவலோசையும் இன்பங்குறையாமைப் பொருட்டு ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் தூங்கலோசையினையும் ஆங்காங்கு செறிவித்துப் பாடுவாராயினர்.

இனி இவ்வகவற்பாவின் அடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீர்களாற் கட்டப்பெறுவனவாம்; இந்நாற்சீரடியை ஆசிரியர் தொல்காப்பியனார் அளவடி என வழங்குவர். இனி இப்பாட்டின் இடையே மயங்கிய வஞ்சிப்பாட்டின் அடிகள் ஒவ்வொன்றும் இரண்டுசீர்களாற் கட்டப்படுவனவாம்; இவ்விருசீரடியை அவர் குறளடி என்வழங்குவர். இப்பட்டினப்பாலையின் முதலினின்று இருபத்தோரடிகாறும், இருபத்தேழுமுதல் இருபத்தெட்டுகாறும், முப்பத்திரண்டு முதல ஐம்பத்து மூன்று காறும், ஐம்பத்தொன்பதுமுதல் அறுபத்தாறுகாறும், எழுபத்தொன்றுமுதல் எழுபத்தாறுகாறும், எழுபத்தெட்டுமுதல் எண்பத்துநான்குகாறும், எண்பத்தாறுமுதல் தொண்ணூற்றொன்றுகாறும், தொண்ணூற்று மூன்றுமுதல் தொண்ணூற்றுநான்குகாறும், தொண்ணூற்றெட்டுமுதல நூறுகாறும், நூற்றிரண்டுமுதல் நூற்றெட்டுகாறும், நூற்றுப்பதினான்குமுதல நூற்றிருபத்தேழு காறும், நூற்றிருபத்தொன்பதுமுதல் நூற்றுமுப்பத்தேழு காறும், நூற்றுநாற்பத்திரண்டுமுதல் நூற்றைம்பத்தொன்று காறும், நூற்றைம்பத்தாறுமுதல் நூற்றைம்பத்தெட்டுகாறும், நூற்றறுபத்து மூன்று முதல் நூற்றெழுபது காறும், நூற்றெழுபத்திரண்டுமுதல் நூற்றெண்பத்தொன்று காறும், நூற்றுத்தொண்ணூற்றைந்துமுதல் நூற்றுத்தொண்ணூற்றொன்பது காறும், இருநூற்றொன்று முதல் இருநூற்றிரண்டுகாறும், இருநூற்றைந்துமுதல் இருநூற்றெட்டு காறும், இருநூற்றுப்பதினொன்று முதல் இருநூற்றுப்பதின்மூன்றுகாறும், இருநூற்றெழுபத்துமூன்று முதல் இருநூற்றெழுபத்தைந்து

காறும், இருநூற்றெழுபத்தொன்பதுமுதல் இருநூற்றெண்பத்துநான்கு காறும், இருநூற்றெண்பத்தாறு முதல் இருநூற்றுத் தொண்ணூற்றொன்றுகாறுந் தூங்கலோசை தழீஇவந்த வஞ்சியடிகள் வந்தன. ஏனை நூற்றுமுப்பத்தெட்டு அடிகளும் அகவலோசை தழீஇ வந்த ஆசிரியப்பாவாமென்க. எனவே, நூற்றறுபத்து மூன்றடிகள் வஞ்சிப்பாவிற் குரியவாயினும் அவை தமக்குரிய தூங்கலோசை ஆசிரியப்பாவிற்குரிய அகவலோசையின் இடையிடையே சீர்தொறுந் தெற்றுப் பட்டுச் செல்லவருவதே யல்லது அதனின்வேறல்லாமையால் அவ்வோசையான் நடக்கும் அவ்வஞ்சியடிகள் இவ்வாசிரியப்பாட்டின்கண் வருதற்குப் பெரிதும் இயைபுடையவாம் என்க. இங்ஙனம் அகவலோசையுந் தூங்கலோசையும் பாலுந்தேனுங்கலந்தாற்போலக் கலந்துசெல்லுமாறு இப்பாட்டினை இயற்றிப்பயில்வார்க்குத் தோன்றும் ஓசையின்பம் இடையறாது செல்ல நடாத்திய ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் இசையறிவு மாட்சி மிகவும் வியக்கற்பாலதொன்றாம்.

இனி, வஞ்சி அடிகள் அகவலடிகளை ஆண்டாண்டு ஒருசேரக் கூறுமிடத்தும் அவை ஓரோசையாய்ச் செல்லவொட்டாமல் எதுகை மோனைமுதலிய எழுத்தமைதிகளானுஞ் சிறிதுசிறிது ஓசை வேறுபடுத்துப் போகின்றார். "பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ திருஞ்செருவி னிகன்மொய்ம்பினோர்" என்புழிப் போலச் சிலவிடத்து இவ்விரண்டடிகள் முதற்சீர் எதுகை ஒன்றப்பொருத்துகின்றார். வேறுசிலவிடங்களில் "சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, யாறுபோலப்பரந் தொழுகி; யேறுபொரச்சேறாகித் தேர்ோடத்துகள்

கெழுமி, நீறாடிய களிறுபோல, வேறுபட்ட வினையோ
வத்து" என்புழிப்போல இரண்டடிகளின் மேலும்
முதற்சீர் எதுகைபொருந்த அமைத்திடுகின்றார். பின்
னுஞ் சிலவிடத்து "வான்பொய்ப்பினுந் தான்
பொய்யா" "கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து"
"நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி, பணைநிலைப் புர
வியி னணைமுதற் பிணிக்கும்" என்றாற்போல ஓரடியி
னுள்ளேயே முதற்சீரும் இரண்டாஞ்சீரும், முதற்
சீரும் மூன்றாஞ்சீரும் எதுகைபொருந்தப் பாடுகின்
றார். ஓரோவிடத்து அகவலடியில் "வாரேன் வாழிய
நெஞ்சே கூறுகிர்" "நுண்ணிதி னுணர நாடி நண்
ணார்" "பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்"
என்றாற்போல முதற்சீரும் நான்காஞ்சீரும் எதுகை
பொருந்த அமைத்திடுகின்றார். மற்றும் ஓரோவிடத்து
"மாத்தானை மறமொய்ம்பிற, செங்கண்ணாற் செயிர்த்
து நோக்கி" என்புழிப்போல எதுகையின்றி முதற்
சீர் இரண்டாஞ்சீர் மோனை ஒன்றவும், "விசிபிணிமுழ
வின் வேந்தர்சூடிய" என்புழிப்போலமுதற்சீரும்
மூன்றாஞ்சீரும் மோனை ஒன்றவும் இயைத்திடுகின்றார்.

இனி ஆசிரியர் தம்மாற்பாடப்படும் பொருள்வழி
யே தம்அறிவைவைத்து மொழிந்துபோகுங்கால்
இடர்ப்படாதுதோன்றும் எதுகை மோனைகளையே
அமைத்திடுகின்றார். பொருளுரைக்கேற்ற எதுகை
மோனை எளிதிற்றோன்றாவிடத்து எதுகைபோல ஓசை
பொருந்துஞ் சொற்களைப்பதித்திடுகின்றார்; இதற்குக்
"கார்க்கரும்பின் கமழாலைத், தீத்தெறுவிற் கவின்
வாடி" "இனமாவி னிணர்ப்பெண்ணை, முதற்சேம்
பின் முளையிஞ்சி" "முனைகெட்டுச்சென்று முன்சம

முருக்கித், தலைதவச்சென்று தண்பணையெடுப்பி" என்றற்றொடக்கத்து அடிகள் எடுத்துக்காட்டாம்; இவற்றுள், கார்க்கரும்பு: தீத்தெறுவு, இனமாவின்: முதற்சேம்பின், முனைகெட: தலைதவஎன்பன உண்மை எதுகையல்லாவிடினும் அதுபோல் ஓசையொன்றியிருத்தல்காண்க. இன்னும் ஓரோவிடத்து இவ்வோசைப்பொருத்தமுடைய சொற்கடாமும் எடுத்தபொருளுக்கு அடுத்துநில்லாவிடின் எதுகைமோனை சிறிதுமின்றியுஞ் சொற்களை யமைத்துச்செலகின்றார்; இஃது, "உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து, வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்" "தேர்பூண்டமாஅ போல, வைகறேறு மசைவின்றி, உல்குசெயக் குறைபடாது" என்பவற்றிற்காணப்படும். இங்ஙனம் பொருளுக்கு இசையச் சொற்பொருத்தும்முறை இவ்வாசிரியரொடொருகாலத்திருரும் இவர்க்குமுன்னோருமான பண்டைச்செந்தமிழ்த் தண்டா நல்லிசைப்புலவர் தமக்கெல்லாம் பொதுவிலக்கணமாம். பிற்றை ஞான்றைத் தமிழ்ப்போலிப்புலவரோ பொருட்சிறப்புச்சிறிதுமின்றி வெறுஞ்சொல்லாரவார அமைப்பிலேயே தம் அறிவைக்கழித்துத் தெளிதமிழுக்குந்தமக்கும் இழுக்குந்தேடுவாராயினர்; அங்ஙனம் அவர்செய்தல் உயிரகத்தில்லாப்பிணவுடம்பைப் பலவகையால் ஒப்பித்துக்கண்டு மகிழ்தலோ டொக்குமாகலின், அவர் இசையாப்புலமை அறிவுடையார்க்கெல்லாந் துயரந்தரும் நீர்மைத்தாமென்றொழிக.

இனி இப்பாட்டின் நடையழகு மிகவும் போற்றற்பாலதொன்றாம். இனிய தெளிதமிழ்ச்சுவை யூறிய் முழுமுழுச்சொற்களால் இப்பாட்டு முற்றும் அமைந்

திருக்கின்றது. அவற்றின்கட் டொடர்புபட்டு எழூஉம் இன்னோசை குழல்யாழ் முதலிய கருவிகளி னின்று போதரும் ஒலிபோல் மிகவுந் தித்தியாநின் றது. இவற்றைப் பயிலுங்காலத்து நம் அறிவு அம் மெல்லோசை வழிச்சென்று உருகி மிகவுந் தூயதான மேலுலகத்தில் உயரப்போகின்றது. நீர் மடையிலே தெள்ளத்தெளிந்த அருவிநீர் திரண்டு ஒழுகுதல் போல இச்செய்யுளோசையும் மெல்லென்று மொழு மொழுவெனச் செல்கின்றது. "மதிநிறைந்த மலிபண் டம், பொதிமூடைப் போரேறி" "மயிலியன் மானோக் கிற், கிளிமழலை மென்சாயலோர், வளிநுழையும் வாய் பொருந்தி" "குழலகவ யாழ்முரல, முழவதிர முரசி யம்ப, விழவறா வியலாவணத்து" "மாயிதழ்க்குவளை யொடு நெய்தலுமயங்கிக், கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக், கொழுங்காற் புதவமொடு செருந்திநீடிச், செறுவும்.வாவியு மயங்கி நீரற், றறுகோட்டிரலையொடு மான்பிணை யுகளவுங், கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி, யந்தி மாட்டிய நந்தா விளக்கின், மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ, வம்பலர் சேக்குங் கந் துடைப் பொதியில்" என்றற் றொடக்கத்துச் சில அடி களை நோக்கினும் இச்செய்யுளின் மெல்லென்ற ஓசையி னிமை நன்குவிளங்கும். மாம்பழச்சாறுபெய்த குடுவை யின் எப்பக்கத்தேபொத்திட்டு நாவைநீட்டினும் அதன் வழியே யொழுகும் அச்சாறு தித்தித்தல்போல, இவ் வரிய செய்யுளின் எவ்விடத்தே அறிவுதோயினும் ஆண்டு இனிமையே விளையாநிற்கின்றது. ஆதலால், எடுத்துக்காட்டிய இவ்வடிகள் மாத்திரமே சுவை கனிந் திருப்பனவென்று நினைதல் இழுக்காமென்க.

இதன்கண்ணுள்ள ஒவ்வொரு சொற்களும் பொருட்கருநிரம்பிக் கொழுந்தீயிற்றெறித்த பொறிபோல் நம்மறிவைக் கொளுத்திப் பலபொருட்டோற்றங்காட்டி விளங்குகின்றன. பயன்படாது நிற்குஞ் சொல் ஒன்றாயினும் இதன்கட் காணப்படுவதில்லை. விலைவரம்பறியாப் பட்டாடையின்கண் ஒவ்வோர் இழையும் பிணைந்துநின்று அவ்வாடையினை ஆக்குதல்போல, இதன்கண் ஒவ்வொருசொல்லும் ஒன்றையொன்று கௌவிக்கொண்டு இச்செய்யுளை ஆக்குகின்றது. பெயர்வினைச்சொற்களை அடுத்துநிற்கும் அடைமொழித்தொடர்களெல்லாம் உடம்பொடுகூடிய உறுப்புப்போல் இசைவுபெற்றிருக்கின்றன. இன்னும் இப்பாட்டின் சொன்னயம் பொருணயங்கள் விரிப்பிற் பெருகும்.

இனி இப்பாட்டின்கட் சிறிதேறக்குறைய ஆயிரத்து முந்நூற்றறுபத்துநான்கு சொற்களிருக்கின்றன. இவற்றுட் பதினாறுசொற்கள் வடசொற்களாம்; அவை திசை, மகம், காமம், சாலை, அங்கி, ஆவுதி, பூதம், மது, பருவம், பலி, பதாகை, அமரர், கங்கை, புண்ணியம், சமம், மதம், என்பனவாம். 'ஞமலி' என்னும் ஒருசொல் பூழிநாட்டிற்குரிய திசைச்சொல்லாம். ஆகவே, இப்பாட்டில் நூற்றுக்கு இரண்டு விழுக்காடு பிறநாட்டுச்சொற்கள் கலந்தனவென்பது அறியற்பாற்று. இதனால் இவ்வாசிரியர் காலத்திற் றமிழ் மிகவும் தூயதாக வழங்கப்பட்டு வந்ததென்பது புலப்படும் என்க.

# விளக்க உரைக்குறிப்புகள்.

இபபட்டினப்பாலையின் உரைக்குறிபபுகள் சில ஈண்டெழுதுதற்குமுன், இதன்பொருள்கோள் முறையினைச் சிறிதுவிளக்குதல் இன்றியமையாது வேண்டப்படுவதாகலின் அதனை இங்கு ஒருசிறிது தெளித்துரைக்கின்றாம்.

மாட்டு: பத்துப்பாட்டுக்களில் ஒன்றாகிய இப்பட்டினப்பாலையும் இதனோடு சேர்ந்த ஏனை ஒன்பது பாட்டுக்களும் பொருட்டொடர்புற்று மிகநீண்டு அமைந்தனவாம். ஒரு சங்கிலியிற் பலகண்கள் இருத்தல் போல்இப்பாட்டுக்களிடத்தும் அகன்றுநின்றுபொருள் பொருந்துகின்ற இடங்கள் பல உளவாம். ஒரு பொருள் ஓரிடத்துச்சென்று ஒருவாறான்முடிநதும் முடியாமலும் நிற்பப், பிறிதொருபொருள் அவ்விடத்தினின்றுந தோன்றி நடநதுபோய்ப் பிறிதோரிடத்து முடிந்தும் முடியாமலும் நிற்ப இங்ஙனமே இடையில் வருவனவெல்லாம் அமையக் கடைசியில் அப்பாட்டின் பொருள் முற்றுப்பெறுவதாகும். இவ்வாறுஇடையிடையே முடிந்தும் முடியாமலும் நிற்கும்பொருள்கள் கடைசியாக அப்பாட்டின்கட்கருக்கொண்ட முதற்பொருளைச்சார்ந்து முடியுமாகலின் அவை சார்புபொருள்கள் என்று பெயர்பெறுவனவாம். இச்சார்புபொருள்களோடு கூடிச் சிறந்துவிளக்கும்பொருள் முதற்பொருள் எனப்படுவதாம். முடியணி வேந்தனொருவன் அருமணிகுயிற்றிய செங்கோல்கைப்பற்றி அரி

யன்னவீற்றிருப்ப, அவனைச்சார்ந்துநின்று அவன் பரிவாரமெல்லாம் விளங்கினாற்போல ஒருபாட்டின்கட் கருக்கொண்டமுதற்பொருள் அதற்கு ஓருயிராய்ச் சிறந்து நிற்ப ஏனைச் சார்புபொருள்களெல்லாம் அதனைச் சூழ்ந்துகொண்டு அதனைச்சிறப்பித்து விளங்கச் செய்வனவாம். சில்லொளி வீசும் வான்மீன்கள் சூழவிருந்தாலல்லது பல்லொளிவீசும் பான்மதிவிளக்கம் சிறவாதாகலின், சார்புபொருட்சேர்க்கையின்றி முதற்பொருள் சிறப்புடைத்தாய் நிகழாதென்க. ஆகவே, இங்ஙனம் ஒரு பாட்டின்முதற்பொருளைச் சிறப்பித்துக்கொண்டு அமைந்துகிடக்குஞ் சார்புபொருள்கள் இப்பெரும்பாட்டுகளில் அகன்றுநிற்குமாகலின், உரை கூறலுலும் ஆசிரியன் அவைதம்மையெல்லாம் அணுகியநிலையில்வைத்துப் பொருளுரைக்கு நெறியினையே தொல்லாசிரியர் மாட்டு எனவழங்கினர். ஆங்கிலத்திலும் மிலிட்டன் என்னு நல்லிசைப்புலவர் துறக்க இழப்பு என்னும் அரியபெருங்காப்பியத்திற் பாட்டுக்களை அகன்று பொருள்கிடப்பவைத் தெழுதினர்; அதற்குரைகண்டாரும்பிறரும் * அந்நுணுக்கமறிந்து அவைதம்மையெல்லாம் அணுகியநிலையில் வைத்து உரையுரைத்தார். இங்ஙனமே இன்னோரன்ன பாட்டுகளுக்கு உரை உரைக்கவேண்டுமென்பது ஆசிரியர் தொல்காப்பியனார் "அகன்று பொருள்கிடப்பினும் அணுகியநிலையினும், இயன்றுபொருண்முடியத்தந்

* "The most striking characteristic of the poetry of Milton is the extreme remoteness of the association by means of which it acts on the reader"—Macaulay's Milton.

தன ருணர்த்தல், மாட்டெனமொழிபபாட்டியல் வழக்கின்'' என்று ஆணைதந்தருளிய வாற்றானும், அதற்குரைகண்ட பேராசிரியர் உரைவிளக்கத்தானும்தெற்றெனத்துணியப்படும்.

இனி 'மாட்டு' என்னும் பொருள்கோள்முறை இதுவேயாதல் அறியமாட்டாத நச்சினார்க்கினியர், இப்பத்துப்பாட்டுகட்கும்ஒருமுறையுமின்றி ஒரிடத்து நின்றஒருசொல்லையும் பிறிதோரிடத்துநின்ற பிறிதொருசொல்லையும்எடுத்து இணைத்து உரை உரைக்கின்றார். அங்ஙனமுரைகூறுதல் நூலாசிரியன்கருத்துக்கு முற்றும் முரணுதலானும், இவர்க்குமுன்னிருந்த நக்கீரனாரை யுள்ளிட்ட தொல்லாசிரியரெல்லாம் இவ்வாறு உரைஉரைப்பக் காணாமையானும் நச்சினார்க்கினியர் உரைமுறை கொள்ளற்பாலதன்றெனமறுக்க. நச்சினார்க்கினிய ருரைகூறாவிடின் இப்பத்துப்பாட்டுக்களின்பொருள் விளங்குத லரிதேயாதல் பற்றியும், இவர் தொல்காப்பியம், கலித்தொகைமுதலிய பண்டைச் செந்தமிழ்நூல்கட்கு அரியபெரிய தண்டமிழுரை வகுத்ததுபற்றியும் இவரை நெஞ்சாரவழுத்தி இவர்க்குத் தொண்டுபூண்டொழுகுங் கடப்பாடுமிகவுடையேமாயினும், இவர் வழுவியவிடங்களிலும் இவரைப்பின்பற்றி உலகை ஏமாற்றுதல் நடுவுநிலையாகாதாகலின் இவர் வழூஉக்களைக்களைந்துதிருத்திப் பின் இவரைச் செந்தமிழ்மாமுகில்வள்ளலாய்க் கொண்டு வழிபடுவாமென்க.

இனி, இப்பட்டினப்பாலையின்கட் போந்தபொருள்கள் இசைவுபெறுகின்ற பொருத்துவாய்கள் இருபத்தேழு உள்ளன. அவை தம்மையெல்லாம் இறுதியில்

வினைமுடித்துத் தொகுத்துக்காட்டுமிடத்துக்காண்க, இதன்கட்கருக்கொண்டமுதற்பொருள், உகூகூ-வது வரிமுதலாகமுடிந்த "திருமாவளவன் தெவ்வர்க்கோக்கிய, வேலினும்வெய்யகானமவன், கோலினுந்தண்ணிய தடமென்றோளே" என்பது உகஅ முதல் உ௨௦-ஆவது வரிகாறுமுள்ள "முட்டாச்சிறப்பிற்பட்டினம்பெறினும், வாரிருங்கூந்தல் வயங்கிழையொழிய, வாரேன் வாழியநெஞ்சே" என்பதனோடு பொருந்திநின்றுமுடிவதாகும். ஏனையவெல்லாம் சார்புபொருள்களாய் இம்முதற்பொருளை அணிந்துரைத்தற்பொருட்டு வந்தன வென்க,

குறிப்பு: இங்கே குறியாதுவிடப்பட்டவற்றிற்கெல்லாம் உரை பொருட்பாகுபாட்டினும, பின்னேயுள்ள அருஞ்சொற்பொருள் வரிசையினுங்காண்க.

(க-முதல் அ-வரி) தற்பாடியபுள்—வானம்பாடிப் பறவை; தன்-மழை. இப்பறவை மழைத்துளியை உண்டு உயிர்வாழ்வதாகலின் இது மழைவருகையை நோக்கிப்பாடுமென்றார். தளி-நீர்த்துளி. தேம்ப-வாட.

(கூ—கக) கார்க்கரும்பு-பச்சைக்கரும்பு. ஆலை-பாகுகாய்ச்சுங்கொட்டில். தெறுவு-சுடுதல். கவின்-அழகு. செறு-வயல். மோடு-பருத்தவயிறு. கூடு-செல் வைக்குங்கூடு. இணர்ப்பெண்ணை-குலைகளையுடைய பனை; அன்றிப் பூங்கொத்துகளையுடைய கூந்தற்பனை எனினுமாம். முதற்சேம்பு-அடியிலே கிழங்குள்ள சேம்பு என்னுஞ்செடி.

கும் மகளிர்க்குரிய ஓர் இயற்கைக்குணம். இதனை ஆசிரியர்நக்கீரனார் "கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை" என்பர். ஈண்டு 'மடம்' கள்ளம் அறியாமை என்னும் பொருட்டு, என்னை? ஈண்டுக்கூறப்பட்டார் சிறுமியரேயாகலின். கொடுங்காற் கனங்குழை - வளைந்தசுற்றுள்ளதாகச் செய்யப்பட்டகனத்த குண்டலம். முன்வழிவிலக்கும் விலங்குபகையல்லது கலங்குபகையறியாக் கொழும்பல்குடி-புதல்வர் விளையாடுங் காலத்து அவர் உருட்டுஞ்சிறுதேரினைச் சிறுமகளிர் எறிந்த குண்டலங் தடுக்கநிற்கச்செய்யும் இது போன்ற சிறுதடைகளானபகை நேர்வதல்லது வேறு தம்மனங் கலங்குதற்குக் காரணமான பகையில்லாத செல்வநிறைந்த பலகுடிகள் என்க; பாட்டுச்சென்றவாறே எளிதிலே பொருள்கொள்ளக்கிடக்கும் இவ்வடிகட்கு இப்பொருள் காணமாட்டாதநச்சினார்க்கினியர் இவற்றை ஓர் இயையுமின்றிக் 'கையினுங் கலத்தினும் மெய்புறத்தீண்டிப், பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ, திருஞ்செருவின்' என்னும் எழுபது எழுபத்திரண்டு எழுபத்துமூன்றும் அடிகளோடுசேர்த்துப் பொருளுரைத்துப் பின்பவற்றைக் கொண்டுவந்து 'கொழும்பல்குடிச் செழும்பாக்கம்' என்பதனோடுகூட்டி முடித்திடர்ப்படுகின்றார்; இங்ஙனம்பொருளுரைத்தல் பாட்டின்வரன்முறை சிதைத்தலாமன்றிப் பிறிதென்னை? இங்கே 'பாக்கம்' என்றது காவிரியாற்றின் கரையிலுள்ள ஊர். 'முதுமரத்தமுரண்களரி' என்னும் ருகூ-ஆம் அடிமுதற்கொண்டு, எச-ஆவதுவரிவரையில் கடற்கரையிலுள்ள செம்படவர்குப்ப இயற்கை சொல்லப்படுகின்றது. இவ்வாறாகப், பாக்கத்திற்சொல்லப்

பட்டதனைக்குப்பத்திற்கும் குப்பத்தில் நடைபெறுதலைப்பாக்கத்திற்கும் ஏற்றி அவர்பொருளுரைத்தது போலியுரையாமென்க.

(உஅ-ருகூ) கொள்ளை-விலை. பணை-குதிரை இலாயம். புறவு-புறம்பு. 'உருகெழுதிறலுயர் கோட்டத்து' என்பதற்கு நச்சினார்க்கினியருரைத்த பலபொருளுங் காண்க. 'கோட்டம்' கரையுமாம், கோயிலுமாம்.

(சு0-ரு0) போர்க்கதவு - வாய்பொருந்தின கதவுகள்; "போரமை புணர்ப்பின்" என்றார் நெடுநல் வாடையினும். ஓவம்-சித்திரம்; ஓவத்தன்ன இடனுடை வரைப்பின்" என்றார் புறத்திலும்.

(ருக-ருரு) கேணித் தகைமுற்றம்-கேணிகளை உள் அடக்கின முற்றம்; தகைதல்-உள்ளடக்குதல்.

(ருரு-ருஅ) 'முனிவர் வேட்கும் புகையை வெறுத்தலாற் குயில்கள் சோலையைவிட்டுக் காளிகோட்டத்திற் போய்த் தூதுணம்புறுக்களோடும் ஒருபுறத்தே தங்கும்' என நேரே பொருள்படுதலை விடுத்து நச்சினார்க்கினியர் காளிகோட்டத்தைப் புறுக்களுக்கு விசேடணமாக்கிப் பின் அப்புறுக்களோடுங் குயில்கள் காவிலே சென்றிருக்குமெனக் காவுடனே சேர்த்துப் பொருளுரைக்கின்றார். அங்ஙனம் பொருளுரைப்பின் முனிவர் வேள்விவேட்குமிடம் இதுவென்பது பெறப்படாமையானும், குயில்கள் எவ்விடத்தைவிட்டு எங்கேபோயிருந்தனவென்று வினவுவார்க்கு இறுக்கலாகாமையானும் அஃதுரையன்றென மறுக்க. தவப்பள்ளிகளுள்ள காவிலே முனிவர்வேட்கின்றாரென்றும், அங்கெழும் புகையை வெறுத்து அச்சோலையை நீங்கிப்போய்க் குயில்கள் காளிகோட்டத்திற் றங்குகின்றனவென்றும்

பொருள்கூறுதலே பொருத்த முடைத்தாதல் காண்க. காளிகோட்டம் நகர்ப்புறத்தே உள்ளது; முனிவர் வைகுங்கா அதற்குஞ் சேய்த்தாய் உள்ளதென்க. கடி நகர்-அச்சந்தருங் காளிகோட்டம். தூது-சிறுகல்.

(௫௯-௭௪) கருந்தொழில் - கொலைத்தொழில். கொலைத்தொழிலினும், இரும்புமுதலான வலியஉலோகங்கள் அடித்துத்திரட்டுந் தொழிலினும் பழகியகையைக் 'கருங்கை' என்பர்; "கொன்றுவாழ்தொழிலினும் வன்பணித்தொழிலினுங், கன்றியதொழிற்கை கருங்கை எனப்படுமே" என்பதூஉங்காண்க. 'கருந்தொழிற்கலிமாக்கள்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'வலியதொழிலையுடைய செருக்கின பரதவர்பிள்ளைகள்' என்றுபொருளுரைத்து 'இவர் (௬௩) கடலிறவின் சூடுதின்றும், (௬௪) வயலாமைப் புழுக்குண்டும், (௬௫) வறளடம்பின் மலர்மலைந்தும், (௬௬) புனலாம்பற் பூச்சூடியும், (௬௫) கோண்மீன்போல' என்றுசேர்த்துக் கொண்டுபோய்ப்பின் (௭௭) 'ஏழகத்தகரொடு சிவல் விளையாட' என்பதனோடு ஓரியையுமின்றிக் கூட்டி முடித்து இடர்ப்படுகின்றார். 'கலிமாக்கள்' என்பதற்குச் சிறுபிள்ளைகள் என்று பொருள் கொண்டமையானே 'விளையாட' என்னும் வினைவந்தஇடம்பார்த்து இணக்கி இவ்வாறுபோலியுரைகூறினார். அதன்பின் ௭௩-இல் உள்ள 'இகன்மொய்ம்பினோர்' என்பதனைப் பிரித்தெடுத்துக் கொண்டுபோய் ௬0-இல் உள்ள 'வரி மணலகன்றிட்டை' என்பதனோடு சேர்த்துத்திரும்பவும் ௭0-இல் உள்ள 'தீண்டி' முதலியவினைகளோடு சேர்த்துப்பிறகுஅதனை ௨௭-இல் உள்ள பாக்கத்தோடு இயைத்துப் பெரியதோர்இடர்விளைத்துப் பாட்டின்

பொருணயஞ் சிதைத்தார். இவர்போல் இங்ஙனம் உரைக்குழப்பஞ்செய்வார் பிறரை வேறுயாண்டுங்கண்டிலம். சிறார் விளையாட்டையும், வலியபெருமக்கள் போர்விளையாட்டையுந் தனித்தனியே கூறவேண்டுமெனக்கருதிய தங்கருத்தை, அக்கருத்துக்குச் சிறிதும் இடந்தராத ஆக்கியோன் றிருப்பாட்டில் இயைப்பான்வேண்டி அதனை அங்ஙனமெல்லாம் அலைத்து வரம்பின்றி யுரைகூறத்துணிந்தது அவர்க்குப் பெரிதும் ஏதமாம் என்க.

இனிக் 'கருந்தொழின் மாக்கள்' என்பதற்கு மீன்பிடிக்குங் கொலைத்தொழிலிற்பழகிய வலியசெம்படவர் எனவைத்து நேரேபொருளுரைத்துச் சென்றால் இப்பகுதி ஆற்றொழுக்காய்ப் பொருள்பயந்து செவ்விதின் முடியுமாற்றைப் பொருட்பாகுபாட்டில் வரைந்த பொழிப்புரைக்கட் காண்க. 'கலிமாக்கள்' என்பதற்குச் சிறார் என்று பொருளுரைத்தற்கு அதிகாரவியைபு இடந்தராமையோடு அற்சொற்றொடரும் இடந்தருவதின்றாம்; என்னை? சிறுமகார்க்குக் கருந்தொழில், வலிய, செருக்கிய முதலான அடைமொழிகள் ஏலாமையானும், மாக்கள்என்னுஞ்சொல் அப்பொருடராமையானு மென்பது. மற்றுக் கிடந்தவாறே வைத்துக் 'கலிமாக்கள்' செம்படவர்எனப் பொருளுரைப்பின், 'இகன்மொய்ம்பினோர்' என்பதும் அவரையேகுறித்துநின்று கூறியதுகூறலாமெனின்; அற்றன்று, செம்படவர் மேற்சொன்னவாறு 'கையினுங் கலத்தினும் மெய்யுறத் தீண்டிப்' போர் இயற்றியும் அதனானும் தம் வலியடங்காமையின் 'மாறுபட்டதிற

லுடையராய்க்’ கவண்கல் வீசுவாராயினரென்று உரை கூறக் கிடத்தலால் அது கூறியதுகூற லாகாதென்க.

வறள் அடம்பு-வறண்ட மணலிற் படர்ந்த அடம்பங்கொடி; இக்கொடி கடற்கரை மணலிற் படருமென்பது நெய்தற்கலி (க0) யுள்ளும், பதிற்றுப் பத்துள்ளும் (௩0, ருக) கூறப்படுதலின் இது ‘வறள்’ என்னும் அடைபடுத்துவந்தது.

(எரு-எஎ) ‘உறை’ என்பது மண்ணாற்சுவர் போற் சூழ்வளைந்து ஓரடிக்குமேல் உயரமாக்கிச் சூளையில் வைத்துச் சுட்டெடுப்பது. நிலத்தை அகழ்ந்து இவ்வாறமைத்த உறைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிச்செய்வது ‘உறைக்கிணறு’ என்றுசொல்லப்படும். மேழகத்தகர்-துருவாட்டின் ஆண்; இதனை ‘ஏழகம்’ என்றும் வழங்குப; இவ்விருசொல்லுந் துருவாட்டின் ஏற்றுக்குப் பெயராதல் திவாகரத்துங் காண்க. சிவல்-கௌதாரிப்பறவை. புறச்சேரி-இழிதொழிலாளராய செம்படவர் நகர்க்குப் புறத்தேயிருக்கும் ஊர்; இது குப்பத்தை அடுத்துள்ளதாகும்.

(எஅ-க0ரு) கிடுகுநிரைத்து எஃகு ஊன்றி-கேடகத்தை வரிசையாவைத்து வேலை ஊன்றியென்க. நடுகல்லின் அரண்-நட்டகல்லேயே இடமாய்க்கொண்டு நின்றவீரன் என்க. இவ்வாறன்றி, இறந்துபட்டவீரனுக்கு அறிகுறியாக அல்லது நினைவுக்குறியாக நிறுத்திய கல்லையுடைய காவலிடம் என்று பொருளுரைத்தலுமொன்று. நடுகல் நின்ற இவ்வரணத்தைத் தூண்டிற்கோல் சார்த்திய செம்படவர் குடிசைவீட்டுக்கு ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் வெளிப்படையாக உவமை கூறுதலையும் அறியாது, நச்சினார்க்கினியர்

இவ்வடிகளைப் பிரித்தெடுத்துக்கொண்டுபோய் எக-வது அடியிலுள்ள 'புறக்கொடாஅது' என்பதனோடு இயைத்து ஒருபோலியுரை கூறினார். அங்ஙனங் கூறுதற்கு ஓரியைபின்மையானும், ஆசிரியர் கருத்துக்கு மாறாய் உவமமின்றிப் பிறழ்தலானும் அவருரை பொருந்தாதென மறுக்க.

'நெடுந்தூண்டி விற்காழ்' என்றமையான் அதனோடு இனமான மீன்இடும்புட்டிலும் ஈண்டுக்கொள்ளப்படும். கேடகம் மீனிடும் புட்டிலுக்கும், வேல் தூண்டிற்கோலுக்கும் உவமைகளாம்.

சினைச்சுறவின் கோடுநட்டு மனைச்சேர்த்திய வல்லணங்கினால்-கருக்கொண்ட சுறாமீன் கொம்பைநட்டு அதனையே இருக்குமிடமாகச் சேர்த்த வலியகடற்றெய்வத்தின் பொருட்டு. மனை-இருக்குமிடம்; இச்சொல் இப்பொருள்படுமாகவும், நச்சினார்க்கினியர் இதனைக் கொன்னே வேறுபிரித்துப்போய் அக-வது வரியிலுள்ள 'மனைமுன்றில்' என்பதனோடு கூட்டினார். "நெய்தனிலத்தில் நுளையர்க்கு வலைவளந்தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக்கோடு நாட்டிப் பரவுக்கடன்கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்" என்பது பொருளதிகாரத்தில்நச்சினார்க்கினியருரைத்தவுரை.

மடிதல்-தந்தொழில் செய்யாது சோம்புதல். காவிரித்துறைக்கு உவமையாய் நேரேசென்றியைவதாகிய 'பெறற் கருந்தொல்சீர்த் துறக்கம்' என்னும் அடியை கககவது அடியிலுள்ள 'நெடுங்கால்மாடம்' என்பதனோடு இயைத்து இடர்ப்படுகின்றார் நச்சினார்க்கினியர். கவலையின்றிப் பல்பயன் நுகர்ந்து பரதவர் தம்

மகளிரோடும் இனிது விளையாட்டயர்கின்ற காவிரித் துறையைத், தேவர் அரம்பைமாதரோடும் விளையாடு கின்ற துறக்கத்திற்கு உவமை கூறுதலே நிரம்பவும் பொருந்த முடைத்தாம் என்க.

(கoகூ-ககரு) துணை - காவன். மது - காமத் தேன். கொடுந்திமில் - முன்வளைந்த கட்டுமரம், அல்லது மீன்படகு, தோணி எனவும் ஆம். குருஉச்சுடர்-நிறஞ்சிறந்த விளக்கு. கண் அடைஇய - கண் அடைத்த, அதாவது கண்டுயின்ற.

(ககசு-கஉரு) எக்கர் - காவிரியாற்றுநீர் கொண்டு வந்து திரட்டிய இடுமணல். இவ்வெக்கர்மணலிலே கடையாமத்தில் துயில்கொண்டு கிடப்பார் சுங்கங் கொள்ளுங் காவலாளர் என்பது நேரே பொருள்படுவதாகவும், இதனைவிட்டு நச்சினார்க்கினியர் அதனைப் பரதவர்மேலேற்றி அவர் அம்மணன்மேற் கண்டுயின்று கிடப்பரென வுரைகூறி, மற்றை நாளில் அப்பரதவர் ‘வெறியாடு மகளிரொடு’ கூடி விழாவெடுப்பரென கருரு-வது வரியோடு கொண்டுபோய்க் கூட்டி முடித்திடுகின்றார். இப்பாட்டுச் செல்லுநெறியை ஒரு சிறிது நோக்குவார்க்கும் இவருரை பொருந்தாமை நன்குதெளியப்படும். சுங்கங்கொள்வோர் தங்கடமை வழாது இரவிலுஞ் சாவடியிலிருந்தவாறே காவலாய் எக்கர்மணலிற் றுயில்கொள்வரெனக் கிடந்தவாறு வைத்துரைத்தலே பொருட்சிறப்புடைத்தாமன்றிப், பரதவர் உறங்கினரென வாளாது கூறல் சிறவா தென்க,

வேலாழி - கடல், ஈண்டு ஆகுபெயராற் கடற் கரை. இனிவேலா ஆழி எனப்பிரித்துக் கரையுங் கட

லுமென உரைத்தலுமொன்று ; இவ்வாறு கொள்ளின் 'தாழை வேளாழிவியன்றெருவில்' என்பதற்குத் 'தாழைவளர்ந்தகரையினையும் கடலருகே நின்ற அகன்ற தெருவினையுமுடைய' என்று பொருளுரைக்க ; வேளா ஆழி என்பவற்றில் ஆழி என்பதன் முதல் தொக்கு வேளாழி என்றனவை புணர்ந்தன. உல்கு-சுங்கம் ; "உறுபொருளும் உல்குபொருளும்" என்னுந் திருக்குறளிலும் இஃது இப்பொருட்டாதல் காண்க.

(கஉ௫-கச௪) வலியுடை வல் அணங்கின் நோன் புலி-வலியுடைமையால் வலிதேவருத்து மியல்பினதான வலியபுலியினையுடையாளர் ; 'புலி' உவமவாகுபெயர். பண்டம் பொதிமூடை-பண்டங்கள் பொதிந்தமூட்டை. வருடை-ஒருவகைமான். ஏழகம் : மேழகம் என்பன ஆட்டுக்கிடாய் என்னும் ஒருபொருளை யுணர்த்துவன வாம்.

(கச௨-க௫அ) குறுந்தொடை-அணுகினபடிகள். படிக்கால்-ஏணி. பல்தகைப்பு-வீட்டின் பலபகுதிகள் : கட்டுகள். வளிநுழையும்வாய் - தென்றற்காற்றுப் புகும் சாளரம். நுண்தாது உறைக்கும்-நுண்ணிய மகரந்தப் பொடியைச் சொரியும் ; "புன்னை நுண்டா துறைத்தரு நெய்தல்" என்னும் ஐங்குறுநூற்றிற் போல. துடிப்பு - கணு. ஆவணம்-கடைத்தெரு.

(க௫கூ-கஅ௩) மையறுசிறப்பிற் றெய்வஞ்சேர்த்திய மலர் அணிவாயிற் பலர் தொழுகொடி-குற்றமற்ற சிறப்பினையுடைய தெய்வத்தை ஏற்றுவித்து மலர்களணிந்த கோயில் வாயிலிலே பலருந் தொழுதுசெல்லுங் கோழிக்கொடி என்க. நின்றவாறே சென்று

இயைந்து இங்ஙனம்பொருடருவதாகிய 'மையறுசிறப் பிற்றெய்வம்' என்னுஞ் சொற்றொடரைப்பிரித்தெடுத் துப்போய், முருகனுக்கும் ஏனைத்தெய்வங்களுக்கும் எடுத்த விழா அருத ஆவணம் என்றுகூட்டி நச்சினார்க் கினியர் இடர்ப்படுகின்றார். கஙூ-வது வரிமுதல் கொடிச்சிறப்புக் கூறப்புகுந்த ஆசிரியர் மற்றைக் கொடிகளைக் கூறுதற்குமுன் தெய்வத்தன்மையுடைய கோழிக்கொடியை முதலிற் கூறக்கருதி முருகப்பிரான் கோயில்வாயிலிற் கட்டப்பட்டிருக்குமதனைக் கூறிய நுணுக்கமறியாது நச்சினார்க்கினியர் தாம் ஒருபொருள் கூறுவான் புகுந்து இழுக்கினார்.

கூழ்-உணவுப்பொருள். மஞ்சிகை-பேழை. பண் ணியம்-பலபண்டம். பாகு உருக்கிய பசுமெழுக்கிற்காழ்- பாகாகக்காய்ச்சிவார்த்த பசிய மெழுக்கைப் பூசிய கோல். கிடுகு-சட்டம்; இச்சொல் முன் ஒருகால் கேட கம் என்னும் பொருளில் வந்தவாறுகாண்க. 'பாகு உருக்கிய' என்பதற்கு இப்பொருள் காணமாட்டாத நச்சினார்க்கினியர் இதனை 'மஞ்சிகை' என்பதனோடு சேர்த்துப் 'பாக்கு வெற்றிலை சொரிந்தமஞ்சிகை' என்று பொருள் கூறினார். அவ்வாறியைத்தற்குச் செய்யுளிடந்தாராமையின் யாங்கூறியதே பொருளென வறிக; சிறார் ஏறுமைப்பொருட்டுக் கோல்களில் மெழுக்குத் தடவி நாட்டுதல் உண்டு. இனி 'மெழுக்கு' என்பதற்குச் 'சாணத்தால் மெழுகுதல்' என்றுரை கூறினருமுளர்; அது பொருந்தாமைகண்டுக் கூறிய வாற்றாற காண்க. 'கரும்பின் ஒண்பூப்போல மேலூன் றியதுகிற்கொடியும்' என்க.

'துவன்று இருக்கைத் தூங்குநாவாய்' எனமாற்

றிக் கூட்டி 'நிறைந்த இருப்பினையுடைய அசையும் மரக்கலன்கள்' என்க.

நறவுநொடை- கள்விற்றல். பதாகை (வடசொல்)- பெருங்கொடி.

(கஅரு-கஅகூரு) காலின்வந்த கருங்கறிமூடை-வண்டியிற் கொண்டுவந்த கரிய மிளகுபொதி. கால்-உருள்; அஃது இங்கே உருளையுடைய வண்டியை உணர்த்திற்று; இச்சொல் இப்பொருட்டாதல் "கால்பார் கோத்து" என்னும் புறப்பாட்டிற் காண்க. "ஒருங்கு தொக்கன்ன வுடைப்பெரும் பண்டங், கலத்தினுங் காலினுந் தருவனரீட்ட" * என்புழி அடியார்க்கு நல்லார் உரைகூறியவாறே 'வழியிற் கொண்டுவந்த' என்றுரைப்பினுமாம். இப்பொருள் கூறவறியாத நச்சினார்க்கினியர் 'நீரிற்காலில்வந்த' என் இரண்டிடத்துக் கூட்டிக் 'கடலிலே காற்றான்வந்த' வெனப்பொருந்தாவுரை வரைந்தார். குடமலை-குடகுமலை; அல்லது மேற்கணவாய்மலை; காவிரிப்பூம் பட்டினத்திற்கு மேற்கிலுள்ளதுவாகலின், ஈண்டதனைக் கூறுதலே பொருத்தமாம்; பொதியம் தெற்கேயுள்ளதாகலின் அதனைக் கூறுதல் பொருந்தாது. ஈழம்-இலங்கை.

(கஅகூரு-உகஉ) துறைமுகத்து நீரில் உலாவும் மீனும் கரையிற் றிரியும் யாடு முதலான விலங்குகளும் நீரிலும் நிலத்திலும் இடரின்றி உறங்கிச் செம்படவர் குடிசை முற்றத்திலும் ஊன்விற்றற் றொழிலையுடையார் குடிசையிலும் தாவிப்பாய்ந்துந் திரண்டும் நிற்கும் என்க. இங்ஙனம் நெறிப்படப் பொருளுரையாது நச்சினார்க்கினியர் 'புரவி மூடை மணிபொன் முதலியன நீரி

* சிலப்பதிகாரம், மனையறம் படுத்தகாதை.

னும் நிலத்தினும் இனிது தங்கி வளம் மயங்கிய மறுகு' என்றிடர்ப்பட் டியைக்கின்றார். 'துஞ்சி' என்னுஞ் சொல்லுக்கு 'உறங்கி' என்னுஞ் செம்பொருளும் அதற்கேற்ற மீன், மாமுதலிய உயிருடைப் பொருள் களும் உளவாகவும், அவற்றைவிடுத்து அச்சொல்லுக்குத் தங்கினை ஆக்கப்பொருள்கொண்டு அவ்வாறு இயைத்தது தீம்பாலுணவிருப்ப அதனை உவர்த் தொதுக்கி அறிவுமயக்குங் கள்ளுண்பார் திறனோ டொப்பதாயிற்றென்க.

மேலும், உகஎ-வது வரியிற் பலவேறு மொழி வழங்கும் பலதேயமாக்களுங் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்துறைவரெனக் கூறிய பகுதியை ஆண்டு நின்றும் பிரித்தெடுத்து வந்து அவர் உறையும் மறுகு என ஈண்டி தனோடு வரன்முறையின்றி முடிக்கின்றார் நச்சினார்க்கினியர்.

கிளைகலித்து-கொல்வாரின்மையின் தம் சுற்றம் பல்கி.

பண்ணியம்-தின்பண்டம். நுகம்-குறுக்குக்கட்டை. பகல்-அதன் நடுவில் தைத்த ஆணி. கொண்டி-மிகுந்தபொருள்.

(உகரு-உகஅ.) 'புலம்பெயர் மாக்கள் பல்லாய மொடுபதி பழகிக் கலந்தினிதுறையும்' எனக் கூட்டுக. பல் ஆயமொடு பதி பழகி-பல தொகுதியாகக் காவிரிப் பட்டினத்திலுறையும் நன்மக்களோடும் ஒருமித்தும் பழகி. வேறு வேறு உயர்ந்தமுதுவாய் ஒக்கல்-வேறு வேறாகச்சிறந்த அறிவுவாய்த்த சுற்றத்தாரையுடைய நன்மக்கள். வேறு வேறாக அறிவுசிறத்தலாவது பல திறப்பட்ட நூல்களிற்பயின்று முதிர்ந்தஅறிவு வாய்த்

தல். பலதிறப் பட்ட அறிவுடைய நன்மக்களெல்லாரும் திருவிழா நடைபெறும் ஓரிடத்திற்சென்று கூடுதல் போலப் பலதிறப்பட்ட மொழிகள்வழங்கும் பலதேயத்தாரும் இந்நகரத்திற் குழுமுவர் என்க. 'வேறு வேறுயர்ந்த' என்னும் அடைமொழித் தொடரை நச்சினார்க்கினியர் புலம்பெயர் மாக்களோடு கூட்டுகின்றார்; அங்ஙனமுரையுரைத்தல் வேண்டாகூறலேயாமென்க.

(உ௨௦-உ௩௧) பிணிஅகம் - சிறைக்களம். பீடுகாழ் முற்றி-தன்பெருமைத்தன்மை வைரம்ஏறி முதிர்தலால். காப்புஏறி-மதிலேறி. வாள்கழித்து-மதிற்புறத்திருந்த வாட்படைவீரரை ஓட்டி. தாறு இவர் துறுகல்-குறுஞ்செடிபடர்ந்த நெருங்கிய பொறைக்கல், அல்லது சிறுகுன்று, " வேங்கைமாத்தகட்டொள்வீ தாயதுறுகல் " என்றார் புறத்திலும். 'உழிஞை' சிறுபூளை எனப்படுமென்று திவாகரத்துட் சொல்லப்படுதலின், அதனேடினமான பெரும்பூளையுஞ் சூடினனென்று ஆசிரியர் கூறிய கருத்தறியாது, நச்சினார்க்கினியர் இச்சொல்லை உ௪௧-ஆம் அடியிலுள்ள 'மயங்கி' என்பதனெடு கூட்டியுரை கூறுகின்றார். 'பொய்கை, செருந்தி நீரற்று' நீடி எனக் கூட்டுக.

(உ௪௦-உ௪௫) அறுகோட்டு இரலை - அறுப்பறுப்பான கொம்புள்ள கலைமான். மான்பிணை-பெட்டைமான்.

(உ௪௬-உ௫௧) கொண்டிமகளிர்-சிறையாகப் பிடித்துக்கொள்ளப்பட்ட மகளிர். 'கொண்டி' முன்னே 'மிகுபொருள்' என்னும் பொருளில் வந்தது காண்க. கந்து-தெய்வம் உறையுந்தறி: சிவலிங்கம். பொதியில், அம்பலம் என்பன கோயிலென்று பொருளுணர்த்தும்.

(உ௫உ-உ௬௦) 'அறுகை' என்பதில் ஐகாரியை; அறுகம்புல், "அறுகையு நெருஞ்சியு மடர்ந்து" என்றார் மணிமேகலையினும். அழல்வாய் ஓரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்-அழன்ற வாயினை யுடைய முதுநரிகள் பிறர்க்கு அஞ்சுதல் உண்டாக ஓங்கி ஊளையிடவும் என்க. கூகையில் ஓர் இனம் ஆந்தை எனவும் பிறிதோர் இனம் கோட்டான் எனவும் வழங்கப்படும் என்பர்; இங்கேகூகையென்பது ஆந்தை. ஆண்டலை-கோட்டான் போல்வதொருபறவை; இதன்றலை ஆண்மக்கள் தலை போலிருத்தலின் இப்பெயர் பெறுவதாயிற்றென்க, "புலவூண்பொருந்திய குராலின் குரலும், ஊண்டலை துற்றிய ஆண்டலைக்குரலும்" என்றார் மணிமேகலையினும்.

(உ௬௧-உ௬அ.) கொடுங்கால் மாடம் - கால்கள் வளைத்து அழகாகக் கட்டப்பட்டமாடம். 'கொடுங்கால்' என்னும் இவ்வடைமொழியை நச்சினார்க்கினியர் பேய் மகள் என்பதனோடு வறிதே இயைக்கின்றார்.

'விருந்து ஆறது உண்டு' எனமாற்றுக; 'உண்டும்' என்பதில் உம்மைதொகுத்தல்.

வறுங்கூடு - வறிதாய்ப்போன நெற்கூடு.

சாவிற்கு முற்குறியாகக் கூகை நடுப்பகலிற் குழறுதலைப் "பேணாரகநாட்டு, நன்பகலுங் கூகைநகும்" என்னும் புறப்பொருள் வெண்பாவாலும் உணர்க, வஞ்சிப்படலம், ௬.

(உ௬௯-உ௭௭)-ஞாயில் - அம்பெய்வதற்கு மதின் மேற் சமைத்த ஒரு மதிலுறுப்பு; இதனை அடியார்க்கு நல்லார் 'குருவித்தலை' என்பர் *

* சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, உ௧எ-ஆம் வரி.

விசிபிணிமுழவு - இறுகக்கட்டின வார்க்கட்டையுடைய முரசு.

இனி இங்ஙனம் வருத்துக்கொண்டு உரைகூறிய பொருத்துவாய்களையெல்லாம் ஒருமுடிபாக்கி இப்பாட்டின் வினைமுடிபுகாட்டுகின்றாம். இதன்கட்போந்த இருபத்தேழு பொருத்துவாய்களையும் பொருட்பாகுபாட்டிற் காண்க. இங்கு முடிபுமாத்திரையே வரைகின்றாம்.

நண்ணார் காப்பு ஏறி வாள்கழித்துத் தாயம் எய்தி அங்ஙனம் எய்தியமையானும் மனம்மகிழானுய்ப் போர் வேட்டுச் சமம்முருக்கித் தண்பணைகளை அழித்துச் செறுவும் வாவியும் மயங்கவும் பொதியிலில் யானை உறையவும் மன்றத்து ஓரி கதிர்ப்பவும் ஆண்டலை விளிப்பவும் பேய்மகள் துவன்றவும் செழுநகர் வறுங்கூட்டுள்ளிருந்து கூகை குழறவும் ஊர்களின் அழியப் பெரும்பாழ்செய்தும் அமைதி பெறுனய்த் தான் முன்னியதுறை போகலிற் பல்லொளியர் ஒடுங்க அருவாளர் தொழில்கேட்ப வடவர்வாடக் குடவர் கூம்பத் தென்னவன் திறல்கெடச் சீறிக் கண்ணுற்செயிர்த்து நோக்கிப் பொதுவர் வழிபோன்ற இருங்கோவேள் மருங்குசாயக் காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கி உறந்தை போக்கிக் குடிநிறீஇப் புழை அமைத்துப் புதைநிறீஇப் பெயர்கொடுத்துப் புறக்கொடாது வேந்தர் சூடிய கழற்காலினையும் புதல்வரும் மகளிரும் திளைக்கும் மார்பினையும் பெருவலிமையினையும் உடைய திருமாவளவன் தெவ்வர்க்கு ஓக்கியவேலினும் யாம்போதற்கு எழுந்த கானம் கொடியதாயிராநின்றது ; அவன் செங்கோலினும் என்காதலியின் மென்றோள்கள் குளிர்ந்தனவா யிருக்கின்றன ; ஆக

வின், காவிரி பொன்கொழிக்கும் கழனியினையும், பாக்கத்தினையும், பூந்தண்டலையினையும், ஏரியினையும், அரண்மனை அட்டிலையும், சாலையினையும், காளிகோட்டத்தினையும், மன்றம் புறச்சேரி முதலியவற்றை யுடையனவாய்த் துறக்கம் ஏய்க்கும் பெருந்துறையினையும், உல்கு செய்வோர் மடியாதிருக்கும் பண்டசாலை முன்றிலினையும், விழவறாத ஆவணத்தினையும். செழுநகர் வரைப்பினையும், நனந்தலை மறுகினையும், வேளாளர் துவன்று இருக்கையினையும் உடையதாய்ப் பலமொழி வழங்கும் பலதேயத்தாரும் போந்துஉறையப்பெற்றதாய் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தையே அவ்வேந்தர் பெருமான் பரிசிலாகத் தரப்பெறுவேனாயினும் கூந்தல் இழை முதலியவற்றையுடைய என் ஆருயிர்க் காதலியைப்பிரிந்துவருதற்கு ஒருப்படமாட்டேன் கண்டாய் நெஞ்சமே! எனவினைமுடிபுசெய்க.

பட்டினப்பாலைஆராய்ச்சியுரை

முற்றும்.

# அருஞ்சொற்பொருள்.

### அ.

அகவ-இசைக்க, கருசு
அகழ்க்குவன்-கல்லுவன், உஎக.
அங்கி (வடசொல்) -தீ, ருச.
அசை-கட்டிய, கஎரு.
அசைஇ-இருந்து, உருக.
அசைவு-இளைப்பு, கஉச.
அஞ்சுவர-அச்சம் உண்டாக, உருஎ.
அட்டி-கொடுத்து, உ0ங ; விட்டு (பரிபாடல்) ; இட்டு (திருமுருகாற்றுப்படை) ; மிகவிட்டு (பெரும்பாணாற்றுப்படை).
அட்டில்-அடுக்களை, சங, உசுஉ.
அடம்பு-அடப்பங்கொடி, சுரு ; பாலிகை (பிங்கலந்தை)
அணங்கு-தெய்வம், அஎ ; வருத்துந் தன்மை, கஙச ; வருத்தம், உகூஅ.
அணை-தறி, ஙக.
அதிர-முழங்க, கருஎ.
அந்தி-மாலைப்பொழுது, உசஎ.
அமரர் (வடசொல்)- தேவர், கஅச, உ00.
அயர்-செய்யும், கொண்டாடும், உகரு.
அரண்-காவலிடம், காவலிடமாய்க்கொண்டு நின்ற வீரனை உணர்த்தியது ஆகுபெயர், எகூ.
அரிமா-சிங்கஏறு, உகூஅ.
அருங்கடி-அரியகாவல், கஙங.
அருங்கடிவரைப்பு-அரிய காவல் அமைந்த மதில், உசுக.
அருத்தி-நுகர்வித்து, உ00.
அருவாளர்-அருவாள நாட்டின் அரசர், உஎரு.
அலவன்-நண்டு, க0க.
அவிர்-விளங்கு, சுச.
அறம்-நல்வினை, சங ; பிங்கலந்தை.
அறுகை-அறுகம்புல் ; ஈற்றில் நின்ற ஐசாரியை, உருசு.
அறு கோட்டு இரலை-அறுப்பறுப்பான கொம்புள்ள கலைமான், உசரு
அறை-பாசறை, உஙஎ.

### ஆ

ஆக்கம்-நுகர்ச்சிப் பொருள்கள், ககூக.
ஆங்கண்-அவ்விடம், அங்கண் என்பது நீண்டது, கஉ.
ஆண்டலை-கூகை கோட்டான் இனத்தைச் சேர்ந்த ஒருபறவை ; இதன் றலை ஆண்மக்கள் தலை போறலின் இப்பெயர் பெற்றது ; இதனைக் கோழி என்பர்பிங்கலந்தையுள்; உருஅ.
ஆயம்-கூட்டம்,உகங; திவாகரம்

ஆரம்-சந்தனக்கட்டை, ௧௮௮.
ஆலை-கொட்டில், கருப்பஞ்சாற்றைக் காய்ச்சும் இடம், ௯.
ஆவணம்-அங்காடித்தெரு ௧௫௮.
ஆவுதி (வடசொல்) -வேள்வி, ௫௫, ௨௦௦.
ஆன்-பசுமாடு, ௨௦௧
ஆறு-இடையறாது, ஆறுதுஎன்னும் வினையெச்சத் தீறுதொகுத்தல், ௨௬௨.

இ

இகல்-மாறுபாடு, ௭௨.
இகுத்து-தொங்கவிட்டு, தாழவிட்டு, ௨௫௯.
இடைகழி-ரேழி, ௧௪௪; "இடைகழிநின்றவென்னை" என்றார் சீவக சிந்தாமணியினும், ௩௯௯.
இணர்-குலை, பூங்கொத்து, ௧௮.
இயம்ப-ஒலிக்க, ௧௫௭.
இயல்-தன்மை, ௧௪௯.
இரலை-ஆண்மான், புல்வாய், ௨௪௫; "இரலையுங் கலையும் புல்வாய்க்குரிய" தொல். மரபியல், ௪௪,
இரியல்-விட்டுப்போதல், ௫௬; ௭௪. 'நீங்கல்' சிலப்பதிகாரம், அந்தி மாலைச் சிறப்புச்செய் காதை, ௫௨.
இரு-பெரிய, ௫௬, ௬௧.
இருக்கை-இருப்பு, ௧௭௪, ௨௧௨.
இருங்கோவேள்-துவரை நகரில் அரசாண்ட வேளிர் மன்னரில் ஒருவன், ௨௮௨; புறநானூறு, ௨௦௧, ௨௦௨.
இளக்கும்-அசைக்கும், ௧௭௨.
இவர்-ஏறிப் படர்ந்த, ௨௩௪; திவாகரம்.
இறவு-இறாமீன், ௬௩.
இறைவன்-அரசன், ௧௨௦.

ஈ

ஈண்டி-திரண்டு, நொக்கு, ௧௩௨.
ஈழம்-சிங்களம், இலங்கை, ௧௬௧.

உ

உகளல்-குதித்தல், தாண்டல், ௧௪௧, ௨௪௫; பிங்கலந்தை, ௨௧௮௯; பாய்தல், திவாகரம்.
உகிர்-நகம், ௧௪௦.
உகுத்தல்-வார்த்தல், ௧௬௬; சிந்துதல், திவாகரம்.
உணங்கு-உலருகின்ற, ௨௨, ௮௩.
உரவுத்திரை-உலவும் அலை, ௧௦௧; இப்பொருட்டாதல், புறப்பொருள் வெண்பா மாலை பாடாண்படலம் "சூடியவான் பிறை" என்னுஞ்செய்யுளுரையிற் காண்க.
உரு-வடிவு, ௩.௬; அழகு, ௧௬௨.
உல்கு-சுங்கம், ௧௨௫.
உலாய்-உலாவி, ௨௩௩.
உவவு முழுமதிவிளங் நம்நாள் ௯௩
உழிஞை-சிறுபூளை, ௨௩௫; திவாகரம் பிங்கலந்தை; இத

லைக் ‘கொற்றன்’ என்பர் புறநானூற்றுரைகாரர்.
உறந்தை-உறையூர், ௨௮௫.
உறழ்-வாது, மாறுபாடு, ௧௭௧.
உறை-மண்ணால் வட்டமாய் வனைந்துகிணற்றினுள் அமைக்கப்படுவன, ௭௯.
உறைக்கும்-துளிக்கும், சொரியும், ௧௫௨; உறை, துளி, திவாகரம்.

ஊ

ஊட்டும்-ஏறப்பண்ணும், ௫௦
ஊழ்-முறை, ௨௨௭
ஊன்-தசை, ௧௭௭.

எ

எஃகு-வேல், ௭௮.
எக்கர்-இடுமணல், ௧௧௭.
எடுப்பி-துரத்தி, ஓட்டி, ௨௩௯.
எய்தி-பெற்று, ௨௨௭.
எயில்-மதில், ௨௭௮, ௨௯௧.
எயினர்-வேடர், ௨௬௬.
எழில்-அழகு, ௨௩௧.
எறிப்ப-ஒளிவீச, ௨௯௨; “எறித்தரு கதிர்தாங்கி” கலித்தொகை, ௯.
எறுழ்-வலிமை, ௨௯௪.

ஏ

ஏகினும்-சென்றாலும், ௨.
ஏமாப்ப-மகிழ, ௧௯௫; “காமர் நெஞ்ச மேமாந்துவப்ப” என்றார் புறநானூற்றினும்.
ஏய்க்கும்-ஒக்கும், ௧௦௪.
ஏழகம்-ஆட்டுக்கிடாய் ௧௪௧; இச்சொல்‘மேழகம்’எனவும்வரும், பிங்கலந்தை, ௨௪௮௨.
ஏறு-எருது, ௪௯.
ஏற்றை- ஆண்நாய், ௧௪௦.

ஒ

ஒக்கல்-சுற்றம், ௬௧, ௨௧௪.
ஒருவேம்-நீங்கேம், பிறழமாட்டேம், ௨௯௦; திவாகரம்.
ஒல்க-சாய, ௨௫௦.
ஒள்ளெரி-ஒளிபொருந்திய நெருப்புவெளிச்சம், ௧௧௧.
ஒளியர்-ஒளிநாட்டார், ௨௭௪.

ஓ

ஓக்கிய- ஓச்சிய: செலுத்திய, ௨௯௯; எடுக்கப்பட்ட, புறநானூறு, ௬௯; புறப்படவிட்ட, சிந்தாமணி, ௨௧௫௩.
ஓதம்-ஈரம், ௯௮; பிங்கலந்தை, ௩௨௫௦; ஆலை, ௯௮; புறப்பொருள் வெண்பாமாலை “ஓதநீர்வேலி”
ஓம்பி-பாதுகாத்து, ௨௦௧.
ஓர்க்கும்-செவிதாழ்த்துக் கேட்கும், ௨௫௪; புறநானூறு, ௧௫௭.
ஓர்த்தும்-கேட்டும், ௧௧௩.
ஓரி-முதுநரி, ௨௫௭; திவாகரம், பிங்கலந்தை.
ஓவம்-சித்திரம், ௪௯

க

கடி-அச்சம், ருஎ; காவல், உஉக, உ௩சு, உசுக.

கடிந்தும்-நீக்கியும், கககூ.

கடியரண்-காவலமைந்த அரண், உஉக.

கடை-தலைக்கடை, தலைவாசல், உசுக.

கடைக் கங்குல்-கடை யாமம், ககரு.

கண்-இடம், உசஉ.

கண்அடைஇய-கண் அடைத்த : கண் துயின்ற, ககரு.

கண்ணி-ஆடவர் முடிமேற்சூடும் மாலை, க௦கூ.

கணம் (வடசொல்) -தொகுதி, உருகூ.

கதிர்ச்செல்வன்-பகலவன் கஉஉ

கதிர்ப்ப-ஊளை யிட, உருஎ; 'கதிப்ப' எனப்பாடங்கொள்ளுதலுமாம், என்னை ? காரைக்காலம்மையார் மூத்ததிருப்பதிகத்தில் "ஊமைக் கூகையும் ஓரியும் உறழுறழ் கதிக்கும்" என்றாராகலின்.

கதுப்பு-மயிர்,உருகூ.

கதுவும்-பற்றும்,உஎஅ; கவரும், புறநானூறு, கஅ.

கந்து-அருட்குறி : சிவலிங்கம், 'தெய்வம் உறையுந்தறி' என்பர் நச்சினார்க்கினியர், உசகூ.

கமழ்-மணக்கும், கூ.

கமுகு-பாக்குமரம், கஎ.

கராம்-முதலை, உசஉ.

கருந்தலை-பெரியதலை, உ௩௦.

கருந்தொழில்-வலிய தொழில், சுஉ.

கலம்-படைக்கலம், எ௦.

கலி-மனஎழுச்சி : மனச்செருக்கு, ௩உ, சுஉ.

கலித்த-செருக்கிய, செருக்கித்திரிந்த, உசஉ

கலித்து-தழைத்து, கககூ; "தூவற்கலித்த" புறநானூறு, உச.

கவான்-மலைப்பக்கம், பக்கமலை, க௩அ.

கவி-கவிந்த : வளைந்த, கரு௩ ; மூடிய, ககூஎ.

கவிய-'இடிய' நச்சினார்க்கினியர் பொருள், உஉ௩.

கவின்-அழகு, க௦, உசுகூ.

கழல்-காலின் அணி, உகூச ; திவாகரம்.

கழனி-வயல், அ.

கழி-உப்பங்கழி, ௩உ.

களரி-சண்டை யிடு தற்குச் சமைந்த இடம், ருகூ ; திவாகரம், பிங்கலந்தை.

கறி-மிளகு, கஅசு.

கா

கா-சோலை, ரு௩.

காதல்-தலைவனுந்தலைவியும் ஒரு

வரையொருவர் இன்றியமையாராய்த் தமக்குட் பாராட்டும் பேரன்பு, ௧௦௫ ; "காமத்துச் சிறந்தது காதலையுடைய காமம்; அஃதாவது மெய்யுற்றறியாதாரிருவர் அன்பொத்துப் பான்மைவகையால் தாமே மெய்யுற்றுப் புணரும் புணர்ச்சி" என்பர்பரிமேலழகியார்,பரிபாடல், ௯-ஆம்பாடலுரை.

காந்தள்-கார்த்திகைப்பூ, ௧௫௩.

காப்பு-மதில்,௪௧ ; சங்கச்சாவடி, ௧௩௫ ; காவல், ௧௮௪, புறநானூறு, ௧௪.

காய்-எறிக்கும்,௧௨௨;சீவகசிந்தாமணி, ௪௭௩.

கார்-நீர் : பச்சை, ௯.

கால்-கால்கள், தூண்கள், ௧௧௧ ; உருளை, உருளையுடையவண்டியை உணர்த்திற்று, ௧௮௬ ; 'கால்' உருளை என்னும் பொருட்டாதல், "கால்பார் கோத்து" என்னும் புறப்பாட்டுரையுள்ளுங் காண்க. இனிக் 'கால்.' வழியென்றுமாம்.

காழ்-கோல்,௮௦, ௧௬௭; வயிரம், ௨௨௨ ; திவாகரம்.

காழகம்-கடாரம் என்னும் ஊர், (பர்மா ? Burma ?), ௧௯௧.

கான்யாறு-காட்டியாறு, ௧௬௧.

கானம்-காடு, ௩௦௦.

கானல்-கடற்கரைச்சோலை, ௯௪; திவாகரம், பிங்கலந்தை.

கி

கிடக்கை-பரப்பு, ௩௭.

கிடுகு-கேடகம், ௭௮ ; "வார் மயிர்க்கிடுகு" என்பதற்கு நச்சினார்க்கினியருரைத்த பொருள் காண்க, சீவக சிந்தாமணி, ௨௨௧௮ ; சட்டம், ௧௬௭.

கிளை-சுற்றம், ௬௧, ௧௯௬.

கு

குடமலை-குடகுமலை, ௧௮௮.

குடவர்-குடநாட்டார் : மேனாட்டார், ௨௭௬.

குணகடல்-கிழக்குக்கடல்,௧௮௯.

குரம்பை- குடிசை, ௧௯௮ ; பிங்கலந்தை.

குருளை-குட்டி, இச்சொல் புலி பன்றி முயல் நாய் நரியென்னும் விலங்கின் பிள்ளைக்குப் பெயராய்வரும்,௨௨௧.

குரூஉச்சுடர்-நிறம்மிக்க விளக்கம், ௧௧௨.

குவைஇ-குவித்து, ௧௭௮.

குழல்-புல்லாங்குழல், ௧௫௬.

குழவி-கன்று, ௧௪ ; பிள்ளை, ௯௬.

குழறல்-கூப்பிடல்,௨௬௮.

குழிகொன்று-குழியைத் தூர்த்து, ௨௨௩.

குழீஇ-திரண்டு, ௬௯, ௨௬௫.

குழை-மகரக்குழை, உ௩.
குறங்கு-தொடை, க௪௬.

கூ

கூடல்-யாறுகடலொடுகலக்குமிடம் : கழிமுகம், ௬அ.
கூடு-நெற்குதிர், க௫, உ௬எ.
கூதாளம்-'வெண்டாளி' என்பர் நச்சினார்க்கினியர், அ௫; வெண்டாளி ஒருசெடி ; பிங்கலந்தையிலுந் திவாகரத்திலும் இது கொடிவகையிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது.
கூப்பி-குவித்து, க௫௪.
கூம்ப-குன்ற, உஎ௬ ; 'ஒடுங்க' பிங்கலந்தை
கூம்பு-பாய்மரம், கஎ௫.
கூழ்-பல்வகை உணவு, க௬௩ ; திவாகரம்.
கூளி-பேய்க்குப் பொதுப்பெயரான இச்சொல் இங்கே ஆண்பேயை உணர்த்துகின்றது, உ௫க.

கெ

கெழு-பொருந்தின, ௩௬, க௬உ.
கெழுமி-பொருந்தி, ௪எ.

கே

கேணி-கிணறு, ௫க ; திவாகரம்.
கேள்வி-நூற்கல்வி, க௬க; திவாகரம்.

கொ.

கொடுங் கால்-வளைந்த சுற்று, உ௩; வளைந்தகால்கள் (Arches தலைவளைந்த தூண்கள், உ௬க.
கொடுந்தாள்-வளைந்தகால், க௪௦.
கொடுந் திண்ணை-சுற்றுத் திண்ணை, க௪௩.
கொடுந்திமில்-முன்வளைந்தகட்டுமரம், ககஉ ; 'திமில்' தோணி என்பர் திவாகரத்தில்.
கொடுமேழி-வளைந்த கலப்பை, உ௦௫.
கொடுவரி-வளைந்த வரிகளையுடைய புலி, உஉக.
கொண்டி-கொள்ளப்பட்ட மிகுபொருள், உகஉ ; கொண்டி மகளிர்-சிறையாகக் கொண்டுவந்த பெண்கள், உ௪௬.
கொண்மூ-மேகம், ௬௫.
கொழிக்கும்-தெள்ளித் தொகுக்கும், எ ; திவாகரம்.
கொள்ளை-விலை, உ௬.

கோ.

கோட்டம்-கரை, கோயில், ௩௬.
கோடியர்-கூத்தர், உ௫௩ ; திவாகரம்.
கோடு-கொம்பு, அ௬.
கோதை-மகளிர் அணியும்மாலை, கக௦; ௬-ஆம்பரிபாடல் பரிமேலழகியா ருரையிலுங் காண்க.
கோதையர்-மாலையணிந்த மகளிர், அ௫.
கோள்-குலை, க௬ ; "செழுங்

கோள்வாழை" புறநானூறு, கசுஅ.
கோள்மீன்-கிரகம், சுஅ.

ச

சமம்-போர், உ௩அ; போர்க்களம், இனியது நாற்பது, கூ
சா
சாம்பும்-வாடும், கஉ; "கின்னரர் சாம்பினுரே" சீவகசிந்தாமணி, எஉஅ.
சாய-குறைய, உஅஉ
சாயல்-மென்மை, கடு0; தொல்காப்பியம், உரிச்சொல்லியல், உஎ.
சாற்றி-சொல்லி, உகூ.
சாறு-திருவிழா, உகடு.
சி
சிமையம்-மலை யுச்சி: குவடு, க௩அ.
சிவல்-கௌதாரி, எஎ; பகண்டையுமாம்; திவாகரம்.
சினத்த-கோபத்தினை யுடைய, கஉஉ.
சீ
சீறி-மிகச்சினந்து, உஎஎ; திவாகரம்.
சு
சுடர்-ஒளி, உக.
சுறவு-சுறாமீன், அகூ.
சூ
சூடு-சுடப்பட்ட தசை, சு௩; "குறுமுயற் கொழுஞ்சூடு" என்புழியும்இப்பொருட்டாதல் காண்க, புறநானூறு, ௩ச.
செ
செயிர்த்து-சினந்து, உஅ0; 'குற்றத்தைஎண்ணிப்பார்த்து' என்றுரைப்பினுமாம்; இச்சொற்கு இருபொருளுமுண்மை, "செயிரே குற்றமுஞ் சினவலுமாகும்" என்னுந் திவாகரசூத்திரத்தாலுணர்க.
செரு-சண்டை: போர், எஉ.
செருந்தி-கோரைப்புல், உசடு; வாட்கோரையுமாம், திவாகரம், பிங்கலந்தை.
செல்லா-கெடாத, கஅச.
செவ்வேள்- முருகப் பிரான், கடுச.
செற்றோர்-பகைவர், உஉஅ; பிங்கலந்தை.
செறி-நெருங்கின, கடுச.
செறு-வயல், கக, உசச.
சே.
சே-சிவந்த, கசகூ.
சேக்கும்-தங்கும், டுஅ, உசகூ.
ஞ
ஞமலி-நாய், கச0
ஞா
ஞாயில்-அம்பெய்தற்கு மறைவாய் மதில்மேல் அமைக்கப்படுவது, உஅஅ; இதனை "மீன்

பூத்தன்னவுருவனாயில்" என்பர் ஐயூர் மூலங்கிழார், புறநானூறு, உக; "ஏவறை" என்பர் புறப்பொருள் வெண்பாமாலையுரைகாரர், உழிஞை, ரு; "குருவித்தலை" என்பர் அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, உகஎ-ஆம் வரி

த

தகர்-யாட்டுக்கடா, எஎ, கசக.

தகை-உள்ளடக்கின, ருக; 'கட்டப்பட்ட' என்று உரைப்பினுமாம், "ஒங்குநிலைவாயிற் றூங்குபு தகைத்த" என்பத னுரையிற் காண்க, பரிபாடல், உஉ.

தட-பெரிய, ௩௦க; "தடவுங்கயவும் நளியும்பெருமை" தொல்காப்பியம், உரியியல், உச.

தடிந்து-அறுத்து, கஎசு; பிங்கலந்தை, உகசரு.

தண்-குளிர்ந்த, கசுச.

தண்டலை-பூஞ்சோலை, ௩௩.

தலை-இடம், உ௩௯.

தலைமணக்கும்-ஒன்று கலக்கும், ௯எ.

தலைமயங்கிய- ஒருங்கு கலந்த, கக௩.

தவ-மிக, உ௩௯; தொல்காப்பியம், உரியியல், ௩.

தளி-நீர்த்துளி, ௩; 'தளி' தலைப்பெய்மழைத்துளியென்பர் பிங்கலந்தையில்.

தா

தாது-பூந்தாது: மகரந்தம், கருஉ.

தாஅய்-பரந்து, கருரு.

தாயம்-உரிமை, உஉஎ.

தாழ்-தங்கும், ரு௩; தாழக்கோல், கசுச.

தாழ்ந்த-வளர்ந்து நின்ற, அச.

தாழை-தாழஞ்செடி, அச.

தாள்-அடி, கீழ், அச; முயற்சி எனினுமாம், உஎஅ.

தானை-படை, உஎக.

தி

திட்டை-மேடு, மேட்டுக்குப்பம், சு௦.

திணை-'திண்ணை' என்பதுநடுவே தொக்கது, உசு௩.

திரிதரு-திரியும், சுஎ.

திரிபுரிநரம்பு-முறுக்குதல் செய்தநரம்பு, உருச; "திரித்து முறுக்கின நரம்பு' என்று உரைப்பினுமாம்; மணிமேகலையினும் 'திரிபுரிவார்சடை' என்றார், கசஅ-ஆம்பக்கம்.

திரு-திருமகள், சக.

திருநிலைஇய-வீரத் திரு நிலைபெற்ற, உ௯க.

திரை-அலை, கஎ௩.

திளைப்ப-தழுவ: புணர, உ௯சு; "இளஅனங்கன்னிநாரையைத்

திளைத்தலின்" என்புழியும்இப் பொருட்டாதல்காண்கசீவகசிந் தாமணி,நாமகளிலம்பகம், ௫௦.
திறல்-வலிமை, ௩௬, ௨௭௭.

தீ

தீங்தொடை-இனியயாழ் இசை ௨௫௪ ; தொடை-யாழ் நரம்பு, புறநானூறு, ௭௦ ; இங்கேநரப் பிசையை உணர்த்திற்று.
தீம்புகார்-காட்சிக் கினிய காவி ரிப்பூம்பட்டினம், க௭௩.

து

துகள்- நுண்பொடி, ௪௭.
துகிர்-பவளம், க௪௮, ௧௮௬.
துகில்-வெள் ளாடை, க௦௭ ; 'வெண்பட்டு' என்பர் சீவகசிந் தாமணி உரையில்,௨௬௬.
துகிற்கொடி-வெள்ளிய துணி யாற் செய்த கொடி, க௬௮ ; 'துகிற்கொடி'வெண்மை செம் மை இரண்டற்கும் பொது வென்பர் சீவகசிந்தாமணியுரை யில், ௩௪.
துச்சில்-ஒதுக்கிடம், ௫௮; "துச் சிலிருந்துதுயர்கூரா" என்பது இனிதுநாற்பது, ௪௦.
துஞ்சி-உறங்கி, கக௫.
துஞ்சும்-தங்கும், ௪க ; "அறந் துஞ்சுஞ்செங்கோலையே" புற நானூறு, ௨௦.
துடி-உடுக்கை,பாலைப்பறை௨௬௫
துடுப்பு-கணு, க௫௩.
துணை-கணவன், க௦௬.
துப்பு-வலிமை, ௨௬௮.
துய்த்தும்-நுகர்ந்தும், ககச.
துயில்-உறக்கம், க௫.
துவன்று-நிறைந்த, நெருங்கிய, க௭௪, ௨க௨; "துவன்றுநிறை வாகும்" தொல்காப்பியம்,உரிச் சொல்லியல். ௩௪.
துறக்கம்-வானுலகு, க௦௪
துறுகல்-பொறைக்கல்,சிறுகுன் று, ௨௩௪ ; "புலவுசேர் துறு கல்" என்றார்ஐங்குறுநூற்றில், ௨க௦.
துறைபோகிய-முற்றக் கற்ற க்௬௬;துறைபோகலின்-முற்ற முடித்தலின், ௨௭௩.

தூ

தூ- தூய, கக௭.
தூஉய்- தூவி, ௨௫௨ ; "மலை வான் கொள்கென உயர் பலி தூஉய் " புறநானூறு, க௪௩.
தூங்கு-அசையும், க௭௪.
தூசு-கூறை, க௪௮.
தூதுணம்புறவு- தூதுஉண் அம் புறவு எனப்பிரித்துச் 'சிறுகல் லைத்தின்னும் அழகிய புறு' எனப்பொருளுரைக்க; "தூது ணம்புறவெனத் துதைந்தநின் னெழினலம்" என்றார் கலியி னும், ௫௬.

தூறு-சிறுசெடி, உ௩௪.

தெ

தெவ்வர்-பகைவர், உகக; "தெவ் வுப்பகையாகும்" தொல். உரி. ருo.

தெறுவு-சுடுதல், கo; "தெறுக திர்க்கனலி" என்பது புறநா னூறு, ௪௩.

தென்னவன்- பாண்டியன், உஎஎ.

தே

தேஎம்-நாடு, தேயம், உ௩௯.

தேம்ப-வாட, ௪.

தேறுநீர்-தெளிந்தநீர், ௯எ.

தொ

தொக்காங்கு-கூடினாற் போல, உகரு.

தொட்டு-அகழ்ந்து, தோண்டி, உ அ௪.

தொடி-கடகம், கரு௪,

தொடுதோல்-செருப்பு, உ௯ரு.

தொடை-படி, க௪உ.

தொல்சீர்-பழையசிறப்பு, கo௪.

தொல்லிசை- தொல் இசை, அடிப்பட்டபுகழ், கஉக.

தொலைத்த-அழித்த, உஉ௯.

ந

நகர்-வீடு, உo, 'மாளிகை' என்பர் புறப்பொருள் வெண்பாமாலை உரைகாரர், பொதுவியற் பட லம், கo; கோட்டம்: கோயில், கரு னை, "மூக்கட் செல்வர் நகர்வ லஞ் செயற்கே" என்றார் புறநா னூற்றினும், ௬.

நசை-விருப்பம், உoரு.

நடுகல்-இறந்துபட்ட மறவனை நினைவு கூர்தற்கு நட்டகல், எக; இங்ஙனங் கன்னடுதலைப் "பரலுடைமருங்கின்" என் னும் புறப்பாட்டிற்காண்க.

நடுவு-நடுநிலைமை, உoஎ.

நண்ணார்-பகைவர், உஉரு.

நந்தா-அவியாத, உ௪எ.

நயந்தும்-விரும்பியும், கக௩.

நறவு-கள், கஅo.

நறு-நல்ல, ருரு.

நண்பகல்-உச்சிப்பகல், உ௯அ; புறப்பொருள் வெண்பாமாலை உரை, வஞ்சிப்படலம், ௪.

நனந்தலை-அகன்றஇடம், க௯௩; தொல்காப்பியம், உரி யியல், எஅ.

நனி-மிகுதி, கஅக; தொல்காப் பியம், உரியியல், ௩.

நா

நாடி-ஆராய்ந்து, உo௯.

நாண்மீன்-நட்சத்திரம், ௯அ.

நாப்பண்-நடு, அக, க௯௪.

நாவாய்-மரக்கலம், களஎ௪.

நி

நிரைத்து-வரிசையாக வைத்து எஅ.

நிலைஇய-நிலைபெறுதற்குக் காரணமான, ௪௨.
நிறீஇ- நிலைபெறச் செய்து உ௮௬.

நு

நுகம்- வண்டிமாட்டுகளின் பிடரிற்றங்குங் குறுக்குக் கட்டை, இதனை 'நுகத்தடி' என வழங்குப, உ0௬.
நுதல்-நெற்றி, உக.

நெ

நெய்தல்-குவளைப்பூ, கக.
நெருஞ்சி-ஒரு முட் பூண்டு, உ௫௬.

நே

நேரிழை-ஏற்றஅணிகலம், உஉ; பரிபாடலுரை, கக.

நொ

நொடை-விலை, க௮0.
நோன்-வலிய, உ௭௮.

ப

பஃறகைப்பு-'பல் தகைப்பு' பல பகுதிகள்; பலகட்டுகள், க௪௩.
பஃறி-படகு, ௩0; 'தோணி' என்பர் திவாகரர்.
பகடு-பெருமை, 'பகட்டெருத்து' பெரிய எருது, ௫உ, க௪௭; பேரெருது, உ0க.
பகர்ந்து-வெளியாகச் சொல்லி, உகக.
பகல்-நுகத்தின் நடுவிற் றைத்த ஆணி; உ0௬.
பசும்பதம்-பசியசோறு, உ0௩.
படப்பை-தோட்டம், ௩உ; பிங்கலந்தை, ௭0௧.
படிக்கால்-ஏணி, க௪உ; "வானுலக மேறுதற்குச் செம்பொன், இருளில் படிக்கால்" என்றார் சீவகசிந்தாமணியிலும், உ௮௭உ.
பண்ணியம்-பண்டம், உ0௩; "சுரங்கருந்து பண்ணியம்" என்னும் பரிபாடலுரையிற்பரிமேலழகர் இப்பொருளே கூறுதல் காண்க, க௪.
பணிபு-தாழ்ந்து, உ௭௪.
பணியம்-பண்டம், 'பண்ணியம்' பணியம் எனநடுவேதொக்கது, க௬௪.
பணை-குதிரைப்பந்தி, இலாயம், ௩க; மருதநிலம், உ௩க.
பதாகை (வடசொல்)- பெருங்கொடி, க௮உ.
பம்பி-அடர்ந்தெழுந்து, உ௫௬; "கதித்தல் பம்மல் கஞறல் கன்றல், எழுச்சியின் மிகுதிக்கெய்தும் பெயரே" என்றார்திவாகரரும்.
பரதவர்-செம்படவர், நுளையர், ௬0; "கடலோடுழந்த பனித்துறைப்பரதவ" என்றார் பதிற்றுப் பத்தினும், ௪௮.
பரி-செலவு, செல்லுதல், க௮௫;

"நிமிர்பரியமா" என்புழியும் இப்பொருள் காண்க, புறநானூற்றுரை, ௧௪.

பருவம்-பொழுது, ௧௨௮ ; வடசொல்.

பரேர்-'பருஎர்' பெரிய அழகு, ௨௯௪.

பலி-தேவருணவு, ௧௬௫ ; வடசொல்.

பள்ளி-தவத்தோர் இருப்பிடம், ௫௩ ; இப்பொருட்டாதல்புறப்பொருள் வெண்பாமாலையுரையிலுங் காண்க, வஞ்சிப் படலம், ௯.

பறழ்-பன்றிக்குட்டி, ௭௫; "குட்டியும் பறழுங்கூற்றவண்வரையார்" என்னுந் தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தால்பன்றிக் குட்டியும் பறழ் எனப்படுதற் குரித்தாதல் காண்க.

பா

பாகு-குழம்பு, ௧௬௬.

பாசிழை-'பசுமை இழை' பசிய அணிகலன், ௧௪௭.

பி

பிடி-பெண்யானை, ௨௨௪.

பிணர்-பொரிந்த வடிவு: சருச்சரை, ௮௯.

பிணி-கட்டு, வார்க்கட்டு ௨௯௩.

பிணிக்கும்-கட்டும், ௩௧.

பிணியகம்-சிறைக்களம், ௨௨௨.

பிணை-மானினத்திற் பெண், ௨௪௫ ; தொல். மரபியல், ௫௭.

பிழி-கள், ௮௯.

பிளிறு-முழங்கும், ௨௩௬.

பிறங்கு-விளங்கும், ௨௮௫ ; உயர்ந்த, "பிறங்குநிலை மாடத் துறந்தையோனே", புறநானூறு, ௬௯.

பீ

பீடு-பெருமைத்தன்மை, ௨௨௨.

பு

புகர்-நிறம்: பச்சென்றநிறம், ௭௪; திவாகரம்.

புணரி-கடல், ௯௭.

புதவம்-அறுகு, ௨௪௩ ; ஒருவகைப்புல் என்பர் பிங்கலந்தையுள்.

புதவு-வாயில், ௧௭௯; "பூரித்துப் புதவந்தோறும்" என்றார்சீவக சிந்தாமணியினும், ௨௫௪௩.

புதை-அம்புக்கட்டு, ௨௮௮.

புயல்-மழை, ௪

புரவி-குதிரை, ௨௪.

புலம்-நிலம், ௧௨.

புலம்பெயர்-தம் நிலத்தைக் கைவிட்டுவந்த, ௨௧௭.

புலவு-புலால், புலால் நாற்றம், ௯௪.

புலிப் பொறித்து- புலியினுருவை இலச்சினையாக இட்டு, ௧௩௫.

புழுக்கு-புழுக்கின இறைச்சி, சஅ; "யாமைப் புழுக்கின்" என்றார் புறநானூற்றினும், உகஉ.
புழை-சிறுவாயில், கசச, உ அஎ; திவாகரம்.
புறக்கொடாது-முதுகு காட்டாது, அதாவது பின்னிடையாது, எக, உகா.
புறம்போக்கி-வெளியே போக விட்டு, கக௫.
புறவு-புறம்பு, ருக.
புன்றலை-சிவந்த மயிரினையுடையதலை, புல்-புற்கென்ற நிறம், பழுப்புநிறம், கூ0; "தில்லையன்ன புல்லென் சடையோன்" என்னும் புறநானூற்றுரையிலும் உ௫உ, "சிறுபுன் மாலைதலைவரின்" என்னும் புறப்பொருள் வெண்பாமாலை, கைக்கிளைப்படலம், ரு-ஆஞ் செய்யுளுரையிலும் இப்பொருட்டாதல் காண்க; 'புற்கு' பொன்னிறம் புகர்நிறம் இரண்டிற்கும் பெயராமென்பர் திவாகரர்.
புனல்-நீர், எ.

பூ

பூதம்(வடசொல்)-குறள், ருஎ.
பூளை-மெல்லியபஞ்சினைத்தரும் ஒருசெடி, இது பெரும்பூளை சிறுபூளை என இருவகைத்து, இங்கிது 'பெரும்பூளை'யினைக் குறிக்கின்றது, உ௬ரு.

பெ

பெண்ணை-பனை, கஅ, அக.

பே

பேஊது-எண்ணாது, கருாது, கக௬; திவாகரம்
பேணி-போற்றி, வழிபட்டு உ00.
பேம்-அச்சம், உருரு; தொல்காப்பியம், உரியியல், ௬க.

பொ

பொதிமூடை-பொதிந்து வைக்கப்பட்ட மூட்டை, க௬எ.
பொதியில்-அம்பலம், உசக; திவாகரம், பிங்கலந்தை.
பொதுவர்- இடையர், உஅக.
பொர-சண்டையிட, ச௬.
பொருத-உரிஞ்சிய, உகூச; "கறுழ்பொருத செவ்வாயான்" என்புழியும் இப்பொருட்டாதல் காண்க, புறநானூறு, ச.
பொழில்-தோப்பு, சோலை, ருரு.
பொறி-அடையாளம், சா;மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறி, கoஉ.
பொறித்து-அடையாளமாக அல்லது இலச்சினையாக இட்டு, க௬ரு.
பொன்ற-அழிய, மாய, உஅக; திவாகரம்.

போ,

பொருஇடைகழி-பெரிய இடைகழி, கசச ; "போகிதழ்" என்பதற்கு 'நீண்ட இமை' எனப் பொருள் உரைப்பர் புறப்பொருள் வெண்பாமாலையுரைகாரர், கைக்கிளைப் படலம், ௩.

போந்தை-பனை, ௭௪.

போர்க்கதவு-வாய் பொருந்தின கதவுகள், ச௦.

ம

மகிழ்ந்தும்-உண்டும், க௦அ; இஃது இப்பொருட்டாதல் "வாங்கமைப்பழுநியதேறன்மகிழ்ந்து" என்னும் புறநானூற்றுரையிற் காண்க, கஉக. 'மகிழ்' தேறலென்றும் பொருள் படுமாகலின், இப்பெயரிற் பிறந்த 'மகிழ்ந்து' என்னும் வினை 'தேறல்உண்டு' என்னும்பொருளில் வரும். 'மகிழ்' தேறலை உணர்த்துதல் "மழையென மருளும் மகிழ்செய்மாடத்து" என்னும் பொருநராற்றுப் படையடியினுங் காண்க.

மஞ்சிகை-பேழை, கசு௩; திவாகரம். மஞ்சிகை வடசொற்போலும்.

மட்டு-கள், க௦அ.

மடம்-அறியாமை, கள்ளம் அறியாமை, உக.

மடிந்து-தொழில் செய்யாது சோம்புதல், க௩.

மணி-செம்மணி, கஅ௭ ; "மண்ணார்மணி" எனப் பரிபாடலிற் (க௦) கூறப்படுதலின், கழுவுதல் எனப்பொருடரும் 'மண்' என்னும் முதனிலையிற் றோன்றிய திச்சொல்.

மதன்-யானைமதம், உ௭அ.

மதி-திங்கள், ௩௫; மதித்தறிதல், க௩சு, இப்பொருளில் 'மதி' வடசொல்.

மது-தேன், காமத்தேன், க௦அ, வடசொல்.

மரபு-முறைமை, க௦௫; "ஈண்டு செலன் மரபின்" என்னும்புறநானூற்றுரைகாண்க, உ௫.

மருங்கு-பக்கம், உ௭௦; கிளைஞர், உஅஉ.

மருப்பு-கொம்பு, உஉக.

மலர்தலை-அகன்றஇடம், சுக.

மலி-மிகுந்த, கஅ.

மலைந்தும்-சூடியும், அஅ.

மலையவும்-சூடிக் கொள்ளவும், கக௦.

மறம்-வீரம், உ௭க.

மறுகு-தெரு, கக௩.

மன்-நிலைபேறு, உ௭அ.

மன்றம்-பொது இடம், சுக, உ௫௫.

மா

மா-கருமை, ருசு; உசக; விலங்கு, யாடு, ககஅ; குதிரை கஉங ; பெருமை, உ௩எ.

மாசு-அழுக்கு, உப்பு, க௦௦.

மாட்டிய- கொளுத்திய, உசஎ; "இரும்புலிவேட்டுவன் பொறியறிந்து மாட்டிய" என்றார் புறத்தினும், கக.

மாந்தி-குடித்து, அக.

மாயிதழ்-கரியஇதழ், உசக.

மாரி-மாரிக்காலம், மழையெனினும்ஆம், கஉஅ.

மால்-பெருமை, மால்வரை-பெரியமலை, க௩அ.

மான்பிணை-பெண்மான், உசரு.

மி

மிசை-மேல், கஎரு.

மிழற்றும்-நிரம்பாமென் சொற் சொல்லும், உசுச; "தாஞென்றுமிழற்றும்" எனவும் (கசுஉசு "வருத்தம்மிழற்றி" எனவும் (உ௩௩க) சீவகசிந்தாமணியிற் போந்தமைகாண்க; "நிழற்றலுமிழ்ற்றலு நிரம்பாமென்சொல்" என்றார் திவாகரத்துள்ளும்.

மு

முக்கால்-மூன்று உருள்கள், உரு.

முகிழ்-முகைத்த, முகிழ்த்த, தாமரைமுகை எனினும் ஆம், உககசு.

முட்டா-இடையூறுபடாத, பிறழாத, உ௦ச; "நல்லறம், முட்டுடைத்தாகஇடைதவிர்ந்துவீழ்தலின்" என்றார் பழமொழியினும், ௩சுசு; குறையாத,உகஅ; இப்பொருட்டாதல்"முட்டின்றொருவர் உடையபொழுதின்கண்" என்புழியுங்காண்க, பழமொழி, க௩ச.

முதல்-அடி, கிழங்கு, கக.

முதுவாய்-அறிவு வாய்த்தல், உகச, உருங.

முரசு-பறைப்பொது, கருஎ; திவாகரம்.

முரண்-மாறுபட்ட, ௩எ; "கடுமுரண்முதலைய" என்னும்புறநானூற்றுரையினும் இப்பொருள் காண்க, ௩எ;முரண்களரி-சண்டையிடும் இடம், ருக.

முரல-ஒலிக்க, கருசு; "முழவுபணைமுரல" என்னும் பரிபாடலுரையையுங் காண்க, எ.

முருக்கி-கெடுத்து, தோல்விபெறச்செய்து,உ௩அ; "தோள்வலிமுருக்கி" என்னும் புறநானூற்றுரையையுங்காண்க,கஅ.

முருகு-மணம், ௩எ.

முழவு-தண்ணுமை, மத்தளம், கருஎ.

முற்றிழை-தொழில் முற்றுப் பெற்ற அணிகலம், உகூகூ.
முன்றில்-முற்றம், அ௩, கசக, கஎஎ.
முன்னிய-நினைத்த, உஎ௩.
முனை-பகைவரிடம், உ௩அ; 'வேற்றுப்புலம்' புறப்பொருள் வெண்பாமாலையுரை, வெட்சிப் படலம், கஎ.
முனைஇ-வெறுத்து,௫௫;"அளை யகமுனைஇ" புறநானூறு, ௫உ; "முனைவுமுனிவாகும்" தொல் காப்பியம், உரியியல், கூo.

மூ

மூடை-பொதி,மூட்டை, கஅகூ; மூட்டையை மூடையென்பது பாண்டிநாட்டுவழக்கு.
மூதூர்-பழையவூர், உக௫.

மெ

மெழுக்கு-மெழுகு, ககூகூ.

மே

மேழகம்- யாடு, எஎ; திவாகரம்.
மேனி-நிறம், கசஅ; திவாகரம்.

மை

மை-குற்றம், க௫க; திவாகரம்.
மைந்தர்-ஆண்மக்கள் (திவாகரம் இளைஞர்(பிங்கலந்தை), கoக.

மொ

மொய்ம்பு-வலிமை, எஉ, உஎக.

மோ

மோடு-வயிறு, கச; பிங்கலந்தை.

யா

யாணர்-புதுவருவாய், ௩உ; தொல்காப்பியம்,உரியியல்அ௩.
யாழ்-ஓர் இசைக் கருவி, இது பேரியாழ், சகோடயாழ், மருத யாழ், செங்கோட்டியாழ் என நால்வகைப்படும், க௫கூ; திவா கரம்.

வ

வசை-குற்றம், க; திவாகரம்.
வடமலை-வடக்கேயுள்ள மலை, இமயம்மேருமுதலியன கஅஎ.
வடவர்-வட நாட்டி லுள்ளவர், ஆரியவரசர், உஎகூ.
வடிமணி-வடித்தமணி, உ௩உ; 'தெளிந்தமணி' என்பர் புறப் பொருள்வெண்பாமாலை யுரை காரர்,பொதுவியற்படலம்,கச.
வடு-குற்றம்,உoஅ;பிங்கலந்தை; தவறு, பரிபாடலுரை, உ.
வதியும்-தங்கும், க௫; திவாகரம்.
வம்பலர்-புதிதுவந்தோர், உசக; 'வம்பு' புதுமைப் பொருட்டா தல் திவாகரத்துட்காண்க.
வயங்கு-விளங்கும், உகக.
வயவர்-வீரர், உ௩உ.
வரி-நிறம், ௩அ; பிங்கலந்தை; வரிமணல்-கரிய நிறத்தினையு டையமணல், அதாவது: கடல் நீர்அரித்த கரியமணல், கூo.
வருடை-வருடைமான், க௩க;

குறுந்தொகையுள் "செவ்வரைச் செச்சை வருடைமான் மறி" எனவருதல் காண்க, ௧௮௭ ; திவாகரர் "வருடைசரபம் வரையாடாகும்" என்பர்.

வரை-மூங்கில், ௧௩௮ ; மலை, ௧௩௯.

வரைப்பு-எல்லை, ௧௮௩ ; புறநானூற்றுரை, ௩; மதில், ௨௬௯; திவாகரம்.

வலனேர்பு-'வலனெர்பு' வலமாக எழுந்து, ௬௭.

வழி-வழிவந்தார், மரபினர்,கால், ௨௮௧ ; பிங்கலந்தை.

வளவன்-சோழன், கரிகாற்சோழன், ௨௯௯.

வளி-காற்று, தென்றற்காற்று, ௧௫௧, ௨௭௨.

வறள்-வறண்ட, நீரற்ற, ௬௫ ; வறள் அடம்பு-வறண்டமணலிலேபடர்ந்த அடப்பங்கொடி, ௬௫.

வறுங்கூடு-வறிதாய்ப் போன குதிர், ௨௯௭.

வா

வாக்கிய-வடித்தொழுக்கிய, ௪௪; "வாக்கவுக்க தேக்கட்டேறல்" புறநானூறு, ௧௧௫.

வாய்-சாளரம், ௧௫௧ ; மெய்ம்மை, ௨0௮ ; திவாகரம்.

வாரி-வருவாய், 'விளைபொருள், ௧௯0 ; பிங்கலந்தை.

வாரிருங்கூந்தல்-வார் இருங்கூந்தல்:நீண்டகரியகூந்தல், ௨௧௯; தொல்காப்பியம்,உரியியல்,௧௯.

வால்-வெண்மை, ௧௧௮, ௧௯௫.

வாவி-குளம், ௨௪௪.

வாள்கழித்து-வாட்படைவீரரை ஓட்டி, ௨௨௬.

வி

விசிபிணி-வலித்துக் கட்டிய, ௨௯௩; "மாசறவிசித்தவார்புறு வள்பின்" என்னும்புறநானூற்றுரையையுங்காண்க, ௫0.

விசும்பு-வானம், ௩௪.

விடக்கு-இறைச்சி, ௧௭௬ ; திவாகரம்.

வியல்-அகலம், ௧௫௮ ; தொல்காப்பியம், உரியியல், ௬௬.

வியன்-அகலம், ௮ ; 'வியல்' திரிந்தது ; தொல். உரியியல், ௬௬.

விராய-கலந்த, கூடிய, ௬௮,

விரைஇ-கலந்து, கலவாநிற்ப, ௧௮௧.

விலக்கும்-தடைசெய்யும், ௨௫.

விலங்கு-எதிர்இருந்து தடுக்கும், ௨௬ ; இப் பொருட்டாதல் "விலங்குபகைகடிந்தகலங்காச் செங்கோல்" என்பதனுரையிலுங்காண்க,புறநானூறு,௨௩0.

விழவு-திருநாள், ௧௫௮.

விழா-திருவிழா, உ௫௫.
விளிப்ப-கூவ, அழைக்க, உ௫அ; திவாகரம்.

வீ

வீழ்-விழுது, அ௪; "சிதலை தின்னப்பட்ட வாலமரத்தை, மதலையாய் மற்றதனவீழ்ஊன்றியாங்கு" நாலடியார், தாளாண்மை, எ.

வெ

வெண்மீன்- வெள்ளி: சுக்கிரன், க.
வெரீஇ-அஞ்சி, எ௩.
வெளில்-யானைகட்டுந்தறி கஎஉ; "களிறிலவாகிய புல்லரைநெடுவெளில்" என்பதனுரையினுங் காண்க, புறநானூறு, கஉஎ; பிங்கலந்தை.
வெறி-வெறியாட்டு, வேலன் ஆடல், அணங்கு ஆட்டு, க௫௫; திவாகரம், பிங்கலந்தை. 'வெறி' வள்ளிக் கூத்தென்பர் புறப்பொருள் வெண்பாமாலை யுரைகாரர், பாடாண்படலம், ௬௯.
வேலன்-முருகபூசை பண்ணுமவன், வெறியாட்டாளன்.

வே

வேட்கும-ஓமஞ்செய்யும், வேள்விசெய்யும், ௫௪.
வேட்டு-விரும்பி, உ௭௪.
வேட்டம்-மீன்பிடித்தல், கஉ.
வேலாழி-கடல், ஆகுபெயராற் கடற்கரையை உணர்த்திற்று, கககூ; 'வேலாழி' கடலை உணர்த்துதல் "வில்லார் விழவினும் வேலாழி சூழுலகின்" என்னுந்திணைமாலை நூற்றைம்பது, ௬௨-ஆம் செய்யுளுரையிற் காண்க. வடமொழியுள் 'வேலா' என்னுஞ்சொற் கடற்கரையை உணர்த்தும்; இனி இதனை வேலா ஆழி எனப் பிரித்துக் கரையுங்கடலுமென வுரைப்பினும் ஆம்.
வைகல்-நாள், கஉ௪.